# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report
# 2019

උසස් අධ්‍යාපන, තාක්ෂණ හා නවෝත්පාදන අමාත්‍යාංශය

**උසස් අධ්‍යාපන**

உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு

**உயர் கல்வி**

Ministry of Higher Education, Technology and Innovations

**Higher Education**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# 2019

உயர் கல்வி



# செயலாளர் விடுக்கும் செய்தி

நம் வசமுள்ள மனித வளம் எழுத்தறிவில் பிராந்தியத்தில் உயர்ந்த ஓரிடத்தை வகிக்கின்றபோதும், அதன் உண்மையான பலனை அடைந்துகொள்வதற்கான காலம் தோன்றியுள்ளது. உயர்கல்வியானது ஒரு நாட்டின் முன்னோக்கிய பயணப் பாதையை அமைத்துக்கொடுக்கின்ற இயக்க விசையாகும்.

முதனிலை மற்றும் இரண்டாம்நிலைக் கல்வியானது கீழ் மட்டத்திலிருந்தே பரீட்சைகளை மையப்படுத்தியதாக பரிணாமமடைந்த ஒரு சூழமைவில், உயர்கல்வியின் செல்நெறியையும் சரிசெய்துகொள்ளும் குறைபாடுகளையும் கடந்த காலங்களில் நாம் அனுபவித்தோம். குறிப்பாக தொழிற்சந்தையினதும் உயர்கல்வியினதும் பொருந்தாத் தன்மைகள் அதிகளவில் எழுகின்ற நிலையில் வேலைவாய்ப்பின்மையையும் கல்வியறிவையும் நன்கு சரிசெய்துகொள்வதில் நாம் வெற்றி காணவில்லை. எனினும், படிப்படியாக அதன் சீராக்கங்கள் உருவாகிவரும் புதியதொரு சூழலில் நாட்டைப் பற்றிய புதுவித எதிர்பார்ப்புகளை நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உயர்கல்வி, புத்தாக்கம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலிய ஒன்றோடொன்று தொடர்புடைய கூறுகள் ஒன்றிணைவது உயர்கல்விக்கான புதுப் பாதைகள் திறந்துவிடப்படுவதற்கான நல்லறிகுறியாகும். அறிவாலும் மதிநுட்பத்தாலும் நன்கு போசிக்கப்பட்ட இளம் சந்ததியொன்றை எதிர்காலத்திற்காக அணிவகுக்கச்செய்வது மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களினதும் எதிபார்ப்பாகும். நாட்டை சுபீட்சத்தை நோக்கி இட்டுச்செல்லும் சுபீட்சத்தின் நோக்கு அரச கொள்கைகள் பலனளிக்கும் நாளில் உயர்கல்வியின் அசல் பங்களிப்பை முழு நாட்டுக்கும் எடுத்துக்காட்டலாம்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மாணவனொருவனை உயர்கல்வியின் ஊடாக உருவாக்குவதுடன் நின்றுவிடாமல், அம்மாணவனை சமூகத்தை மிகச் சரியாக நோக்குகின்ற, மானுடத்தை விளிக்கின்ற, சமூக கூருணர்வுள்ளவனாகவும் அனைத்துடனும் தொழிற்சந்தையுடனும் அச்சமின்றிப் போட்டியிடக்கூடிய நிலைக்கு மாற்றியமைப்பதே எமது நோக்கமாகும்.

**அநுர திசாநாயக்க**
செயலாளர்
உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு

## உள்ளடக்கம்


**1. அத்தியாயம் - நிறுவன பண்புக்கூறுகள்/ அமுல்படுத்துவதிலான பொழிப்பு............ 01 - 59**

1.1. உயர்கல்விப் பிரிவு பற்றிய அறிமுகம் ..................................................................... 01

1.2. உயர்கல்விப் பிரிவின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்......................... 01

1.3. உயர்கல்விப் பிரிவின் நிறுவனக் கட்டமைப்பு ........................................................... 01

1.4. உயர்கல்விப் பிரிவின் பதவியணி - 2019.12.31 அன்றுள்ளவாறு.......................... 02-03

1.5. துறைவாரியான செயலாற்றுகை ............................................................ 04-47

1.5.1. நிருவாகப் பிரிவு ......................................................................... 04-11

1.5.2. கணக்குப் பிரிவு..........................................................................12-16

1.5.3. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவு ............................................16-20

1.5.4. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு.................................. 21-25

1.5.5. அபிவிருத்திப் பிரிவு.................................................................... 26-34

1.5.6. திட்டமிடல் பிரிவு ...................................................................... 34-38

1.5.7.உள்ளக கணக்காய்வுப் பிரிவு ..................................................... 39-41

1.5.8. அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு............................................... 42-49

1.6 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்........................................50-57

1.6.2அமைச்சின் கீழியங்கும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்கள்.....58-59

**2. அத்தியாயம் - முன்னேற்றமும் தொலைநோக்கும் ....................................................... 60**

**3. அத்தியாயம் - 2019.12.31 இல் முடிவடையும் ஆண்டுக்கான முழுதுமளாவிய நிதிச் செயலாற்றுகை............................................................................................ 61-66**

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று ..........................................................................61-62

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று ............................................................................... 63

3.3 காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று.......................................................................64-65

3.4 ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதிகளை உபயோகப்படுத்துவதிலான செயலாற்றுகை ...... 65

3.5 நிதிசாராத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை ........................... 66

3.6 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை .......................................66

**4. அத்தியாயம் - செயலாற்றுகைக் குறிகாட்டிகள் .......................................................... 66**

**5. அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தியின் இலக்குகளை அடைந்துகொள்ளும் செயலாற்றுகை.................................................................................................. 66-68**

**6. அத்தியாயம் - மனிதவள பண்புக்கூறுகள்.............................................................. 68-71**

**7. அத்தியாயம் - ஒத்திசைவு அறிக்கை.................................................................... 72-80**

## 01. அத்தியாயம் - நிறுவன பண்புக்கூறுகள்/ அமுல்படுத்தலிலான பொழிப்பு

### 1.1 உயர்கல்விப் பிரிவு பற்றிய அறிமுகம்

பல்வேறு விடயத்துறைகளைக் கற்று வருடாந்தம் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெறும் மாணாக்கர்கள் மத்தியில் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் கல்வி கற்பதற்காக இணைந்துகொள்வோருக்கு வசதிகளை அளிப்பதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்வதும், சர்வதேச தொழிற்சந்தையை அணுகுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் முக்கிய நோக்குடன் உயர்கல்விக்கான வாய்ப்புகளைத் தேடிச் செல்பவர்களுக்கு உயர்கல்வியை வழங்குவதும் உயல்கல்வி அமைச்சின் முக்கிய பொறுப்பாகும். அந்நோக்கை அடைந்துகொள்ளும்போது உயர்கல்வி பெறுவதற்காக சேர்த்துக்கொள்ளப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் தொடங்கி, அரச பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்களையும் பிரிவுகளையும் நிறுவுவதன் ஊடாக கல்விக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன், அரச சார்பற்ற உயர்கல்வி முறைமையை ஒழுங்குபடுத்துதல் வரையான பல்வேறு கருமங்கள் அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன், உயர்கல்வித் துறையின் வினைத்திறனையும் விளைத்திறனையும் அதிகரித்தல், பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பட்டதாரிகளின் பண்புத்தரத்தை அதிகரிப்பதன் ஊடாக வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், ஆராய்ச்சிகளையும் புத்தாக்கங்களையும் அதிகரித்தல் முதலிய துறைகளுக்கான பங்களிப்பு வரை அமைச்சின் செயற்பொறுப்பு விரிவடைந்து செல்கிறது. 2019 ஆரம்பத்திலிருந்து 2019 நவம்பர் மாதம் 22 ஆந் திகதி வரை நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் கீழும், நவம்பர் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் கீழும் இச்செயற்பணி முன்னெடுக்கப்பட்டது.

### 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**தொலைநோக்கு**

உயர்கல்வியில் தலைசிறந்த சர்வதேச மையமொன்றாக இலங்கையை நிலைபெறச்செய்தல்.

**பணிக்கூற்று**

பெறுபேறுகளை நோக்காகக்கொண்ட கொள்கைகளையும் உபாயமுறைகளையும் வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும் ஊடாக இலங்கையின் உயர்கல்வி முறைமையில் மாணாக்கர்களையும் ஏனைய தரப்பினரையும் திருப்தியடையச் செய்தல்.

**நோக்கங்கள்**

- உயர்கல்விக்குப் போதிய அணுகுவாய்ப்புகளை ஏற்படுத்தல்.
- பண்புத்தரத்தையும் ஏற்புடைமையையும் அதிகரித்தல்.
- ஆராய்ச்சி விளைவுகளும் புத்தாக்கமும் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்தல்.
- தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவ முறைமையொன்றை முன்னேற்றுதல்.

### 1.3 உயர்கல்விப் பிரிவின் நிறுவனக் கட்டமைப்பு

உயர்கல்வித் துறையின் நிறுவனக் கட்டமைப்பு தொடர்பாக பரிசீலிக்கும்போது, அமைச்சின் கீழ் இயங்கும் மிக முக்கிய நிறுவனமான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) நேரடிக் கண்காணிப்பின் கீழ் 15 பல்கலைக்கழகங்களும் (பாரம்பரியமான 14 பல்கலைக்கழகங்களும், இலங்கை திறந்த பல்கலைக்கழகமும் இதில் அடங்கும்), 10 உயர்கல்வி நிறுவகங்களும், 08 பட்டப்பின்படிப்பு நிறுவகங்களும் காணப்படுகின்றன. அதேபோல் இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE), இலங்கை கடல்சார் பல்கலைக்கழகம், இலங்கை தொழில்துறை தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் என்பன அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன.

1.4 உயர்கல்விப் பிரிவின் பதவியணியினர் - 2019.12.31 அன்றுள்ளவாறு

| | ஊழியர் வகையீடு | பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் / மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | செயலாளர் | 1 | 1 | 0 |
| | | மேலதிக செயலாளர் (நிருவாகமும் நிதியும்) | 1 | 1 | 0 |
| | | மேலதிக செயலாளர் (அபிவிருத்தியும் புலமைப் பரிசில்களும்) | 1 | 1 | 0 |
| | | மேலதிக செயலாளர் (அரச சார்பற்ற உயர்கல்வி) | 1 | 1 | 0 |
| | | பிரதான நிதி அலுவலர் | 1 | 1 | 0 |
| | | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 1 | 1 | 0 |
| | | பணிப்பாளர் (பெறுகை) | 1 | 1 | 0 |
| | | பணிப்பாளர் (அரச சார்பற்ற உயர்கல்வி) | 1 | 1 | 0 |
| | | பணிப்பாளர் (அபிவிருத்தியும் புலமைப் பரிசில்களும்) | 1 | 1 | 0 |
| | | பணிப்பாளர் (திட்டமிடல்) | 1 | 1 | 0 |
| | | பணிப்பாளர் (மாணவர் கடன் பிரிவு) | 1 | 1 | 0 |
| | | பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) | 1 | 1 | 0 |
| | | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 1 | 1 | 0 |
| | | பிரதான கணக்காளர் | 1 | 0 | 1 |
| | | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| | | பொறியியலாளர் (சிவில்) | 1 | 1 | 0 |
| | | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தியும் புலமைப் பரிசில்களும் / திறன் அபிவிருத்தி) | 2 | 1 | 1 |
| | | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (அரச சார்பற்ற உயர்கல்வி) | 1 | 1 | 0 |
| | | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 2 | 2 | 0 |
| | | உதவிப் பணிப்பாளர் (மாணவர் கடன் பிரிவு) | 1 | 0 | 1 |
| | | உதவிப் பணிப்பாளர் (மாணவர் கடன் பிரிவு) | 1 | 1 | 0 |
| | | சட்ட அலுவலர் | 1 | 1 | 1 |
| | | கணக்காளர் | 1 | 1 | 0 |
| | | உதவிச் செயலாளர் | 2 | 0 | 2 |

| | ஊழியர் வகையீடு | பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்கள்/ மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (ii) | மூன்றாம் நிலை | நிருவாக அலுவலர் | 1 | 1 | 0 |
| | | மொழிபெயர்ப்பாளர் | 2 | 1 | 1 |
| | | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | 1 | 1 | 0 |
| | | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் (மாணவர் கடன் பிரிவு) | 2 | 0 | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | அபிவிருத்தி அலுவலர் | 80 | 31 | 49 |
| | | அபிவிருத்தி உதவியாளர் | 9 | 1 | 8 |
| | | வழங்கல் உதவியாளர் | 1 | 1 | 0 |
| | | தகவல் அலுவலர் | 1 | 1 | 0 |
| | | தொழில்நுட்ப அலுவலர் | 1 | 0 | 1 |
| | | அரச முகாமைத்துவ உதவியாளர் | 36 | 34 | 2 |
| | | அசையா புகைப்படப் பிடிப்பாளர் | 1 | 0 | 1 |
| | | புகைப்படப் பிடிப்பாளர் | 1 | 0 | 1 |
| | | வரவேற்பு அலுவலர் | 1 | 0 | 1 |
| | | புள்ளிவிவரவியல் அலுவலர் | 1 | 0 | 1 |
| (iv) | முதனிலை | அலுவலகப் பணி உதவியாளர் | 22 | 20 | 2 |
| | | சாரதி | 22 | 19 | 3 |
| | | கமரா இயக்குநரின் உதவியாளர் | 1 | 1 | 0 |
| மொத்தம் | | | 210 | 134 | 76 |


*2019.12.31 அன்றுள்ளவாறு 32 பட்டதாரிப் பயிலுநர்கள் இவ்வமைச்சிற்கு இணைக்கப்பட்டு பணியாற்றுகின்றனர்.*

## 1.5 துறைவாரியான செயலாற்றுகை

### 1.5.1 நிருவாகப் பிரிவு

உயர்கல்வியை மேம்படுத்தும் பொருட்டு நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவினால் ஆற்றப்படும் கருமங்களின் பண்புத்தரத்தை அதிகரிப்பதற்கும் பேணிச் செல்வதற்கும் அமைச்சின் குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்கும் ஏற்ற, உயர் தரம்வாய்ந்த, அதிசிறந்த ஆளணியொன்றைப் பேணிவருதல், தொடர்ச்சியாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் சேவைகளை வழங்குதல், ஏனைய நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பொன்றை ஏற்படுத்துதலும் பேணிவருதலும், பணியாள்தொகுதியினரின் நலன்புரி வசதிகளை மேம்படுத்துதல், அமைச்சின் முழுதளாவிய நிருவாகத்தை நெறிப்படுத்தல், மதிப்பீட்டை மேம்படுத்தல் ஆகிய கருமங்கள் நிருவாகப் பிரிவினால் ஆற்றப்படுகின்றன.

**நிறுவனக் கட்டமைப்பு**




#### 1.5.1.1 நிருவாகப் பிரிவின் செயற்பொறுப்பு

- அமைச்சுக்கு அன்றாடம் கிடைக்கப்பெறும் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளலும், அதன் சாதகத்தன்மையை உறுதிப்படுத்தலும்.
- அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவையில் சமர்ப்பித்தலும், உரிய தரப்பினருக்கு அதன் முடிவுகளை அறிவித்தலும்.
- வேறு அமைச்சுக்களின் மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- பாராளுமன்ற வினாக்கள், ஆலோசனைக் குழுப் பிரேரணைகள், பொது மக்களின் மனுக்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்தும் வேறு தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளையும் பிரேரணைகளையும் கோரிக்கைகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பிவைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- அமைச்சின் அலுவல்களுக்குத் தேவைப்படும் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடுசெய்தல்.
- அமைச்சின் அனைத்து வாகனங்களையும் பதிவுசெய்தல், பராமரித்தல், காப்புறுதி செய்தல், வருமான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அனைத்து குழாம் வாகனங்களுக்கான எரிபொருள் வழங்குதல்.
- அமைச்சின் உட்கட்டமைப்பு வசதிகளை வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் வழங்குதல், கட்டிடங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் பராமரிப்பு அலுவல்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளலும் அவற்றைப் பேணி வருதலுல்.
- அமைச்சின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் துப்புரவு நடவடிக்கைகளை உரிய முறையில் பேணி வருதல்.
- அமைச்சில் பணியாற்றும் அலுவலர்களின் அலுவலகமுறை தொலைபேசிக் கட்டண சிட்டைகளைத் தீர்த்தல்.
- அமைச்சில் பணியாற்றும் அலுவலர்களின் வெளிநாட்டுப் பிரயாணங்களுடன் தொடர்புபட்ட கடவுச்சீட்டு, வீசா, VIP, பிரயாணச் செலவு மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட அலுவல்களையும் நாட்டுக்கு வெளியே செல்வதுடன் தொடர்புடைய அலுவல்களையும் நிறைவேற்றுதல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் ஆண்டறிக்கைகளையும் கணக்கறிக்கைகளையும் உரிய தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- அமைச்சில் பணியாற்றும் அலுவலர்களின் விடுமுறை, மேலதிக நேர வேலை, பிரயாணச் செலவு என்பவற்றுடன் தொடர்புடைய அலுவல்களை மேற்கொள்ளல்.
- அமைச்சில் பணியாற்றும் அலுவலர்களின் இடர்க் கடன், ஆதனக் கடன், மோட்டார் சைக்கிள் கடன், பண்டிகை முற்பணக் கடன் என்பவற்றை வழங்குதல் தொடர்பான அலுவல்களையும் அக்ரஹார காப்புறுதி அலுவல்களையும் மேற்கொள்ளல்.
- மாதாந்த புகையிரத பருவச்சீட்டு, புகையிரத ஆணைச்சீட்டு (warrants) ஆகியவற்றை வழங்குதல்.
- தேர்தல்கள் நடாத்தப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றுடன் தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- உயர்கல்விப் பிரிவு பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்புகள், இணைத்தல்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், ஓய்வுறுத்தல்கள்.
- உயர்கல்வி கௌரவ அமைச்சரினதும், இராஜாங்க அமைச்சரினதும் பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்புகள், இணைத்தல்கள், சேவை முடிவுறுத்தல்கள்.
- ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைகளைத் தயாரித்தல்.
- உயா்கல்விப் பிரிவின் கீழுள்ள நிறுவனங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயா்கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட அலுவலா்கள் உட்பட பல்கலைக்கழக விரிவுரையாளா்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டாா் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- பல்கலைக்கழகங்களிலும் உயா்கல்வி நிறுவகங்களிலும் கல்விசாரா பணியாட்டொகுதியினரை நியமித்தலும் பதவி வெற்றிடங்களை நிரப்புதலும்.
- பல்கலைக்கழகங்களுக்கு ஒப்பந்த/தற்காலிக அடிப்படையில் வெளிநாட்டு விரிவுரையாளா்களை ஆட்சோ்ப்புசெய்வதற்கு அனுமதி வழங்குதல்.
- பல்கலைக்கழகங்களின் கல்விசாரா பணியாட்டொகுதியினரை இரண்டாம்நிலை அடிப்படையில் தற்காலிகமாக/ நிரந்தரமாக விடுவித்தல்.
- பல்கலைக்கழக முறைமையின் கொடுப்பனவுகள் சம்பந்தமாக பொதுத் திறைசேரியுடன் ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழக கல்விசாா் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியினரின் சம்பள முரண்பாடுகள் சம்பந்தமான அமைச்சின் சிபாரிசுகளை வழங்குதல்.
- வெளிநாட்டுதவிகள் மற்றும் கடன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் கருத் திட்டங்களுக்கான பணியாட்டொகுதியினரை அனுமதித்துக்கொள்ளலும் ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

### 1.5.1.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 876 ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பான பல்கலைக்கழகங்களதும் நிறுவகங்களதும் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

2019 ஆம் ஆண்டில் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் நிறுவகங்களுக்கும் 2,014 பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன

| **பல்கலைக்கழகம் / நிறுவகம்** | **அனுமதித்த பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 56 |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 305 |
| மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 151 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 180 |
| றுஹுணு பல்கலைக்கழகம் | 89 |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 58 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 40 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 62 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 93 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 227 |
| இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | 82 |
| இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 70 |
| இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் | 10 |
| கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் | 74 |
| இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் | 15 |
| இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 45 |
| அழகியற்கலை கற்கைக்கான சுவாமி விபுலானந்தா கல்லூரி | 24 |
| தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம் | 01 |
| தேசிய மானிடவியல் மற்றும் சமூகவியல் உயர்கல்விக்கான தேசிய நிலையம் | 01 |
| மனித வள அபிவிருத்தி நிறுவகம் | 06 |
| விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் | 22 |
| உயிரின இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப நிறுவகம் | 14 |
| தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 04 |
| கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவனம் | 01 |
| மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 21 |
| விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 10 |
| இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் | 35 |
| பௌத்த மற்றும் பாளி பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 02 |
| தொழில்நுட்ப நிறுவகம் - மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 51 |
| கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம் | 05 |
| திருகோணமலை வளாகம் | 130 |
| களனிப் பல்கலைக்கழகம் | 96 |
| சுதேச மருத்துவ நிறுவகம் | 34 |
| **மொத்தம்** | 2,014 |

### 1.5.1.3 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த அமைச்சின் அலுவலர்கள் 2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன், அமைச்சின் அனைத்து அலுவலர்களுக்கும் உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவு (ரூ.) |
|---|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 14 | 105 | 821,000.00 |

**வெளிநாட்டுப் பயிற்சி/ கருத்தரங்கு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட நாடு | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவு |
|---|---|---|---|
| சீனா | 02 | 05 | 4,006 ஐ.அ.டொ. |
| மலேசியா | 02 | 02 | 925 ஐ.அ.டொ. |
| துருக்கி | 01 | 01 | 200 ஐ.அ.டொ. |
| கொரியா | 01 | 01 | 240 ஐ.அ.டொ. |
| நேபாளம் | 01 | 01 | 300 ஐ.அ.டொ. |
| பாகிஸ்தான் | 01 | 01 | 520 ஐ.அ.டொ. |
| தாய்லாந்து | 01 | 01 | 340 ஐ.அ.டொ. |
| மாலைதீவுகள் | 02 | 02 | 495 ஐ.அ.டொ. |
| சுவீடன் | 01 | 01 | 4,235 ஐ.அ.டொ. |

### 1.5.1.4 சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் 2017.06.01 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2016(II) ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை மற்றும் 2018.02.15 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2018 ஆம் இலக்கச் சுற்றறிக்கை, 2018.06.08 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2018(I) ஆம் இலக்கச் சுற்றறிக்கை ஆகியவற்றிக்கு அமைவாக இந்த அமைச்சினால் 2019 ஆம் ஆண்டு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதற்கமைய, அரசாங்க சேவையில், இந்த அமைச்சின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் காணப்படும் பல்கலைக்கழகங்கள், ஏனைய பட்டமளிப்பு நிறுவகங்களின் கல்விசார் பணியாட்டொகுதிகளில், கல்விசாரா பணியாட்டொகுதிகளில் சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த நிறைவேற்றுநர் தர பதவியில் பணியாற்றும் தகைமைபெற்ற அலுவலர்களுக்காக மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளின் கீழ் 2019 ஆம் ஆண்டு சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரங்கள் பற்றிய விபரம் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பல்கலைக்கழகம் / நிறுவகம் | நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு | உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு | முழு மொத்தம் |
|---|---|---|---|
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 135 | 15 | 150 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 90 | 05 | 95 |
| களனிப் பல்கலைக்கழகம் | 88 | 10 | 98 |
| ருஹுணு பல்கலைக்கழகம் | 81 | 03 | 84 |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 115 | 08 | 123 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 41 | 12 | 53 |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 48 | 05 | 53 |
| மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 59 | 02 | 61 |
| இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 31 | 07 | 38 |
| இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 22 | 04 | 26 |
| இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் | 48 | 04 | 52 |
| இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | 28 | 03 | 31 |
| இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 37 | - | 37 |
| இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் | 31 | - | 31 |
| கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் | 23 | 04 | 27 |
| இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 06 | - | 06 |
| இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 18 | 03 | 21 |
| சுதேச மருத்துவவியல் நிறுவகம் | 26 | 01 | 27 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 02 | - | 02 |
| வவுனியா வளாகம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 03 | - | 03 |
| கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத நிறுவகம் | 06 | 06 | 12 |
| இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் | 06 | - | 06 |
| ஸ்ரீபாளி வளாகம் - கொழும்புப் பல்கலைக்கழகம் | 04 | - | 04 |
| தொழில்நுட்ப நிறுவகம் - மொரட்டுவை பல்கலைக்கழகம் | 06 | 01 | 07 |
| தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 02 | - | 02 |
| மனிதவள அபிவிருத்தி நிறுவகம் | 01 | - | 01 |
| சுவாமி விபுலானந்தா அழகியற்கலை கற்கை நிறுவகம் | 01 | 01 | 02 |
| பௌத்த மற்றும் பாளி பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 01 | - | 01 |
| ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 01 | - | 01 |
| தேசிய சனசமூக நீர்வழங்கல் திணைக்களம் | 01 | - | 01 |
| உயிரின இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப நிறுவகம் | 01 | - | 01 |
| நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு | 03 | - | 03 |
| தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 65 | - | 65 |
| **முழு மொத்தம்** | **1,031** | **94** | **1,125** |

### 1.5.1.5 உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்கள்

அமைச்சின் அதிகாரிகள் உட்பட உத்தியோகபூர்வ கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளை பூர்த்திசெய்த பல்கலைக்கழக முறைமையின் உத்தியோகத்தர்களுக்கு 2019 ஆம் ஆண்டில் கீழ்க்காணுமாறு உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

| அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை | பல்கலைக்கழக முறைமையில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| - | 26 | 26 |

### 1.5.1.6 2019 ஆம் ஆண்டில் இலங்கைப் பிரஜைகள் அல்லாத வருகைதரு விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

| பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் | எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 05 |
| மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 02 |
| களனிப் பல்கலைக்கழகம் | 01 |
| **மொத்தம்** | **08** |

### 1.5.1.7 2019 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், பாராளுமன்ற வினாக்கள், பொது மனுக்குழு

| விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் | 93 |
| 2019.12.31 வரை தீர்மானங்கள் எடுக்கப்படாத அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் | 21 |
| பதிலளிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற வினாக்கள் | 10 |
| பதிலளிக்கப்பட்டுள்ள நிலையியற் கட்டளைகளின் கீழ் வினவப்படும் வினாக்கள் | 03 |
| 2019 ஆம் ஆண்டில் பொது மனுக் குழுவிலிருந்து கிடைக்கப்பெற்ற கடிதங்கள் | 05 |
| 2019 ஆம் ஆண்டில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பொது மனுக் குழுக் கடிதங்கள் | 05 |

### 1.5.1.8 தகவல் சட்டத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல்

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரகாரம் பொது மக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் கோரல்கள் சம்பந்தமாக 2019 ஆம் ஆண்டில் செயலாற்றப்பட்ட விதம் கீழே ஒரு பொழிப்பாகத் தரப்பட்டுள்ளது.

| ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை | வேறு நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டில் மனுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 39 | 22 | 17 | 07 |

### 1.5.1.9 பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவகங்களும் தொடர்பான ஆண்டுக்குரிய கணக்குகளும் நிருவாக அறிக்கைகளும்

உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் உயர்கல்விப் பிரிவின் கீழுள்ள பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்கள் உட்பட 39 நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளையும் கணக்கறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

| ஆண்டு | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 2019 | கலந்துரையாடியதன் பின்னர் மும்மொழிகளிலும் அனுப்புவதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள ஆண்டறிக்கைகள் | 09 |
| | அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆண்டறிக்கைகள் | 12 |
| | அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆண்டறிக்கைகள் | 10 |
| | பாராளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆண்டறிக்கைகள் | 08 |
| **மொத்தம்** | | **39** |

### 1.5.1.10 பாதுகாப்பு மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகள் உட்பட அனைத்து பராமரிப்புச் செலவுகள்

| பணி | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட் செலவும் செலுத்தித் தீர்க்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களும் |
|---|---|
| பாதுகாப்புச் சேவைகள் | ரூ. 3,983,820.49 |
| துப்புரவேற்பாட்டுச் சேவைகள் | ரூ. 4,424,474.65 |
| தபால் | ரூ.347,494.00 |
| இயந்திரங்கள், இயந்திர சாதனங்கள் பராமரிப்புச் செலவுகள் | ரூ.824,749.85 |
| கட்டிடங்கள், நிர்மாணங்களின் பராமரிப்புச் செலவுகள் | ரூ.1,587,530.97 |
| மின்சாரம் | ரூ.6,081,379.08 |
| நீர் | ரூ.362,581.90 |
| அலுவலக தொலைபேசிகளும் தொலைநகல்களும் | 950 பற்றுச்சீட்டுக்கள் |
| அமைச்சின் இணையத் தொடர்புகள் | 48 பற்றுச்சீட்டுக்கள் |

### 1.5.1.11 போக்குவரத்து வசதிகளை வழங்குதல்

2019 ஆம் ஆண்டில் அமைச்சுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குதல்

| பணி | 2019 ஆம் ஆண்டில் செலவு (ரூ.) |
|---|---|
| குழாம் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குதலும் மேலதிக எரிபொருள் வழங்குதலும் | 1,928,031.55 |
| வாகனங்களைப் பழுதுபார்த்தல் | 4,868,268.94 |
| உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவுகளைச் செலுத்தல், மேலதிக எரிபொருளை வழங்குதல் மற்றும் எரிபொருள் பற்றுச்சீட்டுக்களை மீள்நிரப்பல்செய்தல். | 3,670,262.80 |
| வாகனக் காப்புறுதி மற்றும் உரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமான அலுவல்கள் | 1,316,866.36 |
| புகைப் பரிசோதனை | 29,700.00 |
| சாரதிகளுக்கான மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் பிரயாணச் செலவுகளும் | 3,730,256,51 |
| வாகனங்களுக்கான ரயர், ரியூப், பற்றரி மற்றும் ஏனைய உதிரிப் பாகங்களை வழங்குதல் | 956,998.50 |
| **மொத்தம்** | 16,500,384.66 |

## 1.5.1.12 கடன்கள்

2019 ஆம் ஆண்டில் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடர்க் கடன் மற்றும் முற்பணக் கடன் பற்றிய விபரங்கள்


| கடன் / முற்பண வகை | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்டுள்ள தொகை (ரூ.) |
|---|---|---|
| இடர்க் கடன் | 51 | 6,641,150.00 |
| விசேட முற்பணம் | 23 | 92,000.00 |
| பண்டிகைக் கால முற்பணம் | 72 | 720,000.00 |

## 1.5.1.13 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

| தொடர் இல. | செயற்பாடு | செயற்பாட்டை மேற்கொண்ட தினம் | விபரம் |
|---|---|---|---|
| 1. | 2019 புத்தாண்டில் கடமை அலுவல்களை ஆரம்பிக்கும் வைபவம் | 2019.01.01 | - |
| 2. | அமைச்சினுள் விளைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் முக்கியத்துவமும் அதன் பயன்களும் குறித்து அமைச்சின் செயலாளரினால் அமைச்சின் உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்படல் | 2019.01.28 | ஒவ்வொரு பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் விளைத்திறன் வட்டங்களை நிறுவி குறித்த வட்டங்களின் தலைவர்கள் ஊடாக ஒவ்வொரு விரிவின் விளைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்ளல். |
| 3. | விளைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய முக்கிய விடயங்கள் குறித்து முன்னாள் அமைச்சின் செயலாளர் திரு. உபாலி மாரசிங்க அவர்களினால் அமைச்சின் உத்தியோகத்தர்கள் அறிவுறுததப்படல். | 2019.02.27 | விளைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி அமைச்சின் வளவை விருப்பமான, மனதிற்கு இனியதோர் இடமாக மாற்றுவதற்கும், உத்தியோகத்தர்களின் விளைத்திறனைக் கட்டியெழுப்புவதற்கும் சேவைபெறுநர்களுக்கு தமது சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் வசதியாக விதத்தில் அமைச்சு ஒழுங்கமைக்கப்பட்டு வருகிறது. |
| 4. | போதைப்பெருள் தடுப்பு வாரத்திற்கு இணையாக போதைப்பொருள்கள் மற்றும் அற்கஹோல் பற்றிய தகவல் நிலையத்தின் ஆலோசகரொருவரை வரவழைத்து போதைப்பொருள் தடுப்பு பற்றிய சொற்பொழிவொன்றை நிகழ்த்துதல் | 2019.06.24 | போதைப்பொருள் தடுப்பு வாரத்திற்கு இணையாக அமைச்சில் போதைப்பொருள் தடுப்பு குழுவொன்றை நிறுவி அமைச்சில் போதைப்பொருள் மற்றும் மதுபானம் பாவித்தல் நிறுத்தப்பட்டுள்ளது. |
| 5. | விளைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல் பற்றிய விளைத்திறன் வட்டங்களின் தலைவர்களுக்கும் பிரிவுத் தலைவர்களுக்கும் விளைத்திறன் செயலகத்தின் உத்தியோகத்தர்களினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்படல். | 2019.08.20 | விளைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி அமைச்சு வளவை விருப்பமான மனிதிற்கு இனியதோர் இடமாற மாற்றுவதற்கும் உத்தியோகத்தர்களின் வினைத்திறனைக் கட்டியெழுப்புவதற்கும் சேவை பெறுநர்களுக்கு தமது சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் வசதியானவாறு அமைச்சு ஒழுங்கமைக்கப்பட்டு வருகிறது. |
| 6. | இலஞ்சத்தையும் ஊழலையும் இல்லாதொழித்தல் பற்றி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 2019.10.29 | இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தரை வளவாளராக வரவழைத்து அனைத்து அமைச்சு உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. |

## 1.5.2 கணக்குப் பிரிவு

**நிறுவனக் கட்டமைப்பு**




### 1.5.2.1 உயர்கல்வித் துறைக்கான நிதி முதலீடு

2019 ஆம் ஆண்டில் நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பு இல.166 இன் கீழ் உயர்கல்விப் பிரிவிற்கு **19.73** பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் **14.68** பி.ரூ. தொகை செலவிடப்பட்டு **74%** நிதிசார் முன்னேற்றமொன்று அடையப்பெற்றுள்ளது.

**2019.12.31 அன்றுள்ளவாறான மீண்டெழும் செலவுகளின் பொழிப்பு**

*(ரூ.மி.)*

| விடயம் / விபரம் | 2019 தேறிய நிதிஒதுக்கீடு | செலவு | நிதி ஒதுக்கீட்டு மீதி | நிதிஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| **நிருவாக மற்றும் தாபன சேவைகள்** | **407.00** | **203.58** | **203.42** | **50.02** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 81.40 | 77.23 | 4.17 | 94.9 |
| பிற மீண்டெழும் செலவினம் | 325.60 | 126.35 | 199.25 | 38.8 |
| உயர்கல்வியின் பண்புத்தர அபிவிருத்திக்கு நிறுவன ரீதியான பங்களிப்பு | **1,583.00** | **1,574.69** | **8.31** | **99.5** |
| **மொத்தம்** | **1,990.00** | **1,778.27** | **211.73** | **89.4** |

**2019.12.31 அன்றுள்ளவாறான மூலதனச் செலவுகளின் பொழிப்பு**

*(ரூ.மி.)*

| விடயம் / விபரம் | 2019 தேறிய நிதிஒதுக்கீடு | செலவு | நிதி ஒதுக்கீட்டு மீதி | நிதிஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| **நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்** | **2,276.65** | **1,061.33** | **1,215.32** | **46.6** |
| புனர்வாழ்வளிப்பும் முன்னேற்றுதலும் | 25.10 | 25.10 | 0.00 | 100.0 |
| மூலதனச் சொத்துக்கள் கையகப்படுத்தல் | 24.97 | 24.97 | 0.00 | 100.0 |
| ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.00 | 1.00 | 0.00 | 100.0 |
| 60 விடுதிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் | 511.00 | 504.83 | 6.17 | 98.79 |
| பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கான வட்டியில்லா மடிக்கணினிக் கடன் கருத்திட்டம் | 200.00 | 122.25 | 77.45 | 61.1 |
| றுஹுணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 12 மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டம் | 230.58 | 30.41 | 200.17 | 13.2 |
| ஆயுர்வேத மருத்துவவியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தை நிறுவும் கருத்திட்டம் | 10.00 | 7.00 | 3.00 | 70.0 |
| களனிப் பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் கற்றல் நிலையமொன்றை நிறுவும் கருத்திட்டம் | 20.00 | 3.00 | 17.00 | 15.0 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிறுவும் கருத்திட்டம் | 339.00 | 18.00 | 321.00 | 5.3 |
| கராபிட்டிய போதனா மருத்துவமனையில் பேராசிரியர்களின அலகொன்றை நிறுவும் கருத்திட்டம் | 50.00 | 0 | 50.0 | 0.0 |
| றுஹுணு பல்கலைக்கழகத்தில் சமுத்திரவியல் மற்றும் கப்பல்துறை அலுவல் நிலையமொன்றை நிறுவும் கருத்திட்டம் | 125.00 | 50.18 | 74.82 | 40.1 |
| தராதரப் பாதுகாப்புக் கவுன்சில் ஒன்றை நிறுவும் கருத்திட்டம் | 10.00 | 0 | 10.00 | 0.0 |
| கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் கிராமிய அலுவல்கள் கற்கை நிறுவகத்திற்கான உதவி | 50.00 | 38.00 | 12.00 | 76.0 |
| கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு 17 மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டம் | 80.00 | 79.95 | 0.05 | 99.9 |
| வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் | 600.00 | 156.63 | 443.37 | 26.1 |
| **உயர்கல்வி அபிவிருத்திக் கருத்திட்டங்கள்** | **13,788.37** | **10,829.08** | **2,959.29** | **78.5** |
| சுனாமி புனரமைப்புக் கருத்திட்டம் | 96.00 | 63.28 | 32.72 | 65.9 |
| பொறியியல் பீடத்தை நிறுவுதல் - கிளிநொச்சி | 5.93 | 5.93 | 0.00 | 100.0 |
| விவசாய பீடத்தை நிறுவுதல் - கிளிநொச்சி | 4.04 | 4.04 | 0.00 | 100.0 |
| றுஹுணு பல்கலைக்கழக கலையரங்கை நிர்மாணித்தல் | 19.46 | 19.46 | 0.00 | 100.0 |
| வசோ ஏசியா கருத்திட்டம் | 15.53 | 15.53 | 0.00 | 100.0 |

| விடயம் /விபரம் | 2019 தேறிய நிதிஒதுக்கீடு | செலவு | நிதி ஒதுக்கீட்டு மீதி | நிதிஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் முன்னேற்றம் மூ |
|---|---|---|---|---|
| ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம | 1551.81 | 1480.48 | 71.33 | 95.4 |
| உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி துரிதப்படுத்தல் கருத்திட்டம் | 2800.00 | 2580.51 | 219.49 | 92.2 |
| கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கான சுகாதாரப் பாதுகாப்புக்கான கல்வியியற் கல்லூரியின் கட்டிட நிர்மாணக் கருத்திட்டம் | 865.50 | 723.72 | 141.78 | 83.6 |
| வயம்ப பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 264.77 | 14.50 | 250.27 | 5.5 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திக் கருத்திட்டம் | 2279.50 | 184.48 | 2095.02 | 8.0 |
| பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம் | 12.58 | 12.58 | 0.00 | 100.0 |
| கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும் மருத்துவ உபகரணங்கள் வழங்கும் கருத்திட்டம் | 338.78 | 257.80 | 80.98 | 76.1 |
| சுவாமி விபுலானந்தா அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் கட்டிட நிர்மாணக் கருத்திட்டம் | 10.00 | 0.00 | 10.00 | 0.0 |
| மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்திற்காக பெறப்பட்ட கடனை செலுத்தித் தீர்த்தல் | 5500.00 | 5442.31 | 57.69 | 98.9 |
| கிழக்கு மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களுக்கு உபகரணங்களை வழங்கும் திட்டம் | 764.61 | 739.51 | 25.10 | 96.7 |
| பால்நிலை சமூகநிலை சம்பந்தமான பொருளாதாரப் பகுப்பாய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரிக்கும் கருத்திட்டம் - பேராதனைப் பல்கலைக்கழகம் | 3.82 | 3.82 | 0.00 | 100.00 |
| பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நோர்வே உதவி ஆராய்ச்சிக் கருத்திட்டம் | 2.09 | 2.09 | 0.00 | 100.0 |
| யுனிசெப் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 8.76 | 8.76 | 100.0 | 100.0 |
| PFIZER – Mumbai கருத்திட்டம் - பேராதனைப் பல்கலைக்கழகம் | 4.36 | 4.36 | 0.00 | 100.0 |
| Nephros International கருத்திட்டம் - பேராதனைப் பல்கலைக்கழகம் | 4.43 | 4.43 | 0.00 | 100.0 |
| **உயர்கல்வியின் பண்புத்தர விருத்திக்கான தாபனப் பங்களிப்பு** | **1,677.00** | **1,013.07** | **663.93** | **60.4** |
| இலங்கை உயர் தொழினுட்பக் கல்வி நிறுவகம் | 1,097.00 | 606.00 | 491.00 | 55.2 |
| இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் | 300.00 | 184.17 | 115.83 | 61.4 |
| இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் | 280.00 | 222.90 | 57.10 | 79.6 |
| **மொத்தம் (மூலதனச் செலவுகள்)** | **17,742.02** | **12,903.48** | **4,838.54** | **72.7** |

**2019 ஆம் ஆண்டில் கட்டுநிதி பெறுவனவுகள் பற்றிய விபரம்**

| கட்டுநிதிக் கணக்கு இல. | திறைசேரி மற்றும் பிற நிதி மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுநிதி அளவு (ரூ.) | செலவிடப்பட்ட தொகை (ரூ.) | கட்டுநிதி பயன்பாட்டின் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| 7002/0000/00/099/00/0019000 | 6,966,036,228 | 6,966,036,228 | 100 |
| 7003/0000/00/0090/00/0019000 | 799,000,000 | 796,502,461 | 99 |

**அரசாங்க அலுவலர்களுக்கான முற்பண 'B' கணக்கு**

| | செலவு (ரூ.) | பெறுவனவு (ரூ.) | பற்று மீதி (ரூ.) |
|---|---|---|---|
| 2019.12.31 அன்றுள்ளவாறான பெறுமானங்கள் | 9,167,839.70 | 5,391,266.56 | 18,771,581.15 |

- **கணக்குப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட நிதி மற்றும் கணக்கீட்டுப் பணிகள்**

| | பணி | அமுல்படுத்தப்படவேண்டிய திகதி/காலப்பகுதி | அமுல்படுத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | நி.பி. 135 இன்படி நிதி அதிகாரத்திற்கான ஆணையை ஒப்படைத்தல் | 2019 ஆம் ஆண்டிற்குரிய அதிகாரவாணை செயலாளரின் ஒப்பத்துடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |
| 02 | ரூ.500,000/- இற்குக் கூடிய மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்கு அவசியமான அங்கீகாரத்தைப் பெறல் | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின்படி அதிகாரவாணையை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 03 | 2019 வருடாந்தக் கணக்கைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | 2020.02.28 ஆம் திகதிக்கு முன்பு | 2020.02.28 |
| 04 | **2019** பொது வைப்புக் கணக்கைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | 2020.02.28 ஆம் திகதிக்கு முன்பு | 2019.02.28 |
| 05 | **2019** அரசாங்க அலுவலர் கடன் முற்பண 'பீ' கணக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | 2020.02.28 ஆம் திகதிக்கு முன்பு | 2029.02.28 |
| 06 | வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | 2020.02.17 ஆம் திகதிக்கு முன்பு | 2019.02.14 |
| 07 | வங்கி இணக்கக் கூற்றைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் | அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு | அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு |


- 2019 ஆம் ஆண்டு தொடர்பில் அமைச்சுக்குரிய அனைத்துச் சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பொருட்கள் கணக்கெடுப்பின்போது அடையாளம் காணப்பட்ட பொருட்களைக் கையுதிர்ப்புச்செய்யும் நடவடிக்கைகளும் 2019 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 07 கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைக்கப்பெற்றதுடன் குறித்த 07 ஐயவினாக்களுக்கும் உரிய காலத்தில் பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- கணக்குப் பிரிவினால் மாதாந்தக் கணக்குகளின் பொழிப்புகளை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல், வருடாந்த நிதிஒதுக்கீடுகளை ஒதுக்கிக் கொடுத்தல், மாதாந்த கட்டுநிதித் தேவைகளின்படி திறைசேரியிடமிருந்து கட்டுநிதியைப் பெற்றுக்கொண்டு குறித்த நிறுவனங்களுக்கு விநியோகித்தல், உப கட்டுநிதிகளைப் பேணிவருதல், கட்டுநிதி சீர்படுத்தலை மேற்கொள்ளல், பொது வைப்புக் கணக்குகளையும் கடன் முற்பணக் கணக்குகளையும் பேணிவருதல், செலவுறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவுசெய்யும் பணிகள், சிறாப்பர் நடவடிக்கைகள் முதலிய நாளாந்த மற்றும் மாதாந்தப் பணிகள் காலத்திற்கேற்ப தாமதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளன.

**கணக்குப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட அரசாங்கப் பெறுகைச் செயன்முறை பற்றிய பயிற்சிச் செயலமர்வு**

பல்கலைக்கழகங்களதும் உயர்கல்வி நிறுவகங்களதும் பெறுகைச் செயன்முறையின்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து பல்கலைக்கழகங்களதும் உயர்கல்வி நிறுவகங்களதும் பெறுகைக் குழு உறுப்பினர்களதும் பெறுகை உத்தியோகத்தர்களதும் அறிவை விருத்திசெய்வதற்கான ஒருநாள் செயலமர்வொன்று 2019 மார்ச் மாதம் 08 ஆந் திகதி இலங்கை மத்திய வங்கியின் பயிற்சி நிறுவகத்தில் நடைபெற்றது. அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர்கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள், துணைவேந்தர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களின் உத்தியோகத்தர்கள் இதில் பங்குபற்றினர். உயர்கல்வி நவீனமயப்படுத்தலையும் அபிவிருத்தியையும் துரிதப்படுத்தும் (உலக வங்கி உதவி) கருத்திட்டத்தினால் ஆற்றல் விருத்திப் பணியின் கீழ் நிதிப் பங்களிப்பு வழங்கப்பட்ட இச்செயலமர்வுக்கான வளப் பங்களிப்பு, பெறுகை பற்றிய பிரபல விரிவுரையாளரான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் சிரேட்ட ஆலோசகரான திரு. அநுர கொக்குகமகே அவர்களினால் வழங்கப்பட்டது.

## 1.5.3. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவு

**நிறுவனக் கட்டமைப்பு**




### 1.5.3.1 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவின் பணிகள்

- அனைத்து பெறுகை சார்ந்த அலுவல்களையும் 2006 பெறுகைக் கைந்நூல், பெறுகை வழிகாட்டு நெறிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள், 2019 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டு நிதிஒதுக்குகளின்படி நிறைவேற்றுதல்.
- பெறுகைத் திட்டத்திற்கு அமைவாகவும் வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின்படியும் வினைத்திறனாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் குறித்த சேவைகளை வழங்குதல்.
- அரச பல்கலைக்கழகங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதித்து அனுப்பிவைக்கப்படும் கருத்திட்ட முன்மொழிவுகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பித்தல்.
- இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழினுட்பக் கல்வி நிறுவகம் ஆகிய நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பித்தல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்ற கருத்திட்ட முன்மொழிவுகளை அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்காக சமர்ப்பிப்பதற்கு அவசியமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல்.
- கருத்திட்டங்களுக்குரிய தரவரிசை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக் கழகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் எழுத்தாவணங்களை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழுவிற்கு சமர்ப்பித்தல்.

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணியப் பட்டியல்களை (BOQ) உரிய பல்கலைக்கழகத்திற்கு அனுப்புதல்.
- 2019 ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல்.
- 2019 பெறுகைக் கருமங்களை ஆரம்பிப்பதற்கு மேலதிக செயலாளர் (நிருவாகமும் நிதியும்) மற்றும் செயலாளரின் முன் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- அனைத்துப் பிரிவுகளுக்கும அவசியாமன பொருள்களையும் சேவைகளையும் தேசிய பெறுகைச் செயன்முறை ஊடாக கட்டளை செய்து வழங்குதல்.
- அனைத்துப் பெறுகைக் கருமங்களையும் 2006 பெறுகைக் கைந்நூல், வழிகாட்டுநெறிக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் 2019 ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டு நிதிஒதுக்கீடுகளின்படி நிறைவேற்றுதல்.

## 1.5.3.2 2019 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவினால் ஆற்றப்பட்ட செயற்பணிகள்

### 01. சேவை பெறுகைகள்

**சேவை பெறுகைகள் தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட பணிகள்**

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிப்பதற்கு அவசியமான துறைசார் தொழில்வாண்மையினரதும் நிபுணத்துவ அறிவுள்ளவர்களதும் பெயர்களை அனுமதிக்காக சமர்ப்பித்தல்.
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுக்கள் மற்றும் அமைச்சின் பிரதான பெறுகைக் குழுக்களதும் கூட்டங்களுக்கு அவசியமான பெறுகை ஆவணங்களைத் தயாரித்து வழங்குதல்.
- விலைமனுக்களைத் திறக்கும் குழுக்களை நியமித்தல் மற்றும் குறித்த திகதியில், குறித்த நேரத்திற்கு விலைமனுக்களைத் திறப்பதற்கு உதவுதல்.
- விலைமனுக்களை அட்டவணைப்படுத்தி உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிடம் சமர்ப்பித்தல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சுகளை பெறுகைக் குழுவுக்கு அனுப்பிவைத்து இறுதி முடிவுகளைப் பெற்று ஒப்பந்தப் பணிகளை வழங்குதல்.

### 02. ஆலோசனைச் சேவைகள்

அநேகமான பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் கருத்திட்ட நிர்மாணப் பணிகளுக்கு ஒப்பந்தமளிக்கப்பட்டதன் பின்னர் குறித்த நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் அப்பணிகளை நிறைவுசெய்வதற்கும் நீண்ட காலம் எடுக்கும் சந்தர்ப்பங்களும், அத்தகைய கருத்திட்டங்களுக்கான காலமும் கிரயமும் இரட்டிப்பான சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அவை குறித்து ஆராயும்போது ஆலோசகர் ஒருவரைத் தெரிவுசெய்யும் சிறு விடயத்தில்கூட மிக நீண்டதொரு காலம் செலவிடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இதற்குரிய தீர்வாக அமைச்சினால் பல்கலைக்கழக முறைமையின் நிர்மாணப் பணிகளை வகைப்படுத்தி பெறுகைச் செயன்முறையின் அடிப்படையில் முன்மொழிவுகளையும் விலைகளையும் கோரி பல்கலைக்கழகங்களுக்காக அனுமதிக்கப்படும் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு ஆலோசகர்களின் பட்டியலொன்றைத் தயாரித்து பல்கலைக்கழகங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கருத்திட்டங்களுக்கான பெறுகை நடவடிக்கைகள் சார்பாக அதிக காலத்தைச் செலவிட்டு பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசகர்களை நியமிப்பதற்கு அதிக காலம் எடுத்துக்கொள்ளாமல் இப்பட்டியலிலிருந்து ஆலோசகர்களைத் தெரிவுசெய்து நிர்மாணப் பணிகளை துரிதமாக ஆரம்பிப்பதற்கு இதன்மூலம் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**03. பண்டங்களை வழங்குதலும் சேவைகளை பெறுகை செய்தலும்**

**பண்டங்களையும் சேவைகளையும் வழங்குதல் சம்பந்தமாக 2019.01.01 முதல் 2019.12.31 ஆந் திகதி வரை செய்யப்பட்ட பணிகள்**

- அனைத்துப் பிரிவுகளுக்கும் அவசியமான பண்டங்களையும் சேவைகளையும் தேசிய பெறுகைச் செயன்முறை ஊடாக கட்டளை வைத்து தருவித்து வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டில் அனுமதித்த பெறுகைத் திட்டப்படி செயலாற்றுதல்.
- பெறுகைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோருவதற்கு அவசியமான அனுமதியைப் பெற்றுக்கொண்டு பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிப்பதற்கு அவசியமான அறிவுள்ள தொழில்வாண்மையினர், நிபுணத்துவ அறிவுள்ளவர்களின் பெயர்களை அனுமதிக்காக சமர்ப்பித்தல்.
- அமைச்சின் சிறிய மற்றும் பிரதான பெறுகைக் குழுக் கூட்டங்களுக்கு அவசியான பெறுகை ஆவணங்களை வழங்குதல்.
- விலைமனு ஆவணங்களைத் தயார்செய்தல்.
- விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு விளம்பரம் செய்தலும் கூறுவிலை கோரலும்.
- விலை மனுக்களை திறக்கும் குழுக்களை நியமித்தல், குறித்த திகதி மற்றும் குறித்த நேரத்திற்கு விலை மனுக்களை திறப்பதற்கு உதவி புரிதல்.
- விலை மனுக்களை அட்டவணைப்படுத்தி உரிய தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிடம் சமா்ப்பித்தல்.
- தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாா்சுகளை பெறுகைக் குழுவிற்கு அனுப்பிவைத்து இறுதி முடிவைப் பெறுதல்.
- பெறுகைகளுக்கான அனுமதி பெற்ற பின் பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளைகளைப் பிறப்பித்தல்.
- கொள்வனவுக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களை உரிய நேரத்திற்குக் கொண்டுவந்து களஞ்சியசாலைக்கு அனுப்புதல்.
- களஞ்சியசாலையிலிருந்து வழங்குநரின் பற்றுச்சீட்டும் பொருட்கள் பெறுவனவுத் துண்டும் பெறுகைப் பிரிவுக்குக் கிடைத்ததன் பின்னர் வவுச்சர்களை தயாரித்து கொடுப்பனவை மேற்கொள்வதற்காக நிருவாகப் பிரிவிற்கு அனுப்பிவைத்தல்.
- குறித்த பொருட்களுக்கு கிடைக்கும் உத்தரவாத சான்றிதழ்களை நிருவாகப் பிரிவிற்கு அனுப்பிவைத்தல்.
- சிறு கட்டுநிதி மூலமான கொள்வனவுகள் சம்பந்தமான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உயா்கல்விப் பிரிவின் கீழுள்ள நிறுவனங்களுக்கு திணைக்களப் பெறுகைக் குழுக்களையும் ஆலோசனை பெறுகைக் குழுக்களையும் நியமித்தல்.

2019 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு மற்றும் அமைச்சு மட்ட பெறுகைக் குழு ஊடாக 6.2 பில்.ரூபா பெறுமதியான 09 நிா்மாணக் கருத்திட்டங்களின் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| பல்கலைக் கழகம் | கருத்திட்டம் | அமைச்சரவை அங்கீகாரம் | பெறுகை அலுவல்கள் ஆரம்பிப்பு | கருத்திட்ட காலம் (மாதங்கள்) | கருத்திட்டப் பெறுமதி (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாண | சித்த மருத்துவப் பிரிவின் 4 ஆம், 5 ஆம் மாடிகளைப் பூர்த்தி செய்தல் | 19.05.07 | 19.05.31 | 12 | 130.10 |
| | வவுனியா வளாகத்தின் வியாபாரக் கற்கைகள் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 19.05.07 | 19.05.31 | 32 | 926.00 |
| | வவுனியா வளாகத்தின் நிருவாகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 19.05.07 | 19.05.31 | 24 | 584.00 |
| | மூன்று மாடி ஊழியர் வீடமைப்புத் தொகுதியை நிர்மாணித்தல் | 19.05.07 | 19.05.31 | 24 | 350.00 |
| | பொறியியல் தொழில்நுட்ப மற்றும் உயிரினத் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 19.05.07 | 19.05.31 | 24 | 645.00 |
| | உள்ளக வீதித் தொகுதியை நிர்மாணித்தல் | 19.05.07 | 19.05.31 | 6 | 200.00 |
| களனி | முகாமைத்துவ மற்றும் வணிகவியல் பீடத்திற்கு 10 மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 19.05.07 | 19.05.31 | 36 | 1,417.00 |
| பேராதனை | பொறியியல் பீடத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 19.05.07 | 19.05.31 | 18 | 188.04 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர | 7 மாடிகளைக் கொண்ட பல்நோக்கு கட்டிடமொன்றில் மூன்று மாடிகளை நிர்மாணித்தல் (கட்டம் 1) | 19.05.07 | 19.05.31 | 24 | 355.50 |
| | மருத்துவ பீட நோயியல் பீடத்திற்கு உடற்கூற்றியல் கட்டிடத்திற்கான நீட்சியொன்றை நிர்மாணித்தல். | 19.05.07 | 19.05.31 | 20 | 156.00 |
| மொரட்டுவை | கட்டிடக்கலை பீட விரிவுரை மண்டபக் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்திசெய்தல் | 19.01.29 | 19.02.05 | 18 | 150.00 |
| | பொறியியல் பீட பல்நோக்கு மண்டக் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்திசெய்தல் | 19.01.29 | 19.02.05 | 18 | 200.00 |
| சப்ரகமுவ | விவசாய பீடத்தின் பல்நோக்கு கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்திசெய்தல் | 19.01.29 | 19.02.05 | 30 | 976.00 |
| **மொத்தம்** | | | | | **6,277.64** |


2019.01.01 ஆந் திகதியிலிருந்து 2019.12.31 ஆந் திகதி வரை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு (CASPC) மற்றும் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC) ஊடாக 8.1 பில்லியன் ரூபா பெறுமதியான 18 நிர்மாணக் கருத்திட்ட ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

| பல்கலைக் கழகம் | கருத்திட்டம் | அமைச்சரவை அங்கீகாரம் | பெறுகை அலுவல்களை ஆரம்பித்தல் | பெறுகை அலுவல்களை பூர்த்தி செய்தல் | கருத்திட்ட பெறுமதி (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| ரஜரட்ட | விடுதிக் கட்டிடத் தொகுதிக்கு கழிவுப்பொருள் அகற்றல் தொகுதியொன்றை நிர்மாணித்தல் | 17.03.28 | 17.04.20 | 19.09.05 | 200.40 |
| | மருத்துவ மற்றும் சமாந்தர விஞ்ஞான பீடத்திற்கு துணை மருத்துவ சிகிச்சைக்கள கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 17.03.28 | 17.04.20 | 19.08.16 | 896.00 |
| | தொழில்நுட்ப பீடத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 17.07.04 | 17.07.20 | 19.05.02 | 438.00 |
| ஊவா வெல்லஸ்ஸ | நூலகக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 18.01.16 | 18.02.08 | 19.05.15 | 476.00 |
| யாழ்ப்பாணம் | வவுனியா வளாகத்திற்கு மூன்று மாடி நூலகக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 18.02.14 | 18.03.02 | 19.06.17 | 467.36 |
| களனி | நான்கு மாடி விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 19.01.29 | 19.02.05 | 19.12.30 | 247.00 |
| வயம்ப | கால்நடைவளர்ப்பு, கடற்றொழில், போசாக்கு பீட கட்டிடத்தை நீடித்தல் | 16.11.08 | 16.11.29 | 19.02.14 | 215.30 |
| ருஹுணு | பொறியியல் பீடத்திற்கு கடல்சார் கற்கை மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பற்றிய உபகரணங்களுடன்கூடிய தென்பகுதி மத்தியநிலையத்தை நிர்மாணித்தல் | 18.04.03 | 18.05.02 | 19.05.15 | 943.00 |
| | தொழில்நுட்ப பீடத்திற்கு மரச் சாமான்களுடன் மூன்று மாடி விரிவுரை மண்டபமொன்றை நிர்மாணித்தல் | 18.02.14 | 18.02.28 | 19.05.15 | 413.00 |
| | மருத்துவ பீடத்திற்கு புதிய பேராசிரியர் அலகை நிறுவுவதற்கு 10 மாடி காவறைத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் | 18.04.03 | 18.05.02 | 19.06.17 | 1,300.00 |
| பாளி, பௌத்த பட்டப்பின்படிப்பு | நான்கு மாடிக் கட்டிடமொன்றை (கட்டம் 1) நிர்மாணித்தல் | 18.02.14 | 18.02.28 | 19.04.17 | 365.00 |
| திறந்த | சுகாதாரவியல் பீடத்திற்கு 5 மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 17.07.04 | 17.07.19 | 19.06.17 | 402.50 |
| பௌத்த, பாளி | கொழும்பு அலுவலகத்திற்கு பின்னால் தொடர்மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 16.10.04 | 19.10.19 | 19.08.16 | 307.50 |
| | வெளிநாட்டு மாணாக்கர்களுக்கு 4 மாடி விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 16.10.04 | 19.10.19 | 19.09.02 | 219.00 |
| கொழும்பு | உத்தேச உசாத்துறை வலயத்தை நிர்மாணித்தல் | 17.03.28 | 17.04.19 | 19.08.21 | 530.00 |
| தென்கிழக்கு | கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாள்தொகுதியினருக்கு குடிமனைத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் | 18.07.03 | 18.07.18 | 19.11.04 | 344.70 |
| மொரட்டுவை | பொறிமுறைப் பொறியியல் பீடத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 17.03.28 | 17.04.19 | 19.07.04 | 247.00 |
| ஸ்ரீபாளி வளாகம் | நிருவாகக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 16.11.08 | 16.11.29 | 19.07.23 | 149.97 |
| **மொத்தம்** | | | | | **8161.73** |

### 1.5.4 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு

உயர்கல்வி அமைச்சு மற்றும் உயர்கல்வித் துறையின் வினைத்திறனையும் விளைத்திறனையும் அதிகரிப்பதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்டுபடுத்திக்கொள்வது இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும். அத்துடன் அரச பல்கலைக்கழக முறைமையின் வினைத்திறனையும் தரத்தையும் மேம்படுத்திக்கொள்வதற்காக ஈடுபடுத்திக்கொள்ளக்கூடிய தகவல் தொழில்நுட்ப ஏற்பாடுகளைச் செய்துகொள்ளல் முதலிய அலுவல்கள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிறுவனக் கட்டமைப்பு**




#### 1.5.4.1. தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவின் செயற்பணி

- தொடரரா (online) வெளிநாட்டு விடுமுறை அனுமதிக்கும் முறைமை குறித்த பயிற்சியை வழங்குதல்.
    - ➢ தற்போது கொழும்புப் பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம், றுஹுணு பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், வயம்ப பல்கலைக்கழகம், கட்புல ஆற்றுகைகள் பல்கலைக்கழக், திறந்த பல்கலைக்கழகம் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் ஆணைக்குழுவின் கீழுள்ள பட்டப்பின்படிப்பு நிறுவகங்களுக்குத் தேவைப்படும் பயிற்சிகளை நடாத்தியுள்ளன.
    - ➢ அமைச்சின் உத்தியோகத்தர்களுக்குத் தேவைப்படும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.
- 2019 ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பத் திட்டத்தைத் தயாரித்தல்.
- 2016 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி மடிமேல் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்காக வட்டியில்லாக் கடன் வழங்கும் கருத்திட்டத்துடன் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளல்.
- உயர்கல்விப் பிரிவின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தி பேணி வருதல்.
- கணினி இருப்புத் தகவல் முறைமையை (Computer Inventory Information System) உருவாக்குதல் மற்றும் பேணிவருதல்.
- அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும் wi-fi வசதிகளை மேலும் விஸ்தரித்தல்.
- அமைச்சில் காணப்படும் கணனிகள், Laptop கணினிகள்,Tabs மற்றும் அச்சீட்டுப் பொறிகளின் வன்பொருள் சார்ந்த குறைபாடுகளை நிவர்த்திசெய்தல்.
- கணினி மென்பொருள்கள் சார்ந்த குறைபாடுகளையும் இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் தொடர்பான சிக்கல்களையும் சீர்செய்தல்.
- பிரிவுகளின் தேவைக்கமைய கணினிகளில் பயன்பாட்டு மென்பொருள்களை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் சிக்கல்களைத் தீர்த்தல்.
- அமைச்சின் கணினிப் பாதுகாப்புக்கான வைரஸ் மென்பொருள்களை நிறுவுதல் மற்றும் இற்றைப்படுத்திப் பேணி வருதல். வைரஸ் கொன்சோல் முறைமையைப் பேணி வருதல்.
- கணனி வலையமைப்பை பராமரித்தல், அதனுடன் தொடர்புடைய சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் தேவைக்கேற்ப வலையமைப்புத் தொடர்புகளை விரிவுபடுத்தல்.

- கணனி வலையமைப்புக் கட்டுப்பாட்டு நிலையத்தில் காணப்படும் Proxy Server, Firewall Server, e-mail server, Virus Console Server, உயர்கல்வி வெளிநாட்டு விடுமுறை மென்பொருள் Server ஆகிய Server இயந்திரங்களை நிருவகித்தல்.
- உயர்கல்வி வெளிநாட்டு விடுமுறை மென்பொருள் முறைமையை பராமரித்தல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் தேவைக்கமைய உரிய படிவங்களை தயாரித்து வழங்குதல்.
- அமைச்சில் தற்போது நிறுவப்பட்டுள்ள Wi-Fi முறைமையைப் பராமரித்தல் மற்றும் இடைக்கிடை ஏற்படும் தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்களைத் தீர்த்தல்.
- அமைச்சுக்குத் தேவையான கணினி வன்பொருள்களையும் மென்பொருள்களையும் கொள்வனவு செய்யும்போது உரிய தொழில்நுட்பக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப முறைமைகளைக் கொள்வனவு செய்யும்போது பெறுகைச் செயன்முறையின் பல்வேறு கட்டங்களின்போது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தகவல் தொழில்நுட்பத் துறையில் பெறுகைச் செயன்முறையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைப் பிரிநிதித்துவப்படுத்தல்.
- ICTA ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் LGN கருத்திட்ட அலுவல்களுக்கு பங்களிப்பை வழங்குதல்.
- அமைச்சின் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப பாகங்களுடன் தொடர்பான சொத்துக்கள் பதிவேட்டைத் தயாரித்தல்.
- தகவல் தொழில்நுட்ப பெறுகைத் திட்டத்தை தயாரித்தல்.
- தொழில்நுட்ப கட்டளை நியமங்களைத் தயாரித்தல், TEC குழுவுக்கு பங்களிப்பை வழங்குதல், CCTV முறைமையை நிறுவும் அலுவல்களை முகாமைசெய்தல்.
- அமைச்சின் CCTV கமரா முறைமையை இயக்குதலும் பராமரித்தலும்.
- அமைச்சின் ஒலிபெருக்கி இயந்திரங்களைப் பொருத்தியிணைத்தல் சம்பந்தமான அலுவல்களில் உதவுதல்.
- அமைச்சின் உள்ளக தொலைபேசிகளை புதிதாக பொருத்தும் அலுவல்களில் உதவுதல். (PABX System)

### 1.5.4.2. தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவினால் 2019 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட பணிகள்

**01. 2016 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கமைய மடிமேல் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான வட்டியில்லாக் கடன் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் கடனைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்ட வட்டியின் அளவு**

| மாதம் | இலங்கை வங்கி | | மக்கள் வங்கி | |
|---|---|---|---|---|
| | மாணவர்கள் எண்ணிக்கை | வட்டித் தொகை (ரூ.) | மாணவர்கள் எண்ணிக்கை | வட்டித் தொகை (ரூ.) |
| ஜனவரி | 10,967 | 3,931,416.86 | 11,259 | 2,807,728.96 |
| பெப்ரவரி | 10,982 | 3,894,128.24 | 11,138 | 2,329,488.22 |
| மார்ச் | 10,986 | 3,616,162.99 | 11,032 | 1,966,120.11 |
| ஏப்ரல் | 11,020 | 3,879,437.04 | 10,906 | 1,865,251.21 |
| மே | 11,044 | 3,689,798.75 | 10,764 | 1,619,413.55 |
| ஜூன் | 10,428 | 3,559,545.38 | 10,395 | 1,427,364.74 |
| ஜூலை | 9,860 | 3,329,522.88 | 9,528 | 1,168,419.59 |
| ஆகஸ்ட் | 9,356 | 3,224,566.14 | 8,299 | 977,839.63 |
| செப்டெம்பர் | 8,793 | 2,940,138.72 | 6,867 | 811,378.98 |
| ஒக்டோபர் | 8,281 | 2,695,650.33 | 5,673 | 643,113.25 |
| நவம்பர் | 7,795 | 2,580,814.83 | 4,538 | 537,027.98 |
| டிசம்பர் | 7,836 | 2,405,248.65 | 3,581 | 349,582.04 |
| **மொத்தம்** | **117,348** | **39,746,430.81** | **103,980** | **16,502,728.26** |

**02. உயர்கல்விப் பிரிவின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தி பேணிவருதல் மற்றும் அதனுடன் தொடர்பான புதிய தகவல்களை உட்படுத்துதல்**

| பிரிவு | தகவல்கள் | அளவு (சிங்களம்) | அளவு (ஆங்கிலம்) | அளவு (தமிழ்) |
|---|---|---|---|---|
| அபிவிருத்திப் பிரிவு | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள், அரச ஊழியர்களுக்கான வெளிநாட்டு பயிற்சி அமர்வுகளும் அறிவித்தல்களும். | 47 | 47 | 47 |
| மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | இணையத்தளத்தின் முகப்பை மாற்றியமைத்தல், புதிய அங்கங்களை உள்ளடக்குதல் மற்றும் ஏனைய இணையத்தளங்களுடன் தொடர்பிணைப்பை ஏற்படுத்தல். | 10 | 10 | 10 |
| ஊடகப் பிரிவு | அடிக்கல் நடல், பதவியேற்புகள், திறந்துவைத்தல் நிகழ்வுகளுடன் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் கடிதங்கள் | 40 | 40 | 40 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு | மடிமேல் கணினிகள் சம்பந்தமான விலைப்பட்டியல், மாணவர் கடன் திட்டம் | 25 | 25 | 25 |
| பெறுகைப் பிரிவு | கேள்வி அழைப்புக்களைப் பிரசுரித்தல் | 10 | 10 | 10 |
| அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு | உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டப் பாடநெறிகளின் பட்டியல் | 45 | 45 | 45 |
| நிருவாகப் பிரிவு | பதவி வெற்றிடங்களைப் பிரசுரித்தல் | 03 | 03 | 03 |

**03. உயர்கல்விப் பிரிவின் இணையத்தளத்தை நவீனமயப்படுத்தி தயார்செய்தல்**

உயர்கல்விப் பிரிவின் இணையத்தளம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) பங்களிப்புடன் புதிய தோற்றத்தில் தயாரித்து பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. அது தவிர, அரச சார்பற்ற பல்கலைக்கழகங்கள் பிரிவுடன் தொடர்புடைய பட்டங்கள் மற்றும் பட்டங்களை வழங்கும் தனியார் பல்கலைக்கழகங்களை பதிவுசெய்வதற்கும் தொடரரா தகவல் தொழில்நுட்ப முறைமையும் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது, உயர்கல்விப் பிரிவின் புதிய இணையத்தளத்தை உருவாக்கி பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், 2019 நவம்பர் மாதம் அது வெளியிட்டு வைக்கப்பட்டது.

அபிவிருத்திப் பிரிவின் முக்கிய கருமமொன்றான வெளிநாட்டு மாணாக்கர்களுக்கு வீசா காலத்தை நீடித்தலும் சிபார்சுகளை வழங்குவதற்கும் புதிய மென்பொருள் முறைமையொன்றை உருவாக்கும் செயன்முறை தொடர்பில் முறைமைப் பகுப்பாய்வு இடம்பெற்று வருகிறது. அதேபோல், அனைத்து அரச பல்கலைக்கழகங்களில் Wi-Fi வசதிகளை மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருவதுடன், அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களைப் பதிவுசெய்யும் தொடரரா முறைமையில் (Cross Government Document Managamenet System) வேலைகளைப் பூர்த்திசெய்யப்பட்டு அதனைப் பரிசோதிக்கும் மட்டத்தில் காணப்படுகிறது. (இது ICTA அநிறுவனத்தின் ஒத்தாசையுடன் அமுல்படுத்தப்படும் ஒரு கருத்திட்டமாகும்.

2016 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கமைய அரச பல்கலைக்கழகங்களில் Wi-Fi வசதிகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக பின்வரும் உயர்கல்வி நிறுவகங்கள் 2019 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

- ருஹுணு பல்கலைக்கழகம், மாத்தறை.
- கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம், கம்பஹா.
- கிழக்குப் பல்கலைக்கழகம் - செங்கலடி.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்.
- கிளிநொச்சி பொறியியல் பீடம், யாழ் பல்கலைக்கழகம்.
- ஹொரணை ஸ்ரீபாளி வளாகம்.
- கிழக்குப் பல்கலைக்கழகம், திருகோணமலை வளாகம்.

இரண்டாம் கட்டத்தின்போது தெரிவுசெய்யப்பட்ட மேற்படி நிறுவனங்களுக்கு Wi-Fi உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரிக்கும் கருத்திட்டத்தை ஆரம்பித்து அதனை அமுல்படுத்தும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. 151,568,789.18 ரூபா தொகை அரசாங்கத்தினால் செலவிடப்படுகிறது. இதற்காக சேவை வழங்கும் நிறுவனமாக Pan Audio Private Ltd நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், இக்கருத்திட்டம் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலவச Wi-Fi வசதிகள் வழங்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

| மாவட்டம் | பல்கலைக்கழகம் / நிறுவகம் | Wi-Fi இடங்கள் |
|---|---|---|
| அம்பாறை | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞான பீடம். | 02 |
| அநுராதபுரம் | ரஜரட்ட பல்கலைக்கழகம் - திறந்த பல்கலைக்கழகம் - அநுராதபுரம் | 03 |
| மட்டக்களப்பு | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞான பீடம். | 01 |
| கொழும்பு | கொழும்பு திறந்த பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம். | 06 |
| காலி | றுஹுணு பல்கலைக்கழகம் - பொறியியல் பீடம், மருத்துவ பீடம் | 02 |
| கம்பஹா | களனிப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் - மிரிஸ்வத்த. | 02 |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 01 |
| களுத்துறை | ஸ்ரீ பாளி வளாகம் - ஹொரணை. | 01 |
| கண்டி | பேராதனைப் பல்கலைக்கழகம் | 02 |

**தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் அமைச்சினுள் வழங்கப்பட்ட சேவைகள் கீழ்த் தரப்பட்டுள்ளன:-**

| சேவை வழங்கல்கள் பற்றிய விபரம் | அறிக்கையிடப்பட்ட மற்றும் நிவர்த்திசெய்யப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை (2019.01.01 முதல் 2019.12.31 வரை) |
|---|---|
| இணையத்தளத்தினுட் பிரவேசிப்பதில் நிலவும் சிக்கல்கள் | 90 |
| E-Mail சார்ந்த பிரச்சினைகள் | 50 |
| மென்பொருள்களை இற்றைப்படுத்தல் | 30 |
| புதிய மென்பொருள்களை நிறுவுதல் | 40 |
| வன்பொருள்சார் சிறு பிரச்சினைகள் | 90 |
| கணினி அச்சீட்டுப் பிரச்சினைகள் | 90 |
| கணினி அச்சீட்டுப் பொறிகளில் ஏற்படும் கோளாறுகள் | 30 |
| WI-FI சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகள் | 60 |
| வலையமைப்பு சார் பிரச்சினைகள் | 50 |
| கணினி வைரஸ் தாக்கப் பிரச்சினைகள் | 20 |
| Share Folder களில் ஏற்படும் பிரச்சினைகள் | 15 |
| N கணினிகளில் ஏற்படும் பிரச்சினைகள் | 30 |
| வாகன அனுமதிப்பத்திர முறைமைசார் பிரச்சினைகள் | 45 |

**செயற்பாட்டுத் தொகுதி மீண்டும் நிறுவப்பட்ட கணினிகளின் எண்ணிக்கை (2019.01.01 முதல் 2019.12.31 வரை)**


| பிரிவு | கணினிகளின் எண்ணிக்கை |
|---|---|
| அபிவிருத்திப் பிரிவு | 03 |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 02 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 02 |
| கணக்குப் பிரிவு | 04 |
| அரசாங்க கணக்காய்வுப் பிரிவு | 03 |
| பெறுகைப் பிரிவு | 02 |
| நிருவாகப் பிரிவு | 04 |

மென்பொருள்களைப் பயன்படுத்தி தீர்வை வரியற்ற வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அலுவல்கள் மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படுகின்றன. நிதி அமைச்சுக்கு அனுப்பப்படும் அறிக்கைகள் தன்னியக்கமாக இந்த முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும். 2019.01.01 ஆந் திகதியிலிருந்து 2019.12.31 ஆந் திகதி வரை வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்.

| மாதம் | வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் |
|---|---|
| ஜனவரி | 74 |
| பெப்ரவரி | 39 |
| மார்ச் | 59 |
| ஏப்ரல் | 06 |
| மே | 103 |
| ஜூன் | 184 |
| ஜூலை | 155 |
| ஆகஸ்ட் | 91 |
| செப்டம்பர் | 97 |
| அக்டோபர் | 95 |
| நவம்பர் | 128 |
| டிசம்பர் | 94 |
| **மொத்தம்** | **1,125** |

## 1.5.5. அபிவிருத்திப் பிரிவு

**நிறுவனக் கட்டமைப்பு**




### 1.5.5.1. அபிவிருத்திப் பிரிவின் செயற்பணி

- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் புதிய கற்கைநெறிகளை ஆரம்பித்தல், கற்கைநெறிகளை மாற்றுதல், புதிய பீடங்களையும் பிரிவுகளையும் ஆரம்பித்தல் முதலான பணிப்புரைகளையும் ஒழுங்குவிதிகளையும் வெளியிடுதல்.
- அரச பல்கலைக்கழகங்களைத் தாபித்தல் மற்றும் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக காணிகளைக் கொள்வனவுசெய்தல் மற்றும் சுவீகரிப்பு தொடர்பான அனைத்து அலுவல்கள்.
- இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் தொடர்பான அனைத்து அலுவல்களும் (பதவியினர் எண்ணிக்கை பற்றிய விடயங்கள் தவிர்ந்த)
- இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், பட்டப்பின்படிப்பு நிறுவகங்கள், ஏனைய பட்டக் கற்கை நிறுவகங்களின் நிருவாக சபைகள் / முகாமைத்துவ சபை உறுப்பினர்களை நியமித்தல்.
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் சம்பந்தமான அனைத்து அலுவல்கள்.
- அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அப்பல்கலைக்கழகங்களுக்குரிய பட்டப்பின்படிப்பு நிறுவகங்களிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பங்களுக்கு மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கௌரவ அமைச்சர் ஆகியோரின் அனுமதியைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான அலுவல்கள்.
- பல்கலைக்கழகங்கள், பட்டப்பின்படிப்பு நிறுவகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவகங்களின் பணியாட்டொகுதியினர் அத்தகைய நிறுவகங்கள் வருவிக்கப்பட்ட நிதியங்கள் (Generated Funds), உள்ளூர் நிதியங்கள் என்பவற்றை உபயோகித்து வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் கலந்துகொள்ளும்போது செலவாகும் நிதி ஒதுக்கீடுகளுக்குத் தேவையான அங்கீகாரத்தை அமைச்சின் செயலாளரிடமிருந்து அல்லது தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திலிருந்தும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

- பல்கலைக்கழக பணியாட்டொகுதி அலுவலா்களுக்கு 431 ஆம் இலக்க அரசநிதி சுற்றறிக்கைக்கமைய விமான பிரயாணச்சீட்டுக்களுக்கு அனுமதி வழங்குதற்குரிய நடவடிக்கைகள்.
- பல்கலைக்கழக வேந்தா்கள் மற்றும் துணை வேந்தா்களின் நியமனம் சம்பந்தமான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- பல்கலைக்கழக முறைமையில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கடிதங்கள் சம்பந்தமான அலுவல்கள்.
- பட்டச் சான்றிதழ்களை ஏற்றங்கீகரித்தல் மற்றும் இணையாக்குதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் கடிதங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்து பதில் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழகங்களுக்கு அவசியமான இரசாயனப் பதார்த்தங்களையும் இலத்திரனியல் உபகரணத் தொகுதிகளையும் வேறு உதிரிப்பாகங்களையும் விமானம் மூலம் இறக்குமதி செய்வதற்காக 368 ஆம் இலக்க அரசநிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குரிய அலுவல்கள்.
- பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான இரசாயனப் பதார்த்தங்களையும் இலத்திரனியல் உபகரணத் தொகுதிகளையும் வேறு உதிரிப்பாகங்களையும் இறக்குமதி செய்யும்போது அவ்வாறான பொருட்களுக்கு தீர்வை வரி மற்றும் வற் வரி விலக்களித்தல்/ நிவாரணம் சம்பந்தமாக கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு 2012.11.08 ஆந் திகதிய, 1783/18 ஆம் இலக்க அதிவிசேட வா்த்தமானி அறிவித்தலுக்கிணங்க அனுமதி பெற்றுக்கொள்வதற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துதல்.
- மகாபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் அலுவல்கள்

### 1.5.5.2 வேந்தர்களையும் துணை வேந்தர்களையும் நியமித்தல்

(2019.01.01 முதல் 2019.12.31வரை)

| பல்கலைக்கழகம் | வேந்தர் | நியமனத் திகதி | துணை வேந்தர் | நியமனத் திகதி |
|---|---|---|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | - | - | பேராசிரியர் சந்திரிகா என்.விஜேரத்ன அவர்கள் | 2019.04.12 |
| இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் | ஸ்ரீ ராமஞ்ஞ மகா சங்க சபையின் அதியுயர் மகாநாயக்கர் அதி. வண. அக்கமகா பண்டித்த நாப்பான பேமசிறி தேரர் அவர்கள் | 2019.06.01 | வண. பேராசிரியர் வரதிவெல விஜயசுமண தேரர் அவர்கள் | 2019.01.24 |
| அழகியற்கலை பல்கலைக்கழகம் | - | - | பேராசிரியர் சரத் சந்திரஜீவ அவர்கள் (தகுதிவாய்ந்த அதிகாரியாக வீரகோன் முதியன்சேலாகே அபேரத்ன பண்டார அவர்கள்) | 2019.12.13 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | கலாநிதி வீ.விவேகானந்தராஜ அவர்கள் | - | பேராசிரியர் எல்வியன் சால்முஸ் ரேகல் அவர்கள் | 2019.01.22 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | - | - | கலாநிதி பி.ஏ.கருணாரத்ன அவர்கள் | 2019.01.01 |
| றுஹுணு பல்கலைக்கழகம் | வண. அக்குரட்டியே நந்த தேரர் அவர்கள் | 2019.07.08 | முதுநிலைப் பேராசிரியர் ரி.எஸ்.டி. அமரசேன அவர்கள் | 2019.03.08 |
| வாழ்க்கைத் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் | - | - | முதுநிலைப் பேராசிரியர ரஞ்ஜித் பிரேமலால் அவர்கள் (தகுதிவாய்ந்த அதிகாரி) | 2019.12.18 |

### 1.5.5.3 வெளிநாட்டு விடுமுறைகள்

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு விடுமுறைக்கான அங்கீகாரத்தை வழங்குதல் (2019.01.01 முதல் 2019.12.31 வரை)

| பல்கலைக்கழகம் / நிறுவகம் | கடமை விடுமுறை | பிரத்தியேக விடுமுறை | மொத்தம் |
|---|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 28 | 12 | 40 |
| பிக்கு பல்கலைக்கழகம் | 29 | 16 | 45 |
| பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 71 | 40 | 111 |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 760 | 349 | 1,109 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 511 | 236 | 747 |
| களனிப் பல்கலைக்கழகம் | 353 | 179 | 532 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 370 | 203 | 573 |
| மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 184 | 196 | 380 |
| றுஹுணு பல்கலைக்கழகம் | 244 | 121 | 486 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 255 | 154 | 409 |
| இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் | 109 | 50 | 159 |
| திறந்த பல்கலைக்கழகம் | 104 | 75 | 179 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 123 | 73 | 196 |
| இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 77 | 74 | 151 |
| கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் | 95 | 88 | 183 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 73 | 13 | 86 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 69 | 31 | 100 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 40 | 18 | 58 |
| வவுனியா வளாகம் | 4 | 13 | 17 |
| கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம் (GWAI - Kelaniya) | 2 | 11 | 13 |
| சுவாமி விபுலானந்தா அழகியல் கலை நிறுவகம் | 1 | 4 | 5 |
| பௌத்த, பாளி பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIPBS - Kelaniya) | 18 | 4 | 22 |
| தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIA) | 11 | 2 | 13 |
| ஆங்கிலமொழி பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIE - Open) | 14 | 2 | 16 |
| முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PIM-Japura) | 108 | 3 | 111 |
| இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE) | 4 | 30 | 34 |
| **மொத்தம்** | **3,657** | **1,997** | **5,654** |

**1.5.5.4 உள்ளூர் நிதியங்கள் மற்றும் வருவிக்கப்பட்ட நிதியங்களுக்கான அங்கீகாரம்**

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதிக்காக அந்த நிறுவகங்களினால் வருவிக்கப்பட்ட நிதியங்கள் (Generated Funds) மற்றும் உள்ளூர் நிதியங்களுக்கான அங்கீகாரத்தை/ சிபார்சைப் பெற்றுக்கொடுத்தல். (2019.01.01 முதல் 2019.12.31 வரை)

| பல்கலைக்கழகம் | நிதியங்கள் (ரூ.மி.) (உள்ளூர்/வருவிக்கப்பட்ட நிதியங்கள்) | விமானப் பயணச்சீட்டு விண்ணப்பங்கள் |
|---|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 137 | 11 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 8 | 7 |
| களனிப் பல்கலைக்கழகம் | 194 | 0 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 51 | 6 |
| மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 1 | 5 |
| றுஹுணு பல்கலைக்கழகம் | 0 | 9 |
| திறந்த பல்கலைக்கழகம் | 18 | 36 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 7 | 3 |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 13 | 0 |
| கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் | 35 | 0 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 20 | 0 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 2 | 0 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 17 | 0 |
| பௌத்த, பாளி பட்டப்பின் படிப்பு நிறுவகம் | 9 | 0 |
| முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 59 | 0 |
| ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 4 | 0 |
| தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 5 | 0 |
| **மொத்தம்** | **580** | **77** |

**வெளிநாட்டுக் கல்வி அலகு**
**01. புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்**

**இலங்கை மாணாக்கர்களுக்கு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வாய்ப்புகளை வழங்குதல்**

வெளிநாடுகளில் உயர்கல்விக்கான வாய்ப்புகளை வழங்கி வருடாந்தம் நேரடி மற்றும் நேரில் வெளிநாட்டு இளமாணிப் பட்ட, பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்களை வழங்குதல் இவ்வமைச்சினால் மேற்கொள்ளப்படும் முக்கிய ஒரு கருமமமாகும். இளமாணிப் பட்ட புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் நாடுகள் வங்காளதேசம், இந்தியா, சீனா, சேர்பியா, கியூபா, ரஷ்யா, பாகிஸ்தான், வியட்நாம், ஜப்பான் ஆகிய நாடுகளாகும். அதேபோல் இந்தியா, சீனா, ஜப்பான், ரஷ்யா, நியூஸிலாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகியன பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்களைப் பெற்று வழங்கப்படும் நாடுகளாகும்.

**புலமைப்பரிசில்களுக்கு மாணாக்கர்களைத் தெரிவுசெய்யும் செயன்முறை:-**

ஏற்புடைய புலமைப்பரிசில்கள் பற்றிய தகவல்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பகிரங்க செய்தித்தாள்கள் மூலமும் எமது இணையத்தளத்திலும் (www.mohe.gov.lk) மூலமும் பகிரங்கப்படுத்தப்பட்டு விண்ணப்பம் கோரப்பட்டு முறையானதும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான ஒரு முறையைப் பின்பற்றி மாணாக்கர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

அதேபோல், மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக, அமைச்சுடன் தொடர்புபடாமல் நேரடியாக விண்ணப்பிக்கக்கூடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்கும் புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுகிறது.

**பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில் வாய்ப்புகள் (2013 – 2019 வரை)**

| நாடு | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 37 | 31 | 20 | 27 | 31 | 34 | 41 |
| சீனா | 11 | 16 | 8 | 5 | 18 | 12 | 13 |
| ஜப்பான் | 9 | 9 | 7 | 7 | 7 | 7 | 7 |
| ரஷ்யா | - | - | - | 3 | 2 | 6 | 3 |
| நியூசிலாந்து | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 |
| ஐக்கிய இராச்சியம் | 7 | 7 | 8 | 8 | 7 | 5 | பெறுபேறு கிடைக்க-வில்லை |
| **மொத்தம்** | **65** | **64** | **45** | **51** | **67** | **65** | **66** |

**இளமாணிப் பட்ட புலமைப்பரிசில் வாய்ப்புகள் (2013 - 2019 வரை)**

| நாடு | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|
| பங்களாதேஷ் | 5 | 7 | 9 | 6 | 12 | - | - |
| இந்தியா | 115 | 133 | 152 | 139 | 116 | 105 | 109 |
| சீனா | 13 | 18 | 10 | 10 | கிடைக்க-வில்லை | 10 | 10 |
| புரூணை | - | - | 2 | - | கிடைக்க-வில்லை | - | - |
| கொரியா | 1 | 2 | - | - | - | - | - |
| கியூபா | - | 2 | 2 | 1 | 1 | 1 | 1 |
| ரஷ்யா | 20 | 37 | 20 | 18 | 22 | 18 | 07 |
| பாகிஸ்தான் | 9 | 10 | 10 | 11 | 11 | 11 | 18 |
| சர்பியா | 1 | 1 | 1 | 1 | - | - | 1 |
| மெசிடோனியா | - | 1 | - | - | - | - | - |
| வியட்னாம் | 5 | 5 | 5 | - | 5 | 5 | 5 |
| ஜப்பான் | 5 | 1 | 1 | 1 | 1 | 1 | கிடைக்க-வில்லை |
| சீனா (Macao Foundation) | - | - | - | - | 1 | 2 | - |
| **மொத்தம்** | **174** | **217** | **212** | **187** | **169** | **153** | **151** |

### 02. வெளிநாட்டு மாணாக்கர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்

இலங்கையில் உயர்கல்விக்கான வாய்ப்புகள் பற்றி வெளிநாடுகளில் பிரசாரமாதலும் அதன் ஊடாக இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணாக்கர்கள் அதிகரித்த எண்ணணிக்கையில் கவர்ந்துகொள்வது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு 2011 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில், ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை வழங்கப்பட்டுள்ள புலமைப்பரிசில்களின் அளவு கீழ்த் தரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்போது புலமைப்பரிசில் பெறுநர்கள் மொத்த மாணாக்கர் எண்ணிக்கை 148 ஆகும். தற்போது பட்டப்பின்படிப்பை வெற்றிகரமாக தொடர்ந்த பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், நைஜீரியா மற்றும் கொரிய மாணாக்கர்கள் 47 பேர் தமது நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

**2014/15 (2016 ஆம் ஆண்டுக்காக) கல்வி ஆண்டுக்கு பதிவுசெய்யப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை**

| நாடு | 2014/2015 மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| இந்தோனேஷியா | 02 |
| பாகிஸ்தான் | 05 |
| மாலைத்தீவுகள் | 05 |
| நேபாளம் | 06 |
| பூட்டான் | 04 |
| நைஜீரியா | 02 |
| உகண்டா | 01 |
| கென்யா | 01 |
| **மொத்தம்** | **26** |

2014/15 கல்வியாண்டிற்காக இளமாணிப் பட்டப் புலமைப்பரிசில்களுக்கு தகைமை பெற்ற 23 மாணவர்கள் தற்போது பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்கின்றனர்.

**2014/2015 கல்வி ஆண்டுகளில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் கற்கை நடவடிக்கைகளைத் தொடரும் மாணாக்கர்களின் எண்ணிக்கை**

| பல்கலைக்கழகம் | 2014/2015 இளமாணிப் பட்டக் கற்கை மாணவர்கள் | 2015/2016 இளமாணிப் பட்டக் கற்கை மாணவர்கள | 2016/2017 இளமாணிப் பட்டக் கற்கை மாணவர்கள |
|---|---|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 5 | 2 | 2 |
| மொரட்டுவைப் பல்கலைக்கழகம | 5 | - | - |
| றுஹுணு பல்கலைக்கழகம் | 1 | - | - |
| களனிப் பல்கலைக்கழகம் | 7 | - | 1 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 2 | 5 | 2 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 2 | 2 | - |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 1 | 1 | - |
| வயம்ப பல்கலைக்கழகம் | - | 1 | - |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | - | - | 1 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | - | 1 | 1 |
| வவுனியா வளாகம் | - | 1 | - |
| **மொத்தம்** | **23** | **13** | **07** |

இதன் மூலம் இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் மாணாக்கர்களுக்கும் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுடன் கல்வியைத் தொடர்வதன் ஊடாக பல்வேறு கலாசார ரீதியான அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் அதன் ஊடாக உலகை மிகவும் பரந்த கண்ணோட்டத்தில் நோக்குவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

### 03. இலங்கை பொதுநலவாய அமைப்பு புலமைப்பரிசில்கள்

வெளிநாட்டு மாணாக்கர்களுக்கு இலங்கையில் பட்டப்பின்படிப்புக் கற்கை வாய்ப்புக்களை மேலும் பெற்றுக்கொடுப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் **"இலங்கை பொதுநலவாய அமைப்பு புலமைப்பரிசில் திட்டம்"** பொதுநலவாய அமைப்பின் பல்கலைக்கழகங்கள் சங்கமும் உயர்கல்வி அமைச்சும் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை பொதுநலவாய அமைப்பு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை வழங்கப்பட்டுள்ள புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை கீழ் தரப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உயிரின இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப நிறுவகம் ஆகிய நிறுவனங்கள் வருடாந்தம் பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளன.

**பதிவுசெய்யப்பட்ட மொத்த பட்டப்பின்படிப்பு மாணாக்கர்களின் எண்ணிக்கை**

| கல்வியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2014 | 02 |
| 2015 | - |
| 2016 | 02 |
| 2017 | 03 |
| 2018 | 02 |
| **மொத்தம்** | **09** |

அதன்படி, இலங்கை பொதுநலவாய நாட்டு புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இதுவரை பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொண்டுள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை 09 ஆகும். பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில் கற்கைகளை வெற்றிகரமாகத் தொடர்ந்த மூன்று மாணவர்கள் தற்போது தமது நாடுகளுக்குத் திரும்பியுள்ளதுடன் மேலும் இரண்டு மாணவர்கள் பாடநெறிகளை விட்டும் இடைவிலகிச் சென்றுள்ளனர். நான்கு மாணவர்கள் கற்கைநெறிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

2019 கற்கை ஆண்டுக்காக பட்டப்பின்படிப்பு விண்ணப்பம் கோருவதற்காக அமைச்சின் இணையத்தளத்தில் விளம்பரம் செய்யப்பட்டதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு 34 விண்ணப்பங்களும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உயிரின இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு 34 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றினிடையே தகைமை பெற்ற இரண்டு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களை இந்நாட்டிற்கு வரவழைப்பதற்கான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 04. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்,கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பவற்றுக்கு உத்தியோகத்தர்களை அனுப்பிவைத்தல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஆகியவற்றுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களைப் பெயர் குறிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பல்கலைக்கழகத்திற்கு அறிவிப்பதும் அதன் ஊடாக கிடைக்கப்பெறும் பெயர்குறித்த நியமனங்களை குறித்த நிறுவனங்களுக்கு அறிவிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

### 05. வெளிநாட்டு மாணாக்கர்களுக்கு வீசா (Visa) வசதிகளை வழங்குதல்

கல்வி நடவடிக்கைகளுக்காக இந்நாட்டுக்கு வரும் வெளிநாட்டு மாணாக்கர்களை நாட்டுக்குள் அனுமதிக்கும் வீசா (Entry Visa) மற்றும் இந்நாட்டுக்குள் வந்தபின் குறித்த காலப்பகுதிக்கு ஏற்ப வதிவிட வீசா (Residence Visa) வழங்குதலும் நீடித்தலும் தொடர்பான சிபார்சுகள் எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய, இந்நாட்டின் அரச பல்கலைக்கழகங்களுக்கு வருகைதரும் வெளிநாட்டு மாணாக்கர்கள் பின்வருமாறாகும்:-

a) இலங்கையின் ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டமும் பொதுநலவாய அமைப்பு புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருகைதரும் மாணாக்கர்கள்

b) புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு அமைய பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருகைதரும் மாணாக்கர்கள்.

c) இந்நாட்டின் வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் ஊடாக குறுகிய கால பயிற்சிக்கு இந்நாட்டின் அரச பல்கலைக்கழகங்களுக்கு வருகைதரும் மாணாக்கர்கள்.

d) பணம் செலுத்தி டிப்ளோமா/ பட்டம்/ பட்டப்பின்படிப்பு கல்வியைத் தொடர அரச பல்கலைக்கழகங்களுக்கு வருகைதரும் மாணாக்கர்கள்.

### 06. வெளிநாட்டு விரிவுரையாளர்களுக்கு வீசா வசதிகளை வழங்குதல்

I. கல்வி நடவடிக்கைகளுக்காக இந்நாட்டுக்கு வருகைதரும் விரிவுரையாளர்களுக்கு நாட்டுக்குள் வருவதற்கான வீசா (Entry Visa) மற்றும் இந்நாட்டுக்குள் வருகைதந்த பின் உரிய காலப்பகுதிக்கு ஏற்ப வதிவிட வீசா (Residence Visa) வழங்குதலும் நீடிப்புச்செய்தலும் தொடர்பான சிபார்சுகளை எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

II. அதற்கமைய இந்நாட்டின் அரச பல்கலைக்கழகங்களுக்கு வருகைதரும் விரிவுரையாளர்கள் பின்வருமாறாகும்:-

(a) புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்கு அமைய பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வருகைதரும் விரிவுரையாளர்கள்.

(b) சேவையின் தேவையின் அடிப்படையில் வேதனம் வழங்கும் அடிப்படையின் பேரில் தொண்டு அடிப்படையின் பேரில் வருகைதரும் விரிவுரையாளர்கள்.

### 07. உயர்கல்வித் துறையில் கல்விக்கான ஒத்துழைப்பை வளர்த்தல்.

- புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல்:
  உயர்கல்வித் துறையில் கல்வி ஒத்துழைப்பை வளர்க்கும் நோக்குடன் அமைச்சு, அரச பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்/ உயர்கல்வி நிறுவகங்களுடனும் பல்கலைக்கழக ஆய்வுகளுக்காகவும் தொடர்ந்தும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுகிறது. அதற்கமைய,
- பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணாக்கர்கள், கல்விசாரா பணியாட்டொகுதியினருக்கான பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்
- பிறநாட்டு மொழிகளைக் கற்கும்போது பயன்படுத்தப்படும் கல்விசார் உபகரணங்களை குறிப்பாக செவிப்புல, கட்புல உபகரணங்களைப் பரிமாறிக்கொள்ளல்.
- ஆராய்ச்சி ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்கள், இலக்கியம், ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்கள், வேறு சம்பந்தப்பட்ட பிரகடனங்கள் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல்.
- கல்விக் கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சிப் பாடநெறிகள், கண்காட்சிகளில் பங்கேற்றல் என்பவற்றை ஊக்குவித்தல்

முதலிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு குறிப்பிட்ட ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன், இந்த ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக வழங்கப்படும்.

**08. இலங்கைக்கும் வேறு நாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் இரு தரப்புக் கலந்துரையாடல்கள் (Bilateral Discussions)**

a. உயர்கல்வி தொடர்பிலான கலந்துரையாடல்களுக்காக வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு வருகைதரும் தூதராண்மைக் குழுக்களுடன் நடைபெறும் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள்.

b. வெளிநாடுகள் மூலம் இலங்கையில் மேற்கொள்ளப்படும் உயர்கல்வி ஊக்குவிப்புக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் (ex. India, China தொடர்பிணைப்பு)

c. உயர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் தொடர்பில் வேற்றரசுகளும் தனியார் பல்கலைக்கழகங்களும் மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் செயலாற்றுதலும் அவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுதல்.

**சர்வதேச அமைப்புகளுடனான இணைப்பூட்டல்கள்**


ஐ.நா. அமைப்பு, சார்க் அமைப்பு, யுனெஸ்கோ அமைப்பு, கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புகளுடன் உயர்கல்வித் துறைக்கு/ பல்கலைக்கழகங்களுக்கு உரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச்செய்தல்.

**வெளிநாட்டு தூதராண்மைக் குழுக்களுக்கு தகவல்களை வழங்குதல்**

இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இராஜதந்திர கலந்துரையாடல்களுக்கு கலந்துகொள்ளும் தூதராண்மைக் குழுக்களின் அங்கத்தவர்களுக்கு உயர்கல்வித் துறைக்கு ஏற்புடைய அவசியமான தகவல்களையும் தரவுகளையும் வழங்குதல்.

## 1.5.6 திட்டமிடல் பிரிவு

**நிறுவனக் கட்டமைப்பு'**



### 1.5.6.1 திட்டமிடல் பிரிவின் செயற்பணி

**01. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்களை ஒழுங்குபடுத்தல்**

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துதலும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அந்தக் கருத்திட்டங்கள் தொடர்பான வினவல்களுக்குப் பதிலளித்தலும்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டுக் கருத்திட்டங்கள் சம்பந்தமாக உரிய நிறுவனங்களை அறிவுறுத்தலும் அவற்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதலும்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்படும் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பாக வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
- வெளிநாட்டு வளத் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டுக் கருத்திட்டங்களுக்கான கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவுகளை அமைத்தல் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல்.
- வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பாக கைச்சாத்திடப்பட வேண்டிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் (MOU) கைச்சாத்திடுவதற்குத் தேவையான அலுவல்களை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டுக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளல் மற்றும் நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்காக கணக்குப் பிரிவுடன் ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல், செயற்பாட்டுக் குழு அங்கத்தவர்களை நியமித்தல், செயற்பாட்டுக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்தல்.
- வெளிநாட்டு நிதிக் கருத்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்காக அவ்வப்போது வருகைதரும் வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நடாத்தப்பட வேண்டிய கூட்டங்களை நடாத்துவதற்கு தேவையான அலுவல்களை ஏற்பாடுசெய்தல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத்தல்.
- உள்நாட்டு நிர்மாணக் கருத்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அத்தகைய கூட்டங்களின்போது எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத்தல்.
- கருத்திட்டத் தரவுகளைப் பகுப்பாய்வுசெய்தல், பிரச்சினைகளை அடையாளம் காணல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழுள்ள வெளிநாட்டுக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு வளத் திணைக்களத்துடன் இணைந்து எதிர்வரும் ஆண்டுகளுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம், கருத்திட்ட நடவடிக்கை மற்றும் மேற்பார்வைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் ஆகியவற்றினால் முன்வைக்கப்படும் மாதிரியமைப்பைத் தழுவி முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து வழங்குதல்.

**02. வரவுசெலவுத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தலும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்தலும்.**

- வருடாந்த வரவுசெலவுத்திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான கருத்திட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அத்தகைய கருத்திட்ட முன்மொழிவுகளில் பொருத்தமான கருத்திட்டங்களை வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளாக பரிசீலிப்பதற்காக நிதியமைச்சுக்கு ஆற்றுப்படுத்தல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டைத் தயாரிப்பதற்காக வரவுசெலவுத்திட்ட கருத்திட்டங்களுக்கும் வெளிநாட்டு கருத்திட்டங்களுக்குரிய தேவைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல்

மற்றும் அவற்றை ஆராய்ந்து வரவுசெலவுத்திட்ட தேவைகளை உரிய முறையில் தயாரித்து கணக்குப் பிரிவுக்கு வழங்குதல்.

- நிதி அமைச்சுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் இடையில் வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்களுக்கேற்ற ஒழுங்குகளைச் செய்தல் மற்றும் நடாத்துதல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்கான கருத்திட்ட முன்மொழிவுகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்தல்.
- வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்காக அமுலாக்கல் அதிகாரிகளுடன் இணைந்து அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டை விடுவிப்பதற்காக கணக்குப் பகுதியுடன் அவசியமான ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல், அத்தகைய கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத்தல்.
- வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம், கருத்திட்ட நடவடிக்கை மற்றும் மேற்பார்வைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் ஆகியவற்றினால் முன்வைக்கப்படும் மாதிரியமைப்பைத் தழுவி முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து வழங்குதல்.

**03. அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையையும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் தயாரித்தல்**

உயர்கல்விப் பிரிவினால் வருடாந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்னேற்ற மீளாய்வு அறிக்கையையும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் தயாரித்தல்.

**04. செயற்பாட்டு மற்றும் கூட்டிணைத் திட்டங்களைத் தயாரித்தலும் கண்காணித்தலும்**

- அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மூலோபாயத் திட்டத்தை தேசிய பொருளாதார கொள்கைப் பணிச்சட்டத்தின் மாற்றங்களுக்கு அமைவாக இற்றைப்படுத்தல்.
- அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் செயற்பாட்டு மற்றும் கூட்டிணைத் திட்டங்களை தயாரித்தல், கண்காணித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் அதற்குத் தேவையான செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல்.
- ஒப்படைக்கப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும்போது அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்களிப்பை வழங்குதல்.

**05. பல்வேறு நிறுவனங்களினால் அவ்வப்போது கோரப்படும் அறிக்கைகளைத் தயாரித்தல்**

- இலங்கை மத்திய வங்கிக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளைத் தயாரித்தல்.
- குடிசன மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டிய தகவல்களை உரிய காலத்தில் வழங்குதல்.
- நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக உயர்கல்வித் துறைக்குரிய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.
- அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களினாலும் அமைச்சினாலும் அடிக்கடி கோரப்படும் அறிக்கைகளைத் தயாரித்தல்.

**06. தரவுகளைத் திரட்டுதல், பகுப்பாய்வுசெய்தல், பேணிவருதல்.**

- பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிக்கு (KPI) அவசியமான தரவுகளைத் திரட்டுதல், தரவுத் தளங்களைப் பேணிவருதல், பகுப்பாய்வுசெய்தல்.
- அமைச்சின் அலுவல்களுக்குத் தேவைப்படும் தரவுகளைத் திரட்டுதல், இற்றைப்படுத்தல், அறிக்கைகளைத் தயாரித்தல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்களுக்கு வருடாந்தம் தேவையான தகவல் தொழில்நுட்ப முறைமைகள், சாதனங்கள், Wi-Fi வசதிகளுடன் தொடர்பான தகவல்களை வருடாந்தம் இற்றைப்படுத்தல் மற்றும் தரவுத்தளமொன்றைப் பேணிவருதல்.

**07. ஏனைய கருமங்கள்**

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழ் ஆராய்ச்சிகளுக்கான முன்மொழிவுகளை அமுல்படுத்தல் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட கடமை அலுவல்களை மேற்பார்வைசெய்தல், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல். அவற்றில் எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத்துதல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
- மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு தேவையான தரவுகளை வழங்குதல்.
- மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கு தேவையான தரவுகளை வழங்குதல்.
- பொருளாதாரக் கொள்கைப் பிரகடனத்திற்குரிய (Economic Policy Statement) முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கான (SDG) திட்டத்தைத் தயாரிப்பதற்கு பங்களிப்பை வழங்குதல்.
- இலங்கை தேசிய மனித வள மற்றும் சேவைக் கொள்கைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு பங்களிப்பை வழங்குதல்.
- யுனெஸ்கோ உதவிகளின் கீழ் பல்கலைக்கழக முறைமையில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படும் ஒத்துழைப்பை வழங்குதல், கருத்திட்டங்களை அமுல்படுத்துதல், கண்காணித்தல், யுனெஸ்கோ அமைப்பினால் கோரப்படும் வினவல்களுக்குப் பதிலளித்தல், முன்னேற்ற அறிக்கைகளை வழங்குதல்.
- யுனெஸ்கோ அமைப்பின் இணையத்தளத்தை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான தரவுகளையும் தகவல்களையும் வழங்குதல்.
- அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய அவதானிப்புகளை வழங்குதல்.
- இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இராசதந்திர பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் தூதராண்மைக் குழுக்களுக்கு உயர்கல்வித் துறைக்குரிய தகவல்களை வழங்குதல்.

**1.5.6.2 2019.01.01 முதல் 2019.12.31 வரையிலான காலப் பகுதியில் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்திட்டங்களுடன் தொடர்பாக 2019 ஆம் ஆண்டின் மூன்று காலாண்டுகளுக்கான முன்னேற்ற அறிக்கையை ஜனாதிபதி செயலகத்திற்கும் 2019 ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்கான முன்னேற்ற அறிக்கையை கருத்திட்ட செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்திற்கும் வழங்குதல்.
- 2019 ஆம் ஆண்டில் கீழ்க்காணுமாறு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

| கருத்திட்டம்/ நிறுவகம் | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் கருத்திட்டங்கள் | 23 |
| வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் | 13 |
| பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 02 |
| இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் | 02 |
| பிக்கு பல்கலைக்கழகம் | 02 |
| பௌத்த மற்றும் பாளி பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 01 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 01 |
| **மொத்தம்** | **44** |

- 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பில் கீழ்க்காணுமாறு செற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்:

| **கருத்திட்டம்** | **உறுப்பினர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டம் | 02 |

- இதற்கு மேலதிகமாக, தற்போது அமுலிலுள்ள ஆசிய அபிவிருத்திக் கருத்திட்டம், உலக வங்கி கருத்திட்டத்திற்கும் வடமேல் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் உரிய 03 செயற்பாட்டுக் குழுக்களுக்காக நிலவிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கருத்திட்டங்களுக்கான செயற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் கீழ்க்காணுமாறு நடாத்தப்பட்டுள்ளன:

| **கருத்திட்டம்** | **கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| களனி, சப்ரகமுவ, ரஜரட்ட, கொழும்பு போன்ற பல்கலைக்கழகங்களுக்கு விஞ்ஞான தொழில்நுட்ப வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் (ADB) | 06 |
| கிளிநொச்சி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் | 04 |
| கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் | 03 |
| உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திக்காக இயல்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் (World Bank) | 02 |
| வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 03 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டம் | 02 |
| **மொத்தம்** | **20** |

- 2017 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிலும் நிதி ஒதுக்கீடுசெய்து வழங்கப்பட்ட 7 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள், 2018 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிலும் நிதிஒதுக்கீடுசெய்து வழங்கப்பட்ட 5 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளும் 2019 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 01 கருத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன.
- 2019 ஆம் ஆண்டில் 22 வெளிநர்டடுக் கருத்திட்டங்கள் திட்டமிடல் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.
- வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்குரிய மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- 2018 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையையும் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தின் மாதாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் மலைநாட்டு மரபுரிமைகள் அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு போன்ற அமைச்சுக்களுக்குப் பெற்றுக்கொடுத்தல்.
- 17 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

## 1.5.7 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

நிறுவனக் கட்டமைப்பு

செயலாளர்
↓
பிரதான உள்ளக கணக்காய்வாளர்
↓
அபிவிருத்தி அலுவலர்- (4)
↓
அலுவலகப் பணி உதவியாளர்-(1)

### 1.5.7.1 உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயற்பணி

**1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை நடாத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைமைப் பதவி அமைச்சின் செயலாளர் வகிப்பதுடன், அமைச்சின் செயலாளரின் தலைமையில் காலாண்டுக்கு ஒருமுறை இக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இக் காலப்பகுதியில் 2019.01.08, 2019.06.03 மற்றும் 2019.12.19 ஆகிய திகதிகளில் இக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்குழுக் கூட்டங்களின்போது –

i. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகளின் சட்ட ரீதியிலான உரித்து மாற்றல் செயற்பாட்டின் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்தல், வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை வழங்கும்போது ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் மற்றும் பொருட்கள் கணக்கெடுப்பு நடாத்துதல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றுக்குரிய தீர்வு யோசனைகளும் அங்கு எடுக்கப்பட்டன.

ii. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் ஊடாக எழுந்துள்ள விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்தல்.

iii. உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளல்.

iv. அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் கருத்திட்டங்களின் வருடாந்த வரவுசெலவுத் திட்ட நிதியின் பயன்பாடு தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகள்.

v. மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்தல்.

vi. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவகங்களினால் கணக்காய்வு மற்றும் ஏனைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் முன்னேற்றத்தை பரீசீலனைக்கு உட்படுத்தல்.

vii. கணக்குக் குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடுதல் மற்றும் அது சம்பந்தமாக தேவையான அலுவல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

viii. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கு அமைவாக செயலாற்றுவதன் மது கவனம் செலுத்துதல்.

ix. அரச செலவுகளைக் குறைப்பதற்கு அரசாங்க உததியோகத்தர்களினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியுள்ளமை.

x. அரசாங்க கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சினைக்குரிய நிலைமைகளும்.

**2. நிதி முகாமைத்துவம்**

இதன் கீழ் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதிவாய்ந்த தன்மையையும் அதன் உறுதிப்பாட்டையும் பரிசோதித்தல், முற்பணக் கணக்கு B பரிசோதனை, மாதாந்த கணக்குப் பரிசோதனைகளை மேற்கொள்ளல், செலவுறுதிச்சீட்டுக்களின் பரிசோதனை, வங்கி இணக்கக்கூற்றுக்களின் பரிசோதனை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பிரச்சினைக்குரிய நிலைமைகள் எழுந்தபோது அவற்றைச் சுட்டிக்காட்டி அவசியமான தீர்வுகள் சிபார்சு செய்யப்பட்டன.

**3. ஆதன முகாமைத்துவம்**

ஆதனக் கட்டுப்பாட்டு நிர்வாக முறையின் போதியதாந்தன்மை பற்றிய பரிசோதனை, ஆதன ஆவணங்களின் துல்லியத்தன்மை பற்றிய பரிசோதனை, பொருட்கள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் பரிசோதனைகள், பொருட்கள் கணக்கெடுப்பின்போது வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதனை ஆராய்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**4. போக்குவரத்து முகாமைத்துவம்**

வாகனப் பராமரிப்பு பதிவேடுகளைப் பேணிச்செல்வதன் பிழையற்றதன்மை பற்றிய பரிசோதனை, எரிபொருள் பயன்பாடு பற்றிய பரிசோதனை, உள்ளக கட்டுப்பாட்டு முறையின் பயனுறுதித்தன்மை ஆகிய பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

**5. பெறுகை முகாமைத்துவம்**

பெறுகை வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளனவா என்பது பற்றிய பரிசோதனை, பெறுகை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை பற்றிய பரிசோதனை மற்றும் அது சம்பந்தமாக பரிமாறப்படும் ஆவணங்கள் தொடர்பான பரிசோதனை.

**2019.01.01 முதல் 2019.12.31 வரையிலான காலப் பகுதியில் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் ஆற்றப்பட்ட செயற்பணிகள்:-**

**1. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்**

யாப்பு ரீதியாகவும் ஏனைய ஏற்புடைத்தாகும் அறிக்கைகளுக்கமையவும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்து ஆராய்தல், உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மற்றும் வழிகாட்டல், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் COPE அறிக்கை ஊடாக வழங்கப்பட்ட சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனதா என்பதைக் கண்டறிதல் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பது தொடர்பாக ஆலோசனை வழங்குதல், விசேட விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்காய்வு ஐனவினாக்களுக்குப் பதிலளித்தல் சம்பந்தமாகக் கண்டறிதல்.

**2. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்**

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை ஆராய்தல், பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வையும் வழிகாட்டலும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் COPE அறிக்கை ஊடாக வழங்கப்பட்ட சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனதா என்பதைக் கண்டறிதல் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பது தொடர்பாக ஆலோசனை வழங்குதல், விசேட விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்காய்வு ஐனவினாக்களுக்குப் பதிலளித்தல் சம்பந்தமாகக் கண்டறிதல்.

### 3. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்

யாப்பு ரீதியாகவும் ஏனைய ஏற்புடைத்தாகும் அறிக்கைகளுக்கமையவும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்து ஆராய்தல், உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மற்றும் வழிகாட்டல், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் COPE அறிக்கை ஊடாக வழங்கப்பட்ட சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனதா என்பதைக் கண்டறிதல் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பது தொடர்பாக ஆலோசனை வழங்குதல், விசேட விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்காய்வு ஐனவினாக்களுக்குப் பதிலளித்தல் சம்பந்தமாகக் கண்டறிதல்.

### 4. மூலதனக் கருத்திட்டங்கள்

கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பீடுசெய்தல், கணக்கீடுகளின் துல்லியத்தன்மையைப் பரிசோதித்தல், நிதியறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் துல்லியத்தன்மையும் அவை உரிய நேரத்தில் தயாரிக்கப்படுகின்றனவா என்பது பற்றிய பரிசோதனை, அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் அமைய அலுவல்கள் இடம்பெறுகின்றனவா என்பதை ஆராய்தல், பெறுகை வழிகாட்டுநெறிகளின்படி பெறுகை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா என்பதற்கான பரிசோதனை ஆகியவற்றுடன் கருத்திட்டங்களின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுகளினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சினைகளுக்குரிய நிலைமைகளுக்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசனை வழங்குதல்.

### 5. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் கீழ் காணப்படும் பல்கலைக்கழகங்களும் ஏனைய நிறுவனங்களும்

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வின் பயன்கூர்தன்மையை மதிப்பீடுசெய்தல், நிதி அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் பிழையற்ற தன்மை மற்றும் அவை உரிய நேரத்தில் தயாரிக்கப்படுகின்றனவா எனப் பரிசோதித்தல், விசேட விசாரணைகளை மேற்கொள்ளல், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் COPE அறிக்கைகள் மூலம் வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்தல் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பது குறித்து ஆலோசனை வழங்கல், கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கும் செயன்முறையைப் பரிசோதித்தல் ஆகிய அலுவல்களை மேற்கொள்ளல்.

### 6. மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வையும் வழிகாட்டலும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளும் COPE அறிக்கைகளும் மூலம் வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆராய்தல், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பது குறித்து அறிவுறுத்தல், விசேட விசாரணைகளை மேற்கொள்ளல், கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல் தொடர்பாக ஆராய்தல்.


### 7. விசேட விசாரணைகள்

மேலே குறிப்பிடப்பட்ட அலுவல்கள் தவிர இனங்காணப்பட்ட பிரச்சினைக்குரிய நிகழ்வுகள் சம்பந்தமாக விசேட விசாரணைகளை மேற்கொண்டு கணக்காய்வு ஐயவினாக்களைச் சமர்ப்பித்தல் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சில பல்கலைக்கழகங்களின் வங்கி இணக்கக்கூற்று பரிசோதனை, முற்பணம் தொடர்பான பரிசோதனை, கணக்கு பரிசோதனை மற்றும் மனுக்களை விசாரித்தல் முதலியன மேற்கொள்ளப்பட்டன.

அதேபோல், அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதையடுத்து, செயலாளரினால் விசாரணைகளை மேற்கொள்வதற்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்துதலும் அவை தொடர்பான அறிக்கைகளை வழங்குதலும், தடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தலும்.

## 1.5.8 அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு

**நிறுவனக் கட்டமைப்பு**




உயர்கல்வி பற்றி நிலவும் உடன்பாடான மனப்பாங்குகள் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் ஒரு பின்புலத்தில் மாணவர்களின் உயர்கல்விக்காக வருடாந்தம் அதிகரிக்கும் கேள்விக்கு ஏற்ற விதத்தில் அரச பல்கலைக்கழக முறைமையில் நிலவும் வாய்ப்புக்களை அதிகரிப்பது சிரமமான ஒரு விடயமாக உள்ளது. ஆதலால், அதற்கான ஒரு மாற்று அணுகுமுறையாக அரச சார்பற்ற உயர்கல்வித் துறையின் ஊடாக கற்கை வாய்ப்புகளை வழங்குவதன் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தைக் கவனத்திற்கொண்டு இந்தத் துறையை அபிவிருத்திசெய்தலும் ஒழுங்குபடுத்தலும் நேரடியாகவே உயர்கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், அதற்காக 2013 ஜனவரி மாதத்தில் அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு தாபிக்கப்பட்டது.

மேலும், கௌரவ உயர்கல்வி அமைச்சரினால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 25(அ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பட்டமளிப்பதற்கான அனுமதி கோரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கும் நடவடிக்கைகளுக்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டு, அந்த அலுவல்களையும் அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு தற்போது அமுல்படுத்தி வருகிறது.

**அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவின் செயற்பொறுப்பு**

I. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியின் செயற்பொறுப்பை நிறைவேற்றுதல்

a) அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களின் ஒழுங்குபடுத்தலுக்குத் தேவையான கொள்கைகள், சட்ட வரையறை மற்றும் ஒழுங்குவிதிகளை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

b) தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு பற்றிய நிலையியற் குழுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், நடாத்துதல் மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்.

c) பட்டமளிப்பதற்கான அங்கீகாரத்தைக் கோரி நிறுவகங்களினால் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்களின் தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

d) பட்டமளிப்பதற்கான அங்கீகாரத்தைக் கோரி அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்களை முன்வைத்துள்ள நிறுவகங்களின் மீளாய்வு நடவடிக்கைகளுக்காக மீளாய்வுக் குழுக்களை நியமித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் நிறுவகங்களுக்கு பட்டமளிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.

e) பட்டமளிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவகங்களின் விபரங்கள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகள் சம்பந்தமாக தகவல்களைப் பேணி வரல், பின்தொடர் நடவடிக்கைகள், இற்றைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

f) பட்டமளிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ள, 05 வருட காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களை மீள் மதிப்பீடுசெய்தல் மற்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டமளிப்பு நிறுவகங்கள் பின்பற்றவேண்டிய ஏனைய தேவைகளை அந்த நிறுவகங்கள் நிறைவேற்றியதனை உறுதிப்படுத்தல்.

II. அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களை நிறுவுதல் தொடர்பாக இலங்கை முதலீட்டு சபைக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

III. அரச சார்பற்ற உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் சம்பந்தமாக பிரஜைகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

IV. வெளிநாட்டு உயர்கல்வி நிறுவகங்களின் ஊடாக சான்றிதழ்களை வழங்குவதற்காக அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்படாத உள்நாட்டு உயர்கல்வி நிறுவகங்களின் ஊடாக நடாத்தப்படும் பாடநெறிகள் சம்பந்தமான தகவல்களைப் பேணிவரல் மற்றும் இற்றைப்படுத்தல்.

V. உயர்கல்வி அமைச்சினால் பட்டமளிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கும் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களில் பயிலும் வெளிநாட்டு மாணவர்களின் வீசா விண்ணப்பங்களை சிபார்சுசெய்தல் சம்பந்தமான அலுவல்களை மேற்கொள்ளல் மற்றும் புதிய செயல்முறைகளை தாபித்தல்.

VI. காலத்திற்கேற்ப அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்கள் தொடர்பாக நிலவும் கொள்கைகள், சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகளை இற்றைப்படுத்தல்.

அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவினால் 2019.01.01 முதல் 2019.12.31 வரையான காலப் பகுதியில் இலங்கையின் அரச சார்பற்ற உயர்கல்வித் துறையின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரம் வருமாறு:-

**1. தரப் பாதுகாப்பு மற்றும் தர உறுதிப்பாடு பற்றிய ஆணைக்குழுவை அமைப்பதற்காக சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.**

தற்போது பட்டமளிப்பதற்கான அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களையும் பல்வேறு உயர்கல்விப் பாடநெறிகளை நடாத்திச்செல்லும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தும் காலத்தின் தேவையின் அடிப்படையில் தரப் பாதுகாப்பு மற்றும் தர உறுதிப்பாட்டு ஆணைக்குழுவை அமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் 2019.04.02 ஆந் திகதி கிடைத்தது. அதனைத் தொடர்ந்து 2019.06.17 ஆந் திகதி வெளியிடப்பட்ட குறித்த சட்டமூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க முன்னர் குறித்த வரைவு பற்றி சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் யோசனைகளுக்கும் அவதானிப்புகளுக்கும அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கிடைக்கப் பெற்ற கருத்துக்களையும் யோசனைகளையும் பாராளுமன்றத்தின் கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசாரியான மேற்பார்வைக் குழு – உயர்கல்வி பற்றிய துணைக்குழுவின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### 2. தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு பற்றிய நிலையியற் குழு (SCAQA)

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் அமைச்சரினால் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் 'குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாக' நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கமைய குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பட்டங்களையும் பட்டமளிப்புக்கான நிறுவகங்களையும் சிபார்சுசெய்யும் பொருட்டு நிறுவப்பட்ட தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு பற்றிய நிலையியற் குழு' 2019.01.01 முதல் 2019.12.31 வரை 10 கூட்டங்களை கூடியுள்ளது. குறித்த கூட்டத்தொடர்களில் எடுக்கப்படும் முடிவுகளை அமுல்படுத்தல், இப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3. 2019 ஆம் ஆண்டில் பட்டமளிப்பிற்கான நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு பட்டமளிப்பு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களும் புதிய விண்ணப்பங்களும்

2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு இதுவரை 18 நிறுவகங்கள் பட்டமளிப்பு நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஈ சொ.்.ப்ட் மெட்ரோ கெம்பஸ் நிறுவகம் 2019 ஆம் ஆண்டில் பட்டமளிப்பு நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட புதிய நிறுவனமாகும். மேலும் இக்காலத்துள் 146 பட்டப் பாடநெறிகளுக்கு பட்டமளிப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த 146 பாடநெறிகளில் பட்டமளிப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிதத 146 பட்டப் பாடநெறிகளில் 09 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் 24 பாடநெறிகள் 2019 ஆம் ஆண்டில் பட்டமளிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1 – பட்டப் பாடநெறிகளின் எண்ணிக்கை** (2019.12.31 அன்றுள்ளவாறு)

| காலம் | இளமாணிப் பட்டம் (Basic Degree) | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (P/G Dip) | கலை முதுமாணி/ விஞ்ஞான முதுமாணி (Masters) | தத்துவ முதுமாணி (M Phil) | கலாநிதி (Ph D) | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2018.01.01 – 2018.12.31 வரை | 82 | 12 | 10 | 10 | 08 | **122** |
| 2019.01.01முதல் 2019.12.31 வரை | 20 | - | 03 | - | 01 | **24** |
| **மொத்தம்** | **102** | **12** | **13** | **10** | **09** | **146** |

### 4. புதிய விண்ணப்பங்களுக்கான மீளாய்வுகள்

ஏற்கனவே பட்டமளிப்பிற்கான நிறுவகங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 18 நிறுவகங்கள் தவிர 13 புதிய நிறுவகங்களினால் பட்டமளிப்பிற்கான நிறுவகங்களாக ஏற்றுக்கொள்ளல் மற்றும் பட்டமளிப்பு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் தாபன ரீதியிலான மீளாய்வுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**4.1 புதிதாக விண்ணப்பித்துள்ள நிறுவகங்கள் பற்றிய விபரங்கள்**

| | |
|---|---|
| (1) நளீமிய்யா இன்ஸ்டிடியுட் ஒப் இஸ்லாமிக் ஸ்டடீஸ் சொசய்ட்டி (இன்கோப்பரே'ன்) | தாபன ரீதியிலான மீளாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. விடய மீளாய்வு இடம்பெற்று வருகிறது. |
| (2) இன்டர்நெ'னல் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் என்ட் டெக்னொலொஜி லிமிடட் | |
| (3) இன்ஸ்டிடியூட் ஒவ் கெமிஸ்ரி சிலோன் | |
| (4) ரோயல் இன்ஸ்டிடியுட் ஒப் கொலொம்பு பிரைவட் லிமிடட் | தாபன ரீதியிலான மீளாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. விடய மீளாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (5) பிஸ்னஸ் மெனேஜ்மென்ட் ஸ்கூல் பிரைவட் லிமிடட் | |

| | |
|---|---|
| (6) இன்டர்நெஹனல் இன்ஸ்டிடியுட் ஒப் ஹெல்த் சயன்ஸ் பிரைவட் லிமிடட் | தாபன ரீதியிலான மீளாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| (7) லங்க நிபோன் பிஸ்டெக் இன்ஸ்டிடியுட் பிரைவட் லிமிடட் | தாபன ரீதியிலான மீளாய்வு இடம்பெற்று வருகிறது. |
| (8) கொலொம்பு ஸ்கூல் ஒப் கன்ஸ்ட்ரக்'ன் டெக்னொலொஜி பிரைவட் லிமிடட் | |
| (9) பெனடிக்ட் கெதொலிக் இன்ஸ்டிடியுட் ஒப் ஹய் எடியுகே'ன் பிரைவட் லிமிடட் | |
| (10) சசெக்ஸ் எடுகேசனல் சர்விஸஸ் லிமிட்டட் | |
| (11) ஶ்ரீ லங்கா ஒன்டிடூட் ஒவ் டெக்ஸ்டைல்ஸ் என்ட் எப்பரல் | |
| 12) ரெபல்ஸ் கொலேஜ் ஒப் டிசைன் என்ட் பிஸ்னஸ் பிரைவட் லிமிடட் | |
| (13) ஒஸ்ட்ரேலியன் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் என்ட் டெக்னொலொஜி பிரைவட் லிமிடட் | தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாட்டுடன் தொடர்புபட்ட நிலையான குழுவினால் பட்டமளிப்பு நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்வதற்கு தகுதி பெறாத ஒரு நிறுவனமாக சிபார்சு செய்யப்பட்டுள்ளது. |

குறிப்பு:

2019.01.01 முதல் 2019.12.31 வரையான காலத்துள் பட்டமளிப்பிற்கான நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தகுதி பெறாத நிறுவனங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன:

1. பெட்டிகலோ கெம்பஸ் பிரைவட் லிமிட்டட்
2. பிரிட்டிஷ் கொலேஜ் ஒவ் எப்லைட் ஸ்டடீஸ் பிரைவட் லிமிட்டட்

அதேபோல், 2019.01.01 முல் 2019.12 31 வரையான காலத்துள் பின்வரும் நிறுவனங்கள் பட்டமளிப்பு நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக செய்த விண்ணப்பங்கள் கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டன.

1. எடியுலின்க் இன்டர்நேசனல் பிரைவேட் லிமிட்டட்
2. இன்பொமெடிக்ஸ் ஒன்டிடியூட் ஒவ் டெக்னோலொஜி பிரைவேட் லிமிட்டட்

ஏற்கனவே பட்டமளிப்புக்கான நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனங்களுள் 12 நிறுவனங்கள் இன்னும் புதிய பாடநெறிகளுக்காக பட்டமளிப்பு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளன. அதன் அடிப்படையில் அண்ணளவாக புதிய புதிய பாடநெறிகளுக்கான சுமார் 76 விண்ணப்பங்கள் பாட மீளாய்வுச் செயன்முறையின் கீழ் காணப்படுகிறது.

01. ஶ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் இன்பொமேசன் ரெக்னோலொஜி (கெரன்டி) லிமிட்டட் (SLIIT)
02. அக்வைனாஸ் கொலேஜ் ஒப் ஹய் எடியுகேஷன் (Acquinas)
03. நெஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மெனேஜ்மன்ட் லிமிடட் (NSBM)
04. கலம்பு இன்டர்நெஷனல் நொட்டிகல் என்ட் இன்ஜினியரின் கொலேஜ் (பிரைவட்) லிமிடட் (CINEC)
05. ஹொரய்சன் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் என்ட் டெக்னொலொஜி பிரைவட் லிமிடட் (Horizon Campus)
06. வரையறுக்கப்பட்ட காட்சு ஹய்லி எட்வான்ஸ் மெடிகல் டெக்னோலொஜி (தனியார்) கம்பனி (KAATSU)
07. நாகாநந்த இன்டர்நெஷனல் இன்ஸ்டிடியூட் போ புடிஸ்ட் ஸ்டடீஸ் (பிரைவட்) லிமிடட்
08. எஸ்.எல்.ரீ.கெம்பஸ் (பிரைவட்) லிமிடட் (SLTC)
09. ஶ்ரீ லங்கா இன்டர்நெஷனல் புடிஸ்ட் எக்கடமி (SIBA)
10. ஶ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் நெனோடெக்னோலொஜி (பிரைவட்) லிமிடட் (SLINTEC)
11. சீகீஸ் கெம்பஸ் (பிரைவட்) லிமிடட் (Saegis Campus)
12. ஈ சொப்ட் மெட்ரோ கெம்பஸ்

மேலும், இன்ஸ்டிடியூட் ஒவ் சாட்டட் எக்கவுன்ட்டன்ட்ஸ் ஒவ் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் பட்டளிப்புக்கான அதிகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறியின் பாடவிதானத்தை மாற்றுவதற்காக அமைச்சின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதனை மீளாய்வுசெய்வதற்காக பாடங்கள் பற்றிய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

**5. அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்கள் சம்பந்தமான தகவல்களைப் பேணிவருதல்.**

பட்டமளிப்பு நிறுவகமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவகங்களின் அலுவல்களை மேற்பார்வை செய்வதை நோக்காகக்கொண்டு அத்தகைய நிறுவகங்களின் பாடநெறிகள், மாணவர்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கி இந்தப் பிரிவினால் தகவல்களைப் பேணிவரல் மற்றும் பின்தொடர் அலுவல்கள் மற்றும் அவற்றினை இற்றைப்படுத்தும் அலுவல்கள் 2019 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6. பட்டமளிப்பு நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 05 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள நிறுவகங்கள் மற்றும் பட்டமளிப்பிற்கான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட பட்டப் பாடநெறிகள் தொடர்பான மீள் மதிப்பீடு**

பட்டமளிப்பு நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 05 வருடங்களைப் பூர்த்திசெய்துள்ள நிறுவனங்கள் மற்றும் பட்டமளிப்பு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட பட்டப் பாடநெறிகளை மீள் மதிப்பீடு செய்யும் பணி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அடையாளம் காணப்பட்ட 06 நிறுவனங்களுக்கு சுய மதிப்பீடு செய்யும் விண்ணப்பமொன்று குறித்துரைக்கப்பட்ட அதிகாரியின் விதிகள், 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விதியின் கீழுள்ள வழிகாட்டுநெறிகளுக்கு அமைய தயாரித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. குறித்த விண்ணப்பங்களின் மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7. இலங்கை தகுதிக்கான வழிகாட்டியின் (SLQF) 05, 06 ஆம் படிநிலைகளுக்குரிய பட்டப் பாடநெறிகளுக்கு இணைப்புப் பாடநெறிகளை (Bridging Course) அறிமுகப்படுத்தல்**

உயர்கல்வி அமைச்சு அடையாளம் கண்டுள்ளவாறு சில பட்டப் பாடநெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான ஆகக்குறைந்த தகைமை குறித்த சிறப்பான பாடத்துறையொன்றுக்கு மட்டும்ட வரையறுக்கப்பட்டுள்ளது. (உதாரணாமாக: கணினியியல் (Computing) பாடத்துறைக்குரிய பட்டப் பாடநெறிகளுக்கான ஆகக்குறைந்த தகைமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 995 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பௌதிகவியல் பாடப்பிரிவில் கற்றுள்ள மாணவர்களுக்கு மட்டுமே.) எனினும் யாதேனுமோர் பட்டப் பாடநெறியைக் கற்பதற்கான ஆகக்குறைந்த தகைமையைப் பூர்த்திசெய்ய முடியுமாயின், கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) எந்தவொரு பாடத்துறையிலும் கற்றுள்ள மாணவர்களுக்கும் அதற்கு வாய்ப்பளிப்பது உகந்ததென அமைச்சினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆகையால், இலங்கை தகுதிக்கான வழிகாட்டியின் (SLQF) 05, 06 ஆம் படிநிலைகளுக்கு இணைப்புப் பாடநெறிகளை அறிமுகப்படுத்தும் ஒரு முறைமைக்காக குழுக்கள் நிறுவப்பட்டன. தற்போது கணினியியல் (Computing) பாடத்துறைக்குரிய பட்டப் பாடநெறிகள், வணிக பாடத்துறைக்குச் சொந்தமான பட்டப் பாடநெறிகளும் உயிரியல் பாடத்துறைக்குரிய பட்டப் பாடநெறிகளுக்கான மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டன. அதற்கமைய குறித்த இணைப்பு பாடநெறிகளுக்கு பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பாடநெறிகளை நடாத்துமாறு அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**8. டிஜிட்டல் ஆவண முகாமைத்துவ மற்றும் உள்ளக வேலைப்பாய்ச்சல் முறைமையை கணினிமயப்படுத்தல் மற்றும் உபகரணப் பலகையொன்றை (Dash Baord) ICTA நிறுவனத்தின் உதவியுடன் அறிமுகப்படுத்தல்**

வினைத்திறனானதும் பயன்கூர்தன்மைவாய்ந்ததுமான வேலைப்பாய்ச்சல் முறைமையை உருவாக்கும் நோக்குடன் அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவினால் அமுல்படுத்தப்படும் அரச சார்பற்ற உயர்கல்வி

நிறுவுகங்களை ‘பட்டமளிப்புக்கான நிறுவகமாக’ ஏற்றங்கீகரித்தலும் பட்டமளிப்புக்குரமன அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் செயன்முறைக்காக டிஜிட்டல் ஆவண முகாமைத்துவத்தையும் உள்ளக வேலைப்பாய்ச்சல் முறைமையையும் கணினிமயப்படுத்தலும் உபகரணப் பலகையொன்றை **(Dash Baord) ICTA** நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**9. உயர்கல்வி நிறுவகங்களுக்கு ஆகக்குறைந்த தராதரங்களை உருவாக்குதல்.**

அரச பல்கலைக்கழகங்களின் வரையறுக்கப்பட்ட இடவசதி காரணமாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சிததியடைந்து பல்கலைக்கழகங்களுக்கு தகுதிபெறும் மாணாக்கர்களில் அரச பல்கலைக்கழகங்களுக்கு வாய்ப்புக் கிட்டுவது சுமார் 30,000 மாணாக்கர்களுக்கு அளவினருக்கு மாத்திரமே. அரச பல்கலைக்கழக பிரவேச அனுமதி கிடைக்காத மாணாக்கர்களில் சுமர்ர் 80மூ அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களில் உயர்கல்வியைப் பெற நாடுகின்றனர்.
இந்த அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களின் பண்புத்தரம் தொடர்பாக உயர்கல்வி அமைச்சு பொதுமக்களுக்கு உறுதியளிக்க வேண்டும். இதற்காக குறித்துரைக்கப்பட்ட அதிகாரி என்ற வகையில் உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் பணிப்புடன் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களை மதிப்பீடு செய்வதற்கான கொள்கைகளையும் அளவுகோல்களையும் அமைப்பதற்குமான அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு 2019-01-09 ஆந் திகதி நியமிக்கப்பட்டது. அக்குழுவினால் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களில் காணப்படவேண்டிய ஆகக்குறைந்த தராதரங்கள் (அைைஅரஅெ ளவயனெயசனள) பற்றிய அளவுகோல்கள், நியமங்கள் மற்றும் அதற்கான கொள்கைகள் பற்றிய ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு பற்றிய நிலையியற் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**10. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்/ பட்டமளிப்பதில் ஈடுபடும் நிறுவகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பட்டப் பாடநெறிகளை நடாத்தும் உயர்கல்வி நிறுவகங்களைப் பதிவுசெய்தல்**

அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கான அமைச்சரவை முடிவாக தரப் பாதுகாப்பு மற்றும் தர உறுதிப்பாட்டு ஆணைக்குழுவை நிறுவுவதைத் துரிதப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**11. உயர்கல்விக்கான முதலீட்டுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல்**

முழுதளாவியதாக நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் அடிப்படையில் இயங்கும் உயர்கல்வி நிறுவகங்களை இலங்கையில் நிறுவும்போது, முக்கியமாக பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் குறித்த முதலீடுகளுக்கான அனுமதியளிப்பதற்கு முதலீட்டுச் சபையுடன் இணைந்து உயர்கல்விக்கான முதலீட்டுக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

I. முதலீட்டு எல்லை (மில்லியன் டொலர்களில்)
II. குறித்த வெளிநாட்டுத் தாய்ப் பல்கலைக்கழகம்/ கல்வி நிறுவகத்திற்கு உரிய வரவேற்பு.
III. வெளிநாட்டு மாணாக்கர்களை ஆட்சேர்க்கும் ஆகக் குறைந்த எல்லை.
IV. இந்நாட்டில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளிள் அளவு.

அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட வட்டியில்லாத மாணாக்கர் கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**வட்டியில்லாத மாணாக்கர் கடன் திட்டம்**

2017 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவொன்றுக்கு அமைய க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்ற மாணாக்கர்களுக்கு உயர்கல்வியில் பிரவேசிக்கும் வாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடன் வட்டியில்லாத மாணாக்கர் கடன் திட்டம் 2017 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகிறது. மாணாக்கர் கடன் திட்டத்தின் கீழ் அரச பல்கலைக்கழகமொன்றுக்கு அனுமதிபெறும் வாய்ப்புக் கிடைக்காத அத்துடன் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களின் பாடநெறிக் கட்டணங்களைச் சுமக்க முடியாத நிலையிலுள்ள மாணாக்கர்களுக்கு, அவ்வாறு தொடரும் முழு பாடநெறிக்காக ரூ.8000,000 ஆகக்கூடிய கடன் தொகையொன்று வழங்கப்படும். இப்பட்டப் பாடநெறிகளை வழங்குவதற்கக உயர்கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 10 அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களின் 50 பட்டப் பாடநெறிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதார மற்றும் மனிதவள அபிவிருத்திக்கு அத்தியாவசியமான உயர்மட்ட மனித மூலதனமொன்றை ஏற்படுத்துவதற்கான வசதிகள் வழங்கப்படு அதேவேளை இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்வியில் ஈடுபடுவதற்கும் அதிக வாய்ப்புகள் வழங்கப்படும். 2015 மற்றும் 2016 க.பொ.த. (உயர்தர) தகைமை பெற்ற மாணாக்கர்கள் முதலாவது, இரண்டாவது கற்கை அணிகளின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்டனர். 2017 க.பொ.த. (உயர்தரம்) முடிவுகளின் அடிப்படையில் மூன்றாம் கற்கை அணி 2019 ஆம் ஆண்டில் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன், தற்போது 3443 மாணாக்கர்கள் பின்வரும் 10 அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களில் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

01. ஸ்ரீ லங் நெஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மெனேஜ்மன்ட் லிமிடட் (NSBM)
02. கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்பொமேசன் டெக்னொலொஜி (கெரன்டி) லிமிடட் (SLIIT)
03. கலம்பு இன்டர்நெஷனல் நொட்டிகல் என்ட் இன்ஜினியரின் கொலேஜ் (பிரைவட்) லிமிடட் (CINEC)
04. ஸ்ரீ லங்கா இன்டர்நெஷனல் புடிஸ்ட் அகடமி (SIBA)
05. த இன்ஸ்டிடியுட் ஒப் சார்டட் எக்கவுன்டன் ஒப் ஸ்ரீ லங்கா (ICASL)
06. சணச கெம்பஸ் லிமிடட் (Sanasa)
07. ஹொரய்சன் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் என்ட் டெக்னொலொஜி பிரைவட் லிமிடட் (Horizon Campus)
08. வரையறுக்கப்பட்ட காட்சு ஹைலி எட்வான்ஸ் மெடிகல் டெக்னொலொஜி (தனியார்) கம்பனி (KAATSU)
09. எஸ்.எல்.ரீ.கெம்பஸ் (பிரைவட்) லிமிடட் (SLTC)
10. சீகீஸ் கெம்பஸ் (பிரைவட்) லிமிடட் (Saegis Campus)

இலங்கை வங்கியினால் கடன் தொகையை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் 2069 மாணாக்கர்களுக்கு 1605.01 மி.ரூ. கடன் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது அணிகளுக்கு பாடநெறிக் கட்டணங்களுக்கான இக்கடன் தொகைக்கு மேலதிகமாக, மாணாக்கர்களின் பொதுவான செலவுகளை ஈடுசெய்துகொள்வதற்கான வட்டியில்லாக் மாணவர் உதவி கடன் தொகை 2764 மாணாக்கர்கள் மத்தியில் வழங்கப்பட்டதுடன், தற்போது அவர்கள் காலாண்டு அடிப்படையில் ரூ.18,750 தொகையைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இக்கடன் தொகைகளுக்கான வட்டியாக உயர்கல்வி அமைச்சினால் 2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நாளொன்றுக்கு 64.83 மி.ரூ. தொகை இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மாணாக்கர்களுக்கான கடன் திட்டம் பற்றிய பிரசார நடவடிக்கைகள் அரச செய்தித்தாள்கள், வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி செய்தியறிக்கையில் அசைந்தோடும் செய்தி வரிகளை (Newsline) வெளியிடுதல், நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு இணையத்தளம், க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்கு மின்னணு அஞ்சல் செய்திகளை அனுப்புதலும் அனைத்து தொலைபேசி வலையமைப்புகள் வழியே குறுஞ்செய்திகளை அனுப்புதல் முதலிய முறைமைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. “Enterprise Sri Lanka” நிகழ்ச்சித்திட்டத்தை ஊக்கப்படுத்துமு நோக்கத்துடன் நிதி அமைச்சினால் அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சிகள் இரண்டு மாணவர் கடன் பிரிவின் அறிவுறுத்தும் கூடங்கள் பேணிவரப்பட்டதுடன், வட்டியில்லா மாணவர் கடன் திட்டம் பற்றிய சாதாரண பெதுமக்களை அறிவுறுத்துவதற்காக குருணாகல், இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் ஒழுங்குசெய்யப்பட்ட “Edu Expo” கண்காட்சியில் பங்குபற்றியது. இதற்கு மேலதிகமாக, இலக்குக் குழுவை அறிவுறுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சின் ஆசிரிய ஆலோசகர்களையும் தொழில்சார் வழிகாட்டு அலுவலர்களையும் திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழிற் பயிற்சி அமைச்சின் மாவட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தும் 11 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும், மாணாக்கர் கடன் திட்டத்தின் பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களையும் உள்ளடக்கி வெளிக்கள சுற்றுலாக்களையும் கண்காணிப்பு அமர்வுகளையும் ஒழுங்குசெய்வதன் மூலம் மாணாக்கர் கடன் பிரிவினால் இக்கடன் திட்டத்தின் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேற்பார்வை அறிக்கைகள் நிறுவகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை உரிய அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களின் முகாமைத்துவத்துடன் கலந்தாலோசித்த பின்பு குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, தமது உயர்கல்விக்கான அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் மாணாக்கர்களுக்கு உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இந்த மாணாக்கர் கடன் திட்டத்தை முன்னேற்றுவதற்குரிய நவீனத்துவங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனிடையே தொடரரா பிரயோக முறைமை (Online application system), தரவுத்தளம் (Database) என்பவற்றை முன்னேற்றுவதற்காகவும் முழு நிகழ்ச்சித்திட்டத்தையும் முன்னேற்றுவதற்கும் பெறுபேற்று முன்னேற்றத்தைப் பரீட்சிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.6. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் - 2019

2019 ஆம் ஆண்டில் உயர்கல்வித் துறைக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடும் பயன்பாடும் பற்றிய விபரம் கீழ்த் தரப்பட்டுள்ளது:-

| **நிறுவகம்** | | **மீண்டெழும் செலவினம் (ரூ.மி.)** | | | **மூலதனச் செலவினம் (ரூ.மில்.)** | | | **மொத்தச் செலவு (ரூ.மி.)** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **நிதி ஏற்பாடு** | **செலவு** | % | **நிதி ஏற்பாடு** | **செலவு** | % | **நிதி ஏற்பாடு** | **செலவு** | % |
| **பல்.மானி.ஆ.குழு** | | **46,076** | **45,544** | **99** | **13,120** | **10,010** | **76** | **59,196** | **55,554** | **94** |
| **உயர்கல்வி அமைச்சு** | | **1,760** | **1,742** | **99** | **7,308** | **6,586** | **90** | **9,068** | **8,328** | **92** |
| **வெளிநாட்டு** | | **-** | **-** | **-** | **8,288** | **5,387** | **65** | **8,288** | **5,387** | **65** |
| **வரவு செலவுத் திட்ட மு.மொ.** | **உ.க.அ.** | **230** | **36** | **16** | **2,146** | **930** | **43** | **2,376** | **966** | **41** |
| | **பல்.க.மா. ஆ.கு.** | **-** | **-** | **-** | **860** | **810** | **94** | **860** | **810** | **94** |
| **மொத்த நிதி ஏற்பாடு** | | **48,066** | **47,322** | **98** | **31,722** | **23,723** | **75** | **79,788** | **71,045** | **89** |

2019 ஆம் ஆண்டில் உயர்கல்வி அமைச்சுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த மூலதனச் செலவான 31,722 மில்லியன் ரூபா தொகையில் 37% நிர்மாணக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் அது 57% ஆகக் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் நிர்மாணக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் மதிப்பீட்டுக் கிரயம் 146,276 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட 172 கருத்திட்டங்களுக்காக 11,851 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் கிரயமான 116,749 மில்லியன் ரூபா தொகையின் கீழ் 170 கருத்திட்டங்களுக்காக 18,507 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது

2017 ஆம் ஆண்டில் மற்றும் 2018 ஆம் ஆண்டில் நிர்மாணக் கருத்திட்டங்களுக்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்ட விதம் பற்றிய விபரம் உயர்கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செலவுத் தலைப்பின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**உயர்கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகள்**

| **பல்கலைக்கழகம்/ நிறுவகம்** | 2018 | | | | 2019 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **கருத் திட்ட. எண்.** | **நிதி ஏற்பாடு** | **செலவு** | **வீதம்** | **கருத் திட்ட. எண்.** | **நிதி ஏற்பாடு** | **செலவு** | **வீதம்** |
| பிக்கு | 05 | 152 | 132 | 87 | 05 | 223 | 160 | 72 |
| பௌத்த, பாளி | 03 | 77 | 77 | 100 | 05 | 231 | 168 | 73 |
| உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் | 11 | 200 | 200 | 100 | 05 | 433 | 387 | 89 |
| வெளிநாட்டு/ உள்நாட்டு கடன் மற்றும் மானியங்களின் கீழ் செயற்படுத்தப்படும் கருத் திட்டங்கள் | 10 | 3,556 | 1,174 | 33 | 08 | 1,480 | 1,015 | 69 |
| வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்கள் | 06 | 1,442 | 270 | 21 | 10 | 778 | 105 | 13 |
| விடுதி நிர்மாணக் கருத் திட்டம் | 01 | 2,044 | 2,044 | 100 | 01 | 505 | 505 | 100 |
| **மொத்தம்** | **36** | **7,471** | **3,897** | **53** | 34 | 3,650 | 2,340 | 64 |

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செலவுத் தலைப்பின் கீழ் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான நிதி ஏற்பாடு**

| பல்கலைக்கழகம் /நிறுவகம் | 2018 | | | | 2019 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கருத் திட்ட. எண். | நிதி ஏற்பாடு | செலவு | வீதம் | கருத் திட்ட. எண். | நிதி ஏற்பாடு | செலவு | வீதம் |
| பேராதனை | 18 | 535 | 535 | 100 | 22 | 424 | 395 | 93 |
| கொழும்பு | 04 | 815 | 768 | 94 | 06 | 551 | 391 | 71 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர | 07 | 224 | 141 | 63 | 06 | 261 | 102 | 39 |
| களனி | 09 | 500 | 415 | 83 | 09 | 311 | 239 | 77 |
| மொரட்டுவை | 13 | 431 | 192 | 45 | 14 | 315 | 125 | 37 |
| ருஹுணு | 05 | 627 | 370 | 59 | 09 | 331 | 54 | 16 |
| யாழ்ப்பாணம்/ வவுனியாவளாகம் | 10 | 572 | 499 | 87 | 08 | 226 | 195 | 86 |
| கிழக்கு | 03 | 145 | 145 | 100 | 04 | 187 | 120 | 53 |
| ரஜரட்ட | 05 | 435 | 145 | 33 | 05 | 319 | 189 | 59 |
| சப்ரகமுவ | 14 | 278 | 224 | 81 | 08 | 280 | 280 | 100 |
| தென் கிழக்கு | - | - | - | - | 02 | 37 | -* | - |
| வயம்ப | 10 | 146 | 88 | 60 | 11 | 168 | 61 | 36 |
| அழகியற் கலைகள் | 04 | 222 | 79 | 36 | 04 | 180 | 84 | 47 |
| ஊவா வெல்லஸ்ஸ | 04 | 87 | 35 | 40 | 04 | 226 | 222 | 98 |
| திறந்த | 01 | 40 | 40 | 100 | 01 | 30 | 30 | 100 |
| திருகோணமலை வளாகம் | 05 | 227 | 105 | 46 | 04 | 356 | 290 | 81 |
| மருத்துவ பட்.பின்.படி.நிறு. | 01 | 535 | 405 | 76 | 01 | 452 | 397 | 88 |
| விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறு. | 02 | 100 | 16 | 16 | 02 | 47 | 4 | 6 |
| விஞ்ஞான பட்.பின்.படி.நிறு. | 01 | 44 | 38 | 87 | 01 | 10 | 10 | 100 |
| கொழும்புப் பல்கலைக்கழகத்தி விவசாய தொழில்நுட்ப, கிராமவியல் | 01 | 50 | 49 | 97 | 01 | 22 | 22 | 100 |
| பௌத்த, பாளி பட்டபின்படிப்பு நிறுவகம | 01 | 90 | 25 | - | 01 | 125 | 125 | 100 |
| பணியாட்டொகுதி உத். குடிமனைக் கருத்திட்டம் | 01 | 80 | 80 | 100 | 01 | 35 | 15 | 43 |
| தொழில்நுட்ப பீடக் கருத்திட்டம் | 11 | 3,123 | 2,613 | 84 | 11 | 2,458 | 2,110 | 86 |
| வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்கள் | 04 | 1,730 | 1,014 | 59 | 04 | 850 | 806 | 95 |
| **மொத்தம்** | **134** | **11,036** | **8,021** | **73** | **138** | **8,201** | **6,141** | **75** |

(மூலம் - நிர்மாணக் கருத்திட்டங்கள் பற்றிய பல்கலைக்கழக அறிக்கை 2018.12.31 முதல் 2019.12.31 வரையிலானது)

**நிர்மாணக் கருத்திட்டங்களின் அமைப்பு - 2019**

| | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.மில்.) | நிதி ஏற்பாடு (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| இறுதி பற்றுச்சீட்டுக்கள் தீர்க்கப்படவிருக்கும் கருத்திட்டங்கள் | 58 | 21,586 | 1,792 | 1,392 |
| 2019 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் | 22 | 5,799 | 1,450 | 1,240 |
| 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் | 66 | 81,959 | 7,390 | 5,608 |
| 2019 ஆம் ஆண்டின் புதிய கருத்திட்டங்கள் | 27 | 36,932 | 1,219 | 241 |
| **மொத்தம்** | **172** | **146,276** | **11,851** | **8,344** |

**2019 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள்**

2019 ஆம் ஆண்டில் 22 கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. மேற்படி 22 கருத்திட்டங்களில் 09 கற்கைப்பீட கட்டிடங்கள், 05 விடுதிகளும் உத்தியோகபூர்வ குடிமனைகளும், 04 தொழில்நுட்ப கற்கைப் பீடங்கள், 04 ATI நிலையங்கள் என்பன முக்கியமாக உள்ளடங்கும். 2019 ஆம் ஆண்டில் நிர்மாணக் கருத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்கள் சிலவற்றின் படங்கள் சில கீழ் தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள கருத் திட்டங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய ஆவணம் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.



பொறியியல் தொழில்நுட்ப ஆய்வுகூடக் கட்டிடம்,
வயம்ப பல்கலைக்கழகம், குளியாபிட்டிய.
மதிப்பீட்டுக் கிரயம் 282.0 மி.ரூ.



தேகாரோக்கிய நிலையம் -
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
மதிப்பீட்டுக் கிரயம் 242.0 மி.ரூ.



நிருவாகக் கட்டிடம் - கட்டம் 11
வயம்ப பல்கலைக்கழகம், குளியாபிட்டிய.
மதிப்பீட்டுக் கிரயம் 290.0 மி.ரூ.




விவசாய மற்றும் தோட்ட முகாமைத்துவ பீடம் - கட்டம் 111
வயம்ப பல்கலைக்கழகம், குளியாபிட்டிய.
மதிப்பீட்டுக் கிரயம் 233.0 மி.ரூ.



தொழில்நுட்பக் கற்கைகள் பிரிவுக்கான கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம். மதிப்பீட்டுக் கிரயம் 450.8 மி.ரூ.



தொழில்நுட்பக் கற்கைகள் பிரிவுக்கான கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம். மதிப்பீட்டுக் கிரயம் 130 மி.ரூ.

**நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்திட்டங்கள்**

2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் கருத் திட்டங்களின் எண்ணிக்கை 67 ஆகும். மதிப்பீட்டுக் கிரயம் 82,281 மில்லியன் ரூபா கொண்ட இக்கருத்திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டில் 9,556 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் இந்நிதி ஏற்பாட்டின் நிதிசார் முன்னேற்றம் 5,608 மில்லியன் ரூபாவாகும். மேலும் இந்தக் கருத்திட்டங்களில் 15 கருத்திட்டங்களின் பௌதீக ரீதியிலான முன்னேற்றம் 80% இனை தாண்டியுள்ளது.

அரச பல்கலைக்கழக முறைமைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை முக்கியமாக அதிகரிக்கும் மருத்துவம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், முகாமைத்துவம் ஆகிய துறைகளை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பீடங்கள் முக்கியமாக இதில் அடங்கும். அதாவது தொழில்நுட்ப பீடக் கருத்திட்டம், வயம்ப மருத்துவ பீடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டம் ஆகியன இதற்கான உதாரணங்களாகும். இது தவிர வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்காக நிர்மாணிக்கப்படும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கட்டிடத்தொகுதி ஆகிய கருத் திட்டங்களு் இதிலடங்கும். நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்திட்டங்களின் பெயர்ப்பட்டியல் இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 1000 மில்லியன் ரூபாவைத் தாண்டும் சில கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பப்பட்டுள்ளது.

**01. தொழில்நுட்ப பீடங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டம்**

வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டமொன்றான இக்கருத்திட்டம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. தொழில்நுட்ப பாடத்துறையில் புதிய பாடநெறிகளை அமுலுப்படுத்துவதற்காக உத்தேச புதிய பீடங்களுக்கும் தற்போதுள்ள பீடங்களின் புதிய திணைக்களங்களுக்கு உட்பட்டடமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்வதற்கு 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செலவுத் தலைப்பின் கீழ் 3100 மி.ரூ. நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந் நிதி ஏற்பாட்டின் கீழ் நிர்மாணப் பணிகளுக்காக மட்டும் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளின் முன்னேற்றம் கீழ் காட்டப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் நான்கு பல்கலைக்கழகங்களின் பீடங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த பீடங்களின் படங்களை 2019 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழில்நுட்ப பீடங்களின் படங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.**



பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரினத் தொகுதி தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கட்டமைப்புக்கள் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 525 மி.ரூ.



கட்கைக் கட்டிடங்கள் பகுதி C – தொழில்நுட்ப பீடம் - கொ(மம்பப் பல்கலைக்கமகம்

**தொழில்நுட்ப பீடங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டம் (2019.12.31)**

| பல்கலைக் கழகம் | கருத்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | திரண்ட செலவினம் | திரண்ட பௌதிக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| ஸ்ரீ ஜயவர்தனபுர | தொழில்நுட்ப பீட கட்டிடம் | 3,073.5 | 2,043.0 | 86 |
| யாழ்ப்பாணம் | பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரினத் தொகுதி தொழில்நுட்பத்திற்கான கட்டிடமும் சம்பந்தப்பட்ட கட்டமைப்புக்களும் | 525.0 | 342.0 | 65 |
| வவுனியா | பிரயோக விஞ்ஞான பீடத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கைப் பிரிவுக்காக இரு மாடிக் கட்டிடமும் சம்பந்தப்பட்ட கட்டமைப்புக்களும் | 200.0 | 200.0 | 100 |
| ரஜரட்ட | தொழில்நுட்பக் கற்கைப் பிரிவுக்கான கட்டிடத் தொகுதி கட்டம் - II, III | 438.0 | 41.0 | 10 |
| றுஹுணு | தொழில்நுட்பக் கற்கைப் பிரிவு, விஞ்ஞான பீடம் | 691.8 | 604.1 | 95 |
| கொழும்பு | தொழில்நுட்ப பீடத்தை நிர்மாணித்தல் | 2,087.0 | 1,261.0 | 70 |
| வயம்ப | பொறியியல் தொழில்நுட்ப பட்ட நிகழச்சித் திட்டத்தை அறிமுகஞ்செய்வதற்காக ஆய்வுகூடக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - குளியாபிட்டிய | 282.0 | 215.5 | 100 |
| வயம்ப | விவசாயம் மற்றும் தோட்ட முகாமைத்துவ பீடம் கட்டம் - III | 233.0 | 177.3 | 100.0 |
| ஊவா | தொழில்நுட்ப துறை பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி - 2016 (நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல்) | 316.0 | 217.3 | 82 |
| கிழக்கு | உயிரினத் தொகுதி தொழில்நுட்ப கட்டிடத் தொகுதியொன்றை திட்டமிட்டு நிர்மாணித்தல் | 239.5 | 228.3 | 100 |
| தென் கிழக்கு | தொழில்நுட்பக் கற்கைப் பிரிவுக்காக கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் | 450.8 | 418.0 | 100 |
| **மொத்தம்** | | **8,223.3** | **5,745.5** | |

## 02. மருத்துவ பீடத்தை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் - வயம்ப பல்கலைக்கழகம் (2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்)

வயம்ப பல்கலைக்கழகத்தின் குளியாபிட்டிய வளவிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திலும், போதனா வைத்தியசாலையாகப் பயன்படுத்தப்படும் குளியாபிட்டிய தள வைத்தியசாலையிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்துள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டுவந்த 28 ஏக்கர் காணியைப் பயன்படுத்தி மருத்துவ பீடம் தாபிக்கப்பட்டது.

காணிக்குரிய இழப்பீட்டைச் செலுத்துவதற்காக 70 மில்லியன் ரூபாவும், மருத்துவ பீட கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2,341.4 மில்லியன் ரூபாவும், தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 818 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 3,229.4 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க இக்கருத்திட்டத்தை 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நான்கு கட்டங்களாக அமுல்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் கீழ் நான்கு ஆய்வுகூடங்கள், நான்கு மாடிகளைக்கொண்ட கட்டிடமொன்று, நிருவாகக் கட்டிடம், பணியாட்டொகுதியினருக்கான உத்தியோகபூர்வ குடிமனைகள், தகவல் தொழில்நுட்ப நிலையம், கேட்போர்கூடம், நூலகம், விடுதி, உணவுச்சாலை, சுகாதார நிலையம், உடற்பயிற்சி நிலையம் போன்ற கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்த மருத்துவ பீடத்திற்கு ஒரு வருடத்தில் 75 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆண்டு இறுதியில் இக்கருத்திட்டத்தின் 90% பணிகள் பூர்த்தியடைந்துள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செலவுத் தலைப்பின் கீழ் நிதியேற்பாடு செய்யப்படும் இக்கருத்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டில் 600 மி.ரூ. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவ பீடத்தின் இன்றைய முன்னேற்றத்தைக் காண்பிக்கும் சில படங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.






## 03. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத்தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்தக் கருத்திட்டத்திற்காக அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்துடன் (KFAED) 2016.03.24 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட 940 ஆம் இலக்க கடன் ஒப்பந்தத்தின் ஊடாக 10 மில்லியன் குவைட் தினார் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 6,354 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன் மொத்த திரண்ட செலவினம் 786 மி.ரூ. ஆகும். 2019 ஆம் ஆண்டில் இந்தக் கருத்திட்டத்திற்காக 858.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கருத்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் 25% ஆகும்.

இந்தக் கருத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் மருத்துவப் பட்டத்திற்காக 100 மாணவர்களும், தாதிப் பட்டத்திற்காக 70 மாணவர்களும், மருந்துக் கலவையாளர் பட்டத்திற்கு 20 மாணவர்களும், பொதுச் சுகாதாரம் பற்றிய பட்டத்திற்கு 20 மாணவர்களும் என்ற அடிப்படையில் வருடாந்தம் இந்தப் பீடத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு பல்கலைக்கழகத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது.

### 04. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திக் கருத்திட்டம்

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாரியளவான கருத்திட்டமாக இந்தக் கருத்திட்டத்தைக் குறிப்பிடலாம். ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்தக் கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம 26,400 மில்லியன் ரூபாவாகும். இதில் 23,200 மில்லியன் ரூபா ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழும், மீதித் தொகை உள்நாட்டு நிதியின் கீழும் நிதியீட்டம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தின் கீழ் களனி, சப்ரகமுவ, ரஜரட்ட ஆகிய பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை நிறுவுவதற்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் தேவையான தளபாடங்கள், உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் தேவையான மென்பொருள்களைக்கொண்ட முழுமையான கட்டிடத் தொகுதியொன்று நிறுவப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்களை ஆரம்பிப்பதன் மூலம் 850 மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்படும்.

**கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்:**

- புதிய தொழில்நுட்ப கற்றல் மற்றும் ஆராய்ச்சிச் சூழலை உருவாக்குதல்.
- தரமான மற்றும் கைத்தொழில்களுடன் தொடர்பான உயர் தொழில்நுட்பக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கைத்தொழில்களுடனான தொடர்புகளையும் சர்வதேச ஒத்துழைப்புகளையும் பலப்படுத்தல்.
- பீடங்களின் முகாமைத்துவ இயலளவைப் பலப்படுத்தல்
- புதிய உயர்கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதில் உதவுதல்.

2019 ஆம் ஆண்டு இறுதியளவில் இக்கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள 03 தொழில்நுட்ப பீடுங்களினதம் பொறியியல் பீடத்தினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 05. வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (WUTDP)

வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (WUTDP) நோக்கம், பல்கலைக்கழக சமூகத்திற்கும் பல்கலைக்கழகத்தை அண்டியதாக வாழும் சமூகங்களுக்கிடையில் நெருங்கிய இடைத்தொடர்புகளை மேம்படுத்துவதன் மூலமும் நாட்டின் உயர்கல்வி முறைமை ஊடாக வழங்கப்படும் வசதிகள் மூலம் கிராமப்புற - நகர்ப்புற தொடர்புகளைப் பலப்படுத்துவதன் மூலம் வயம்ப பல்கலைக்கழகம் அமைந்துள்ள வளவைச் சூழவுள்ள பாரியளவு பரப்பளவைக்கொண்ட பிரதேசமெங்கும் சிறப்பான அபிவிருத்தியின் தாக்கமொன்றை ஏற்படுத்துவதாகும்.

வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் பின்வரும் நான்கு பகுதிகளைக் கொண்டதாகும்

(1) பல்கலைக்கழகக் கட்டிடங்களின் சுமார் 20,000 சதுர மீட்டர் பரப்பளவைக்கொண்ட சிவில் வேலைகள்.
(2) தற்போது நடைமுறைப்படுத்தப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அத்தியாவசியமான உபகரணங்களின் பெறுகை.
(3) நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான மதியுரைச் சேவைகள்.
(4) வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் அலுவல்களை மேலதிக வேலையாகக் கருதி கருத்திட்டத்தின் மொத்த செலவினம் 60 மில்லியன் அமெரிக்க டொலர் (225 மில்லியன் ரூபா) ஆகும். அதில் சுமார் 28 மில்லியன் அமெரிக்க டொலர் (105 மில்லியன் ரூபா) அபிவிருத்திக்கான சவூதி அரேபிய அமைப்பினால் நிதியீட்டம் செய்யப்படும்.

### 06. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன் சிகிச்சையகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

உயர்கல்வி அமைச்சின் உள்ளூர் நிதியங்களின் கீழ் அமுல்படுத்தப்படும் ஒரு பாரியளவு கருத்திட்டமாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக நிர்மாணிக்கப்படும் முன் சிகிச்சையகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தைக் குறிப்பிடலாம். இக்கருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள், இலங்கை வங்கியின் கடனுதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகையால், நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின்னர் இக்கடன் தொகை செலுத்தத் தீர்க்கப்படவுள்ளதுடன், அதுவரை இந்நிதிஒதுக்கீடுகளை உயர்கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பொன்றின் கீழ் உள்ளடக்கப்படவில்லை.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு நிர்மாணிக்கப்படும் முன் சிகிச்சையளகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம் மூன்று கட்டங்களாக அமுல்படுத்தப்படுகிறது. அதன் கீழ் கட்டம் I மற்றும் II நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மதிப்பீட்டுக் கிரயம் 6,604 மி.ரூ. பெறுமதிகொண்ட கட்டம் III இன் நிர்மாணப் பணிகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் இந்தக் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்படவுள்ளன. இதன் இன்றைய முன்னேற்றத்தைக் காட்டும் படங்களைக் கீழ்க் காணலாம்.





### 2019 ஆம் ஆண்டில் முடுக்கிவிடப்பட்ட புதிய நிர்மாணக் கருத்திட்டங்கள்

மதிப்பீட்டுக் கிரயம் 37,168 மி.ரூ. பெறுமதிகொண்ட 25 புதிய கருத்திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டில் 1,623 மி.ரூ. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படும் மதிப்பீட்டுக் கிரயம் 1,000 மி.ரூ. பெறுமதிகொண்ட 01 கருத்திட்டங்களும் 10 கற்கைப் பீடக் கட்டிடங்களும் நிருவாகக் கட்டிடங்களும் விரிவுரை மண்டபங்களும் இந்நிர்மாணக் கருத்திட்டங்களில் முக்கியமாக உள்ளடங்கும். இவ்வாண்டில் நிரமாணப் பணிகளை ஆரம்பித்த கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய ஆவணத்தை பின்னிணைப்பு 03 இல் காணலாம். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதி விலைப்பட்டியல்களைச் செலுத்துவதற்கான கருத்திட்ட ஆவணம் பின்னிணைப்பு 04 மூலம் காட்டப்பட்டுள்ளது

## 1.6.2 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

### 1. ருஹுணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பன்னிரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

2017 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட ருஹுணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பன்னிரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டிலும் 320 மி.ரூ. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 7,750 சதுர மீற்றர் விஸ்தீரணம் கொண்ட இக்கட்டிடக் கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 1,179.7 மி.ரூ. ஆகும். இரண்டு ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய இக்கருத்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி பெறுமதிசேர் வரி நீங்கலாக 850 மி.ரூ. ஆகும். கருத்திட்டம் பூர்த்தியடைந்ததும் சேர்த்துக்கொள்ளப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை 160 தொடக்கம் ஆண்டொன்றுக்கு 10 மாணாக்கர்கள் வீதம் 4 ஆண்டுகளினுள் 40 மாணாக்கர்களினால் அதிகரித்து வருடாந்தம் சேர்த்துக்கொள்ளப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை 200 வரை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திற்கு 2019 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியாகும்போது 299.4 மி.ரூ. கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நிலக்கீழ் பதிகால் (Piles) அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருகிறது.

### 2. சப்ரகமுவ மற்றும் மொரட்டுவைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களை நிறுவுதல்

மருத்துவத் துறையில் கற்பதற்கு காணப்படும் உயர் கேள்வியை நிறைவுசெய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதுடன், அதன் ஒரு பெறுபேறாக 2018 வரவுசெலவுத்திட்டம் மூலம் சப்ரகமுவ, மொரட்டுவை பல்கலைக்கழகங்களுக்கு மருத்துவ பீடங்களை நிறுவ முன்மொழியப்பட்டது.

- **சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை நிர்மாணித்தல்**

அதன் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டில் சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீட நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டதுடன், 2019 சனவரி மாதத்தில் 75 மாணாக்கர்களைக்கொண்ட முதலாவது மாணாக்கர் அணி கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தது. மூன்று கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் முதலாம் மற்றும் மூன்றாம் கட்டங்கள் உள்ளூர் நிதிஒதுக்கீடுகளின் கீழ் நிர்மாணிக்கப்படுவதுடன், அதன் இரண்டாம் கட்டம் சவூதி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்படவுள்ளது. முதலாம் கட்டத்தின் கீழ் 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கு 86 மி.ரூ. நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்தின் கீழ் சவூதி அபிவிருத்தி நிதியத்தினால் நிதியளிப்புச் செய்வதற்கு 2019.09.18 ஆந் திகதி கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- **மொரட்டுவைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை நிர்மாணித்தல்**

குவைட் அபிவிருத்தி நிதியத்திலிந்து பெறப்பட்ட கடன் தொகையைக் கொண்டு இப்பீடத்தை நிர்மாணிப்பதற்கு தற்போது வெளிநாட்டு வளத் திணைக்களம் கடன் ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறது.

### 3.ருஹுணு பல்கலைக்கழக கடல்சார் கற்கைகள் கேந்திரமொன்றை ஏற்படுத்துதல்

2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவொன்றாக அனுமதிக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் மொத்தக் கிரயம் 943 மி.ரூ. என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டுக்கு 125 மி.ரூ. தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் ருஹுணு பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு கடல்சார் பொறியியல், கப்பற்றுறை கட்டுமான கலைநுட்பம் என்ற பாடநெறிகளுக்கான வசதிகளை வழங்குதல், படகு கட்டுதல் பணிகளுக்கான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்தி வசதிகளையும் 'ஏற்பாடுசெய்தல், குறித்த கற்கை நடவடிக்கைகளுக்கு மாணாக்கர்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், பல்கலைக்கழகத்திற்கு மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்ளல் 100 பேர் அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் 67.5 மி.ரூ. நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளது.

**4. ருஹுணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கராபிட்டிய போதனா மருத்துவமனையில் பேராசிரியர்கள் அலகொன்றை ஏற்படுத்துதல்**

2018 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவொன்றாக அனுமதிக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் மொத்தக் கிரயம் 1,300 மி.ரூ. என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டுக்கு 50 மி.ரூ. தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவக் கல்வித் துறையில் பட்டப்பின்படிப்பு கல்வி வசதிகளை முன்னேற்றுதல், கற்கை நடவடிக்கைகளுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், சுகாதாரத் துறை உட்கட்டமைப்பு வசதிகள், ஆய்வுகூடங்கள் என்பவற்றுடன் பௌதிக வள அபிவிருத்தி முதலிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

**5. கொழும்புப் பல்கலைக்கழக விவசாயத் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்திற்கு உதவிகளை வழங்குதல்**

மொத்தக் கிரயம் 65 மி.ரூ. என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இக்கருத்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டிற்காக 50 மி.ரூ. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் அம்பாந்தோட்டை நகரை மையமாகக்கொண்டு விவசாயப் புத்தாக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், கல்விசார் வசதிகளை வழங்குதல், அதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல் முதலியன மேற்கொள்ளப்படுகின்றன. 2019 இறுதிப் பகுதியளவில் இக்கருத்திட்டத்திற்கு 38 மி.ரூ. நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**6. சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தை நிறுவுதல்**

2018 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் முன்வைக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 250 மி.ரூ. என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டுக்கு 10 மி.ரூ. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருத்துவ சேவையில் பட்டப்பின்படிப்பைத் தொடர்பவர்களுக்கு அவசியமான ஆராய்ச்சி வசதிகளையும், பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல் முதலியவற்றுடன் சித்த மருத்துவவியல், யூனானி மருத்துவவியல் ஆகியன தொடர்பான சிறப்பறிவுள்ள ஆயுர்வேத மருத்துவர்களை உருவாக்குவதற்கு பங்களிப்பு நல்குதல் இந்நிறுவனத்தின் குறிக்கோள்களில் அடங்கும். தற்போது இந்நிறுவனத்தை நிறுவுவதற்காக பொரளை ஆயுர்வேத மருத்துவமனையின் ஐந்தாம் மாடி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**7. உயர்கல்விக்கான சுயாதீன தர உத்தரவாத மற்றும் தர உறுதிப்பாட்டுப் பொறிமுறையொன்றை ஏற்படுத்தல்**

உயர்கல்விக்கு பேண்தகு தர உத்தரவாத மற்றும் தர உறுதிப்பாட்டுப் பொறிமுறையொன்று இல்லாமை இலங்கையின் அரச மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வித் துறையின் முன்னேற்றத்தில் பாரிய தாக்க ஏற்படுத்தியுள்ளது. அரச சார்பற்ற உயர்கல்வி முறைமையின் வளர்ச்சிக்கு இக்குறைபாடு பெருமளவு தாக்கம் செலுத்தியிருப்பதுடன், இலங்கை பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக உயர்கல்வித் துறையின் கேந்திரமொன்றாக வெளிப்படாமைக்கும் அது காரணமாக அமைந்துள்ளது. இப்பிரச்சினைக்குரிய ஒரு தீர்வாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் பங்களிப்புடன் உயர்கல்விக்கு புதிய சுயாதீன தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டு அதிகாரசபையொன்றை நிறுவுவதற்கு உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதுடன், 2018 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவொன்றாகவும் அது முன்வைக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக்கு 10 மி.ரூ. நிதி ஒதுக்கீடு இதற்காக மேற்கொள்ளப்பட்டது.

## 02. அத்தியாயம் - முன்னேற்றமும் தொலைநோக்கும்

1 அனைத்துத் தகுதிகளையும் கொண்ட மாணாக்கர்களுக்கு பட்டம் பெறும் மட்டம் வரை தொடர்ச்சியாக உயர்கல்வியை வழங்குதல்.

2 பட்டதாரிகளின் மிகச் சிறந்த வேலைவாய்ப்புக்காக உயர்கல்வியின் பண்புத்தரத்தையும் இயைபுடைமையையும் முன்னேற்றுதல்.

3 தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக புத்தாக்கத்தை ஊக்குவித்தல், தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல், தொழில்முயற்சியாண்மை, ஆராய்ச்சி அனுகூலங்களை வர்த்தகமயமாக்குதல், அறிவைப் பரப்பீடுசெய்தல் (சுபீட்சத்தின் குறிகாட்டிகளின் 06 ஆம் அத்தியாயம்)

4 உயர்கல்வி முறைமையின் வினைத்திறனையும் பயன்கூர் தன்மையையும் முன்னேற்றுதல்.

5 உயர்கல்வியை சர்வதேசமயப்படுத்துதல்.

**2025 ஆம் ஆண்டு வரை நடுத்தர கால உயர்கல்வி நுழைவுகளை விரிவுபடுத்துவதற்கான இலக்குகள்**

| முக்கிய அபிவிருத்தி அணுகுமுறை | இலக்கிட்ட உயர்கல்வி வாய்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| தேசிய பல்கலைக்கழக முறைமையின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை 30,000 தொடக்கம் 40,000 வரை அதிகரித்தல். | 40,000 |
| தொழிற்சந்தையை இலக்கிட்ட தொழில் திசைமுகப்படுத்திய வார இறுதி சான்றிதழ்.'. டிப்ளோமா பாடநெறிகளை அறிமுகப்படுத்தல். (ஆகக்குறைந்தது ஒரு பல்கலைக்கழகத்திற்கு 1,500 மாணாக்கர்கள்). | 30,000 |
| உத்தேச 10 மாவட்டப் பல்கலைக்கழகங்களையும் தற்போது பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டிராத மாவட்டங்களில் நிறுவுதல். | 15,000 |
| ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு ஒன்று வீதம் தெரிவுசெய்யப்பட்ட 300 மஹிந்தோதய ஆய்வுகூடங்களில் மாலை நேர பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் (ஒரு ஆய்வுகூடத்திற்கு 100 மாணாக்கர்கள் வீதம்). | 30,000 |
| இலாமீட்டாத குறிக்கோளைக் கொண்ட பட்டயம்பெற்ற பல்கலைக்கழகங்களை நிறுவுதலின் கீழ் மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். | 30,000 |
| அரச சார்பற்ற பல்கலைக்கழக முறைமையை மேலும் தரப்படுத்தி விஸ்தரித்தல். | 20,000 |
| தேசிய உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவக முறைமையை (ளுடுஜயுவுநு) பட்டயம்பெற்ற ஒரு பல்கலைக்கழகமாக தரமுயர்த்துதல். | 15,000 |
| தியத்தலாவ புதிய விசேட தேசிய பல்கலைக்கழகத்தை நிறுவுதல். | 120 |
| தேசிய வனவள சுற்றாடல் கல்வி மற்றும் சுற்றாடல் பேணல் பற்றிய பட்டயம்பெற்ற பல்கலைக்கழகத்தை நிறுவுதல் | 120 |
| தேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உயிரினத்தொகுதி தொழில்நுட்ப பட்டயம்பெற்ற பல்கலைக்கழகத்தை நிறுவுதல். | 300 |
| அம்பாந்தோட்டை மற்றும் சீத்தாவக்க தேசிய மேம்பட்ட தொழில்நுட்பக் கல்விக்கான பட்டயம்பெற்ற பல்கலைக்கழகம். | 1,500 |
| மாணாக்கர்களுக்கான வட்டியில்லாத கடன் திட்டத்தின் கீழ் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களின் நுழைவுக்கான வாய்ப்புகளை விஸ்தரித்தல் (5,000 முதல் 15,000 வரை). | 15,000 |
| **மொத்தம்** | **197,040** |

ஒப்பம்: **அநுர திசாநாயக்க**
செயலாளர்
(பிரதான கணக்கீட்டு அலுவலர)
உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு

திகதி: 26.06.2020

## 03. அத்தியாயம் - 2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முழுதும் அளாவிய நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூ.)

| வரவுசெலவுத்திட்டம் 2019 | | குறிப்பு | உள்ளபடியான 2019 | உள்ளபடியான 2018 |
|---|---|---|---|---|
| - | **வருமானங்களின் பெறுவனவுகள்** | | - | - |
| - | வருமான வரி | 1 | - | - |
| - | உள்ளுர்ப் பண்டங்கள், சேவைகள் மீதான வரி | 2 | - | - |
| - | சர்வதேச வர்த்தம் மீதான | 3 | - | - |
| - | வரியல்லாத வருமானங்களும் பிறவும் | 4 | - | - |
| - | **மொத்த வருமானங்களின் பெறுவனவுகள்** (அ) | | - | - |
| - | வருமானமல்லாத பெறுவனவுகள் | | | |
| - | திறைசேரிக் கட்டுநிதி | | 7,743,935,902 | 7,826,691,658 |
| - | வைப்புக்கள் | | 40,111,693 | 132,990,765 |
| - | முற்பணக் கணக்கு | | 5,391,267 | 4,220,704 |
| - | பிற பெறுவனவுகள் | | | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுவனவுகள் (ஆ)** | | **7,789,438,862** | **7,963,903,126** |
| - | **மொத்த வருமான பெறுவனவுகளும் மொத்த வருமானமல்லாத பெறுவனவுகளும் (இ)= (அ) + (ஆ)** | | **7,789,438,862** | **7,963,903,126** |
| | **கழிக்கப்பட்டது :** செலவினங்கள் | | | |
| - | **மீண்டெழும் செலவினங்கள்** | | | |
| 81,400,000 | சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கான நன்மைகள் | 5 | 77,229,547 | 89,556,201 |
| 94,594,000 | பிற பண்டங்களும் சேவைகளும் | 6 | 89,085,823 | 101,026,552 |
| 1,813,794,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 1,611,738,931 | 1,316,833,507 |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | 0 | 0 |
| 212,000 | பிற மீண்டெழும் செலவினங்கள் | 9 | 211,284 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| **1,990,000,000** | **மொத்த மீண்டெழும் செலவினங்கள் (ஈ)** | | **1,778,265,585** | **1,507,416,260** |
| | **மூலதனச் செலவினம்** | | | |
| 25,100,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் முன்னேற்றமும் | **10** | 25,100,000 | 6,593,503 |
| 14,633,871,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்கள் | **11** | 10,698,801,469 | 7,967,846,061 |
| 1,887,000,000 | மூலதன மாற்றல்கள் | **12** | 1,135,322,199 | 878,365,000 |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்ளல்கள் | **13** | 0 | 0 |
| 354,976,000 | ஆற்றல் விருத்தி | **14** | 307,519,886 | 615,569,629 |
| 841,073,000 | பிற மூலதனச் செலவுகள் | **15** | 736,738,306 | 868,254,750 |
| **17,742,020,000** | மொத்த மூலதனச் செலவுகள் (உ) | | **12,903,481,860** | **10,336,628,944** |
| | பிரதான பேரேட்டுச் செலவுகள் (ஊ) | | **95,302,268** | **261,230,855** |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 86,098,370 | 253,503,446 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 9,167,840 | 7,499,236 |
| | பிற திணைக்களங்களுக்கான கொடுப்பனவுகள் | | | |
| | **மீள் கொடுப்பனவுகள்** | | 36,059 | 228,174 |
| | **மொத்தச் செலவினம் (ஈ+உ+ஊ)** | | **14,777,049,713** | **12,105,276,059** |
| **-** | **2019 டிசம்பர் 31 இலுள்ளவாறு கட்டுநிதி மீதி ஏ=(இ)-(எ)** | | **-6,987,610,850** | **-4,141,372,932** |

*ஏசிஏ-பீ*

## 3.2. நிதி நிலைமை பற்றிய கூற்று

**2019.12.31 அன்றுள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று**

| | | உள்ளபடியான | |
|---|---|---|---|
| | குறிப்பு | **2019** *(ரூ.)* | **2018** *(ரூ.)* |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | - |
| | | | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் | ஏசிஏ-6 | 1,596,436,528 | 8,084,450,764 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசிஏ-5/5(ஏ) | 262,813,353 | 16,573,592 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | ஏசிஏ-3 | 2,497,539 | 3,375,868 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,861,747,420** | **8,104,400,224** |
| **தேறிய சொத்துக்கள்/உரிமைமுதல்** | | | |
| தேறிய சொத்துக்கள் | | -225,547,756 | -273,732,421 |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், சாதனங்களின் ஒதுக்கு | | 1,596,436,528 | 8,084,450,764 |
| வாடகை மற்றும் வேலை முற்பணங்களின் ஒதுக்கு | ஏசிஏ-5(பி) | 244,041,772 | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசிஏ-4 | 244,319,337 | 290,306,013 |
| கட்டுநிதி மீதி | ஏசிஏ-3 | 2,497,539 | 3,375,868 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,861,747,420** | **8,104,400,224** |

* பிரதான கணக்கீட்டு அலுவலரினால் கையொப்பமிடப்பட்ட 2019.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமை பற்றிய கூற்று பின்னிணைப்பு 05 இல் உள்ளடங்கும்.

*ஏசிஏ-சி*

## 3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

**2019.12.31 அன்று முடிவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று**

| | உள்ளபடியான<br>2019<br>(ரூ.) | 2018<br>(ரூ.) |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | _ |
| மொத்த வரி பெறுவனவுகள் | - | - |
| கட்டணங்கள், மிகைக் கட்டணங்கள், தண்டங்கள், அனுமதிப்பத்திரங்கள் | - | - |
| இலாபங்கள் | - | - |
| வருமானம் அல்லாத பெறுவனவுகள் | - | |
| வேறு திணைக்களங்கள்/அமைச்சுக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானங்கள் | | |
| கட்டுநிதிப் பெறுவனவுகள் | 7,738,608,056 | 7,822,016,063 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (அ) | **7,738,608,056** | **7,822,016,063** |
| **கழிக்கப்பட்டது : காசு செலவீடுகள்** | | |
| ஆளுக்குரிய படிகளும் தொழிற்பாட்டுச் செலவுகளும் | 156,176,646 | 180,493,776 |
| மானியங்களும் மாற்றல்களும் | 37,050,931 | 17,333,158 |
| வேறு செலவுத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு | 18,892,134 | 10,082,215 |
| திறைசேரிக்கு செலுத்தித் தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 2,497,539 | 3,375,868 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)** | **214,617,250** | **211,285,017** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ) - (ஆ)** | **7,523,990,805** | **7,610,731,046** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபங்கள் | - | - |
| உரிமை நீக்கத்திற்கான ஏற்பாடுகளும் பௌதிகச் சொத்துக்களின் விற்பனவும் | - | |
| உப கடன் அறவீடுகள் | - | - |
| முற்பணங்களின் அறவீடுகள் | 655,983 | 273,798 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (ஈ)** | **655,983** | **273,798** |
| **கழிக்கப்பட்டது : காசு செலவீடுகள்** | | |
| பௌதிக சொத்துக்கள் நிர்மாணிப்புகள் அல்லது கொள்வனவுகள் மற்றும் வேறு முதலீடுகளின் அறவீடுகள் | 2,027,181,926 | 3,093,028,349 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 9,167,840 | 7,499,236 |

| | | |
|---|---|---|
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)** | **2,036,349,766** | **3,100,527,585** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) = (ஈ) - (உ)** | **2,035,693,783)** | **3,100,253,787)** |
| **நடவடிக்கைகளிலிருந்தும் முதலீடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ) = (இ) - (ஊ)** | **5,488,297,022** | **4,510,477,259** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூரக் கடன் பெறுவனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள் | - | - |
| கொடை பெறுவனவுகள் | - | - |
| வைப்புக்கள் பெறல்கள் | 40,111,693 | 132,990,765 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்த காசுப் பாய்ச்சல் (ஏ)** | **40,111,693** | **132,990,765** |
| **கழிக்கப்பட்டது : காசு செலவீடுகள்** | | |
| உள்ளூர் கடன் மீளளிப்புகள் | 5,442,310,346 | 4,389,964,578 |
| வெளிநாட்டுக் கடன் மீளளிப்புகள் | - | - |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 86,098,370 | 253,503,446 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஐ)** | **5,528,408,716** | **4,643,468,024** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் (ஒ) = (ஏ) – (ஐ)** | **(5,488,297,022)** | **(4,510,477,259)** |
| **காசுகளின் தேறிய மாற்றல்கள் (ஓ) = (எ) – (ஒ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 அன்றுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறான இறுதி காசு மீதி** | **-** | **-** |

### 3.4 ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதிகளை உபயோகப்படுத்துவதிலான செயலாற்றுகை

| நிதி ஒதுக்கீட்டு வகை | ஏற்பாடுசெய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் | | உள்ளபடியான செலவு | உபயோகிக்கப்பட்ட நிதிஒதுக்கீடுகள், பூர்த்திசெய்யப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டு அளவின் சதவீதமாக. |
|---|---|---|---|---|
| | ஆரம்ப நிதி ஒதுக்கீடு | இறுதி நிதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 1,227,000,000 | 1,990,000,000 | 1,778,265,585 | 89% |
| மூலதன | 16,305,000,000 | 17,742,020,000 | 12,903,481,860, | 73% |

## 3.5 நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடுவதிலான செயலாற்றுகை

| சொத்துக் குறியீடு | குறியீட்டின் விபரம் | 2019.12.31 அன்றுள்ளவாறு பொருளிருப்பு அளவை அறிக்கையின்படி மீதி | 2019.12.31 அன்றுள்ளவாறு நிதிநிலைமை அறிக்கையின்படி மீதி | முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடுதல் |
|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 76,922,000.00 | 76,922,000.00 | 100% |
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 374,861,933.99 | 374,861,933.99 | 100% |
| 9153 | காணிகள் | 794,700,000.00 | 794,700,000.00 | 100% |
| 9154 | அருவச் சொத்துக்கள் | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - |
| 9160 | முடிவுறா வேலைகள் | 349,952,593.95 | 349,952,593.95 | 100% |
| 9180 | குத்தகைக்கு வழங்கிய சொத்துக்கள் | - | - | - |

### 3.6. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

இவ்வறிக்கையை பின்னிணைப்பு 06 இல் காண்க.

## 04. அத்தியாயம் - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலான)

| விசேட குறிகாட்டி | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் (expected output) சதவீதமாக (%)உள்ளபடியான வெளியீடு (true output) | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| பட்டதாரி வேலைவாய்ப்பு | _ | _ | 60% |
| தேசிய உயர்கல்வி முறைமைக்கு மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்வதிலான அதிகரிப்பு. | 2019 ஆம் ஆண்டுக்குரியதாக பல்கலைக்கழக முறைமைக்கு மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான கணக்கெடுப்புகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. | _ | |

## 05 அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதிலான செயலாற்றுகை

### 5.1 அடையாளம் காணப்பட்ட உரிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு/நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிக் குறிகாட்டி | இதுவரை வெற்றிபெறுவதற்கான முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| 4.3 2030 ஆம் ஆண்டளவில் அனைத்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் பண்புத்தர ரீதியில் உயர்ந்த மற்றும் குறைந்த பணத் தொகைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய பல்கலைக்கழகக் கல்வி அடங்கலாக தொழில்நுட்ப, தொழில் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வியைப் | • வட்டியில்லா மாணாக்கர்களின் கடன் திட்டத்தை அமுல்படுத்தல்.<br>• தேசிய உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE) மூலம் உயர்கல்விக்கான வாய்ப்புகளை வழங்குதல். | சேர்த்துக் கொள்ளப் படும் மாணாக்கர் களின் எண்ணிக் கையிலான அதிகரிப்பு. | 41.38%<br>10.4% | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல். | • பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் (UGC) இயங்கும் தேசிய பல்கலைக் கழகங்களுக்கு மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்ளல்.<br>• இலங்கை பிக்கு பல்கலைக் கழகத்திற்கு மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்ளல்.<br>• இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக் கழகத்திற்கு மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்ளல். | | 18.5% | 60% | 147% |
| 4.5 2030 ஆம் ஆண்டளவில்-<br>I. கல்வியில் பால்நிலை சமத்துவத்தின் அடிப்படையிலான பாரபட்சங்களை ஒழித்துக்கட்டல்.<br>II. கல்வியில் அனைத்து மட்டங்களிலும் நுழைவுக்கான வாய்ப்பை உறுதிப்படுத்தல்.<br>III. வலதுகுறைந்த நபர்களுக்கும், சுதேசிகளுக்கும், ஆபத்தை எதிர்நோக்கக்கூடிய பிள்ளைகளுக்கும் தொழிற்பயிற்சியை பெற்றுக்கொள்ள வாய்ப்பளித்தல். | • இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>• இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>• இவ்வமைச்சின் நோக்கெல்லைக்கு உட்படாதது. | | | | 100%<br>100%<br>- |
| 4.7 2030 ஆம் ஆண்டளவில் கல்வி கற்கும் அனைவரும் பேண்தகு அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான அறிவையும் ஆற்றல்களையும் பெற்றிருத்தல், அதற்கு பேண்தகு அபிவிருத்தி பற்றிய கல்வி மற்றும் பேண்தகு வாழ்க்கைப் பாணிகள், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் வன்முறையற்ற கலாசாரத்தை ஊக்குவித்தல், உலக பிரஜாவுரிமை மற்றும் கலாசார பன்மைத்துவத்தை மதிப்பிடுதல், பேண்தகு அபிவிருத்திக்கு கலாசார ரீதியாக பங்களிப்புச்செய்தல் என்பன உள்ளடங்கும். | - | - | - | - | - |

## 5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எய்துவதிலான வெற்றிகளும் சவால்களும்

**பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) எய்துதல் சம்பந்தமாக.**

| | |
|---|---|
| 1. கல்வியில் பால்நிலை சமத்துவத்தின் அடிப்படையிலான பாரபட்சங்களை ஒழித்துக்கட்டல். | உயர்கல்வி வாய்ப்புகளுக்காக தெரிவுசெய்தல் Z - புள்ளியின் மீது தங்கியுள்ளது. அது பால்நிலை சமத்துவத்தின் மீதல்ல. |
| 2. கல்வியின் அனைத்து மட்டங்களிலும் நுழைவுக்கான வாய்ப்பை உறுதிப்படுத்தல். | உயர்கல்வியின் ஒவ்வொரு மட்டத்தையும் பொருள்கோடல் செய்து அதில் நுழைவதற்குத் தேவைப்படும் தகுதிகளையும் குறிப்பிட்டு இலங்கை தகுதிப் பணிச்சட்டத்தின் (SLQF) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி தகுதிகளைப் பூர்த்திசெய்யும் ஆளெவருக்கும் பல்வேறு மட்டங்களில் நுழைவுக்கான வாய்ப்புகள் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அமைச்சின் கீழிருந்த அனைத்து கல்வி நிறுவனங்களும் இந்த பணிச்சட்டத்துடன் இயைபுறுக்கப்பட்டுள்ளன. |
| 3. விசேட தேவையுடையோருக்கு, உண்ணாட்டவர்களுக்கு, ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய சிறுவர்களுக்கு – தொழிற்பயிற்சி பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தல். | இவ்வமைச்சின் நோக்கெல்லைக்கு உட்படவில்லை. |

## 06 – மனித வள பண்புக் கூறுகள்

### 6.1 பதவியணி முகாமை

| | அனுமதித்த பதவியணியினர் எண்ணிக்கை | தற்போதுள்ள பதவியணியினர் எண்ணிக்கை | பதவி வெற்றிடங்கள்/ (மிகை)** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 28 | 23 | 05 |
| மூன்றாம்நிலை | 06 | 03 | 03 |
| இரண்டாம்நிலை | 132 | 68 | 64 |
| முதனிலை | 45 | 40 | 05 |

6.2 ** மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவியணியினர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக, 36 பட்டதாரிப் பயிலுநர்கள் இவ்வமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில், தற்போதுள்ள உள்ளபடியான பதவி வெற்றிடங்களின் அளவு 41 ஆகும். இவ்வாறு பதவி வெற்றிடங்கள் காணப்படுவதன் காரணமாக அலுவலர் ஒருவருக்கு பல்வேறு விடயங்களின் பணிகளை ஆற்ற நேரிடுவதனால், அமைச்சின் எதிர்பார்த்த நோக்கங்களை வினைத்திறனுடனும் பயன்கூர் அடிப்படையிலும் நிறைவேற்றுவது சிரமமானதாக உள்ளது. ஆகையால், குறித்த பதவி வெற்றிடங்களை நிரப்புமாறு அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றப் பட்ட பதவியணி யினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலப்பகுதி | முழுதும் அளாவிய முதலீடு (ரூ.'000) | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | இறுதி வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| வெளிநாட்டு நிதியீட்டத்தின் பேரில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம். | 1 | 2 நாள்கள் | 13 | - | உள்நாட்டு | வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் நிதிசார் அலுவல்களை மேற்கொள்ளல் சம்பந்தமாகவும் இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் சம்பந்தமாகவும் அறிவைப் பெறுதல். |
| குழு இயல்திறன் அபிவிருத்தியும் தலைமைத்துவப் பயிற்சியும் - இரு நாள் செயலமர்வு | 83 | 2 நாள்கள் | 747 | - | உள்நாட்டு | பணியாள் தொகுதியின் தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் முன்னேற்றுதல். |
| தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் பற்றி அரச அலுவலர்களை அறிவுறுத்துதல். | 2 | 2 நாள்கள் | - | - | உள்நாட்டு | அரசாங்க அலுவலர்களின் விடுமுறை, சம்பளம், கொடுப்பனவுகள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து அறிவுறுத்தப்படுதல். |
| பொதுத்துறை ஒழுக்காற்று நடவடிக்கைமுறை | 2 | 2 நாள்கள் | - | - | உள்நாட்டு | சரியான முறையில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு வழிகாட்டுதலும் ஒழுக்காற்று விசாரணைகள் பற்றி அறிவுறுத்தப்படுதலும். |
| அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகள் | 4 | 1 நாள் | - | - | உள்நாட்டு | ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கை முறைகளைத் தயாரித்தல், பதவி உயர்வுக்கான நடவடிக்கை முறைகளைத் தயாரித்தல், விடுவிப்புகள், பணிநீக்கம் செய்தல் முதலியன குறித்து அறிவுறுத்தப்படுதல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெறுகை மற்றும் விலைமனு மதிப்பீடுகளை அறிமுகப்படுத்தலும் விலைமனு மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தலும். | 1 | 3 நாள்கள் | 12 | - | உள்நாட்டு | பெறுகைச் செயன்முறையை இனங்காணலும் விலைமனு மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்கும் சரியான முறையை நாளாந்த கடமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு ஏற்புடைத்தாக்கிக் கொள்ளலும். |
| தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் பற்றி அரசாங்க அலுவலர்களை அறிவுறுத்துதல். | 1 | 2 நாள்கள் | - | - | உள்நாட்டு | மொழிக் கொள்கை, ஒழுக்காற்று, இழப்பீடுகள் மற்றும் கொடுப்பனவுகள், சேவைப் பிரமாணக்குறிப்புகள், ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகள் என்பவற்றைத் தயாரித்தல் பற்றி அறிவுறுத்தப்படுதல். |
| நிறுவனப் பெறுகை மற்றும் திட்டமிடல் வலைமைப்பு முகாமை | 1 | 1 நாள் | 4 | - | உள்நாட்டு | அமைச்சின் கொள்வனவுகள் மற்றும் வழங்கல் நடவடிக்கைகளின் போது நவீன முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்துவதன் ஊடாக வினைத்திறனை மேம்படுத்துதல். |
| திண்ம கழிவுப்பொருள் முகாமை | 1 | 1 நாள் | 8 | - | உள்நாட்டு | கட்டிடங்களைப் புதிதாக நிர்மாணிக்கும்போது திண்ம கழிவுப்பொருள் முகாமைக்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| புலமைச்சொத்து உரித்துக்களின் முக்கியத்துவம் | 1 | 1 நாள் | - | - | உள்நாட்டு | புலமைச்சொத்து உரித்துக்களின் முக்கியத்துவம் சம்பந்தமாக அரச அலுவலர்களை அறிவுறுத்துதல். |
| அதிசிறந்த ஆண்டறிக்கையும் கணக்கீட்டு விருதுப் போட்டியும் | 5 | 2 நாள்கள் | 20 | - | உள்நாட்டு | சரியான வடிவத்திற்கு ஏற்ப ஆண்டறிக்கையைத் தயாரித்தல் சம்பந்தமாக அறிவுறுத்தப்படுதல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒழுக்காற்று நடவடிக்கைமுறை | 1 | 2 நாள்கள் | 8.5 | - | உள்நாட்டு | சரியாக, ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு வழிகாட்டுதலும் ஒழுக்காற்று விசாரணைகள் பற்றிய விழிப்பூட்டலும். |
| போக்குவரத்து முகாமை | 1 | 2 நாள்கள் | 8.5 | - | உள்நாட்டு | நிறுவனத்தின் வாகனங்களை உரிய முறையில் பராமரித்தல், போக்குவரத்துத் தேவைகளை உரிய முறையில் முகாமை செய்தல். |
| ஒழுக்காற்று நடவடிக்கைமுறை | 1 | 2 நாள்கள் | 8.5 | - | உள்நாட்டு | சரியான முறையில், ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு வழிகாட்டுதலும் ஒழுக்காற்று விசாரணைகள் பற்றிய விழிப்பூட்டலும். |

* கடமை அலுவல்களை விளைத்திறனுடனும் பயன்கூர் விதத்திலும் நிறைவேற்றுவதற்கு அலுவலர்களின் அறிவிலும் திறன்களிலும் வளர்ச்சியை ஏற்படுத்துவது ஓர் அத்தியாவசிய விடயமாகும். அலுவலர்களை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துவதன் மூலம் புதிய விடயங்கள் சம்பந்தமான அறிவு வளர்வதுடன், விளைத்திறனான ஒரு சேவை அதன்மூலம் நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 07 .அத்தியாயம் - ஒத்திசைவு அறிக்கை

| இல. | ஏற்புடைத்தாக்கிக் கொள்ளப்படவேண்டிய தேவை | ஒத்திசைவு நிலை (ஒத்திசை வானது/ ஒத்திசை வற்றது) | ஒத்திசைவற்றதெனில், அதற்கான சுருக்க விளக்கம் | ஒத்திசைவின்மையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்கு முன்மொழியப்படும் சரியான தீர்மானங்கள், நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/ கணக்குகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | _ | _ |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | ஒத்திசைவானது | _ | _ |
| 1.2 | அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு | ஒத்திசைவானது | _ | _ |
| 1.3 | வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | _ | _ | _ |
| 1.4 | களஞ்சியசாலை முற்பணக் கணக்கு | _ | _ | _ |
| 1.5 | விசேட முற்பணக் கணக்குகள் | _ | _ | _ |
| 1.6 | பிற | _ | _ | _ |
| **2** | **புத்தகங்களையும் பதிவேடுகளையும் பராமரித்தல் (நி.பி.445)** | | _ | _ |
| 2.1 | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 2.2 | ஆளுக்குரிய வேதனங்களின் பதிவேடுகள்/ ஆளுக்குரிய வேதனங்களின் அட்டைகளை இற்றைப்படுத்தி பராமரித்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 2.3 | கணக்காய்வு ஐயவினாப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புகளையும் (CIGAS) தயாரித்து உரிய தினத்தில் பொதுத் திறைசேரியில் சமர்ப்பித்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 2.6 | காசோலைகள், காசுக் கட்டளைகள் முதலியவற்றின் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 2.7 | பொருட் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | ஒத்திசைவானது | _ | _ |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.8 | இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 2.9 | சேத நட்டங்களின் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 2.10 | பொறுப்புக்களின் பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 2.11 | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேட்டை (GA–N20) இற்றைப்படுத்தி பராமரித்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| **3** | **நிதிக் கட்டுப்பாட்டிற்காகக் கடமைகளைக் கையளித்தல் (நி.ஒ. 135)** | | _ | _ |
| 3.1 | நிதி அதிகாரங்களை நிறுவனத்தினுள் அதிகார ஒப்படைப்பு செய்திருத்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 3.2 | நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல் பற்றி நிறுவனத்தினுள் அறிவுறுத்தியிருத்தல் | ஒத்திசைவானது | _ | _ |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை அலுவலர்களின் ஊடாக அனுமதிக்கப்படுகின்றவாறு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 3.4 | 2014.05.11 ஆந் திகதிய, 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்க சம்பளப் பட்டியல் மென்பொருள் பக்கேஜை உபயோகிக்கும்போது கணக்காளரொருவரின் கட்டுப்பாட்டின் கீழ் அதனை நிறைவேற்றுதல். | ஒத்திசைவானது | _ | _ |
| **4** | **வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல் | - | _ | _ |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல் | - | _ | _ |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல் | - | _ | _ |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு (NBD) உரிய தினத்தில் சமர்ப்பித்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 4.5 | வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய தினத்தில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தில் சமர்ப்பித்திருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |

| | | | | |
|---|---|---|---|---|
| **5** | **கணக்காய்வு ஐயவினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்பட்டுள்ள திகதிக்கு அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் அளித்திருத்தல். | ஒத்திசைவானது | | |
| **6** | **உள்ளக கணக்காய்வு** | - | _ | _ |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1-2019 இன்படி, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 6.2 | ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்துள் பதில் அளித்திருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம், அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 6.4 | நிதி ஒழுங்குவிதி 134(3) இன் பிரகாரம், அனைத்து உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கைகளின் பிரதிகளும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| **7** | **கணக்காய்வும் முகாமைத்துவக் குழுக்களும்** | | _ | _ |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இன்பிரகாரம், ஆகக்குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களேனும் குறித்த ஆண்டினுள் நடாத்தப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | _ | _ |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தின்படி, சொத்துக்களின் கொள்ளல்களும் கையுதிர்ப்புகளும் பற்றிய தகவல்களை கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 8.2 | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் | ஒத்திசைவானது | _ | _ |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயத்தின் பிரகாரம், குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொருத்தமான அலுவலரொருவரை நியமித்து குறித்த அலுவலர் பற்றிய தகவல்களை கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல். | | | |
| 8.3 | பொது நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் பிரகாரம், பொருள் அளவைகளை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய தினத்தன்று கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்திருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 8.4 | வருடாந்த பொருள் அளவையின் மூலம் கண்டறியப்படும் மிகை, குறை மற்றும் வேறு சிபார்சுகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்துள் மேற்கொண்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 8.5 | தள்ளுப்படி செய்யப்பட்ட இருப்புப் பொருள்களை முடிபு செய்தல் (நி.ஒ. 772 இன் பிரகாரம் மேற்கொள்ளல்.) | ஒத்திசைவானது | _ | _ |
| **9** | **வாகனங்களின் முகாமைத்துவம்** | | _ | _ |
| 9.1 | குழாம் வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட விபரக் குறிப்புகளையும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளையும் தயாரித்து உரிய தினத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 9.2 | வாகனங்கள் தள்ளுப்படி செய்யப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்தில் முடிபு செய்திருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 9.3 | வாகனங்களின் சம்பவக் குறிப்பு (லொக்) பதிவேடுகளை பராமரித்து அவற்றை இற்றைப்படுத்தி பேணி வருதல். | ஒத்திசைவானது | _ | _ |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. 103, 104, 109, 110 பிரிவுகளின் பிரகாரம் செயலாற்றியிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 9.5 | 2016.12.29 ஆந் திகதிய, 2016/30 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் நுகர்வை (தகனமடைதலை) மீளப் பரிசோதித்தல். | ஒத்திசைவானது | _ | _ |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.6 | குத்தகை கால எல்லையின் பின்னர் குத்தகை வாகனங்களின் சம்பவக் குறிப்பு (லொக்) பதிவேடுகளின் பூரண உரிமை, உரிமைமாற்றம் செய்யப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| **10** | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | _ | _ |
| 10.1 | உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொணரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றுக்களினால் கண்டறியப்பட்ட மற்றும் சீராக்கம் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயலாற்றி குறித்த மீதிகள் ஒரு மாத காலத்துள் தீர்க்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| **11** | **நிதிஒதுக்கீடுகளின் பயன்பாடு** | | _ | _ |
| 11.1 | ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளை, அவற்றின் எல்லைகளைத் தாண்டி விடாதவாறு செலவிடல். | ஒத்திசைவானது | _ | _ |
| 11.2 | நி.ஒ. 94(1) இன் பிரகாரம், ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லையைத் தாண்டாதவாறு பொறுப்புக்களுக்கு வருதல். | ஒத்திசைவானது | _ | _ |
| **12** | **அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | _ | _ |
| 12.1 | எல்லைகளுக்குள் ஒத்திசைவானதாதல். | ஒத்திசைவானது | _ | _ |
| 12.2 | நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் குறித்த காலப்பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 12.3 | ஓராண்டுக்குக் கூடுதலான காலமாக காணப்படும் நிலுவை கடன் மீதி தீர்க்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவு அற்றது | சேவையை விட்டுச் சென்றுள்ள அலுவலர்கள் இருவரதும் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவரதும் கடன் மீதிகள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தீர்க்கப்படாதிருத்தல் - சேவையை விட்டுச் சென்றிருந்த இரண்டு அலுவலர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் , ஓய்வுபெற்ற அலுவலர் மரணமடைந்துள்ளார். அவருக்கு ஓய்வூதிய பணிக்கொடையொன்று காணப்படாமையால், ஓய்வூதியத் திணைக்களம் மூலம் மரண பணிக்கொடையிலிருந்து அல்லது வேறு கொடுப்பனவுகள் மூலம் அக்கடன் மீதியைக் குறைக்குமாறு கோரி ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | _ | _ |
| 13.1 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நி.ஒ. 571 இன் பிரகாரம் செயலாற்றப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஒத்திசைவானது | _ | _ |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | _ | _ |
| 14.1 | மீளாய்வு ஆண்டு இறுதியில் காசேட்டு மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 14.2 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த உப கட்டுநிதி, குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாத காலத்துள் தீர்க்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 14.3 | நி.ஒ. 371 இன் பிரகாரம் அனுமதித்த எல்லையைத் தாண்டாதவாறு நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கின் மீதியை திறைசேரியின் ஏடுகளுடன் மாதாந்தம் இணக்கப்படுத்தல். | ஒத்திசைவானது | _ | _ |
| **15** | **வருமானக் கணக்கு** | | _ | _ |

| | | | | |
|---|---|---|---|---|
| 15.1 | உரிய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, திரட்டிய வருமானத்திலிருந்து மீளக் கொடுப்பனவு செய்யப்பட்டிருத்தல். | – | – | – |
| 15.2 | திரட்டிய வருமானங்கள், வைப்புக்கள் கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாகவே வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருத்தல். | – | – | – |
| 15.3 | நி.ஒ. 176 இன்பிரகாரம் நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | – | – | – |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | – | – |
| 16.1 | அனுமதித்த பணியாள்தொகுதி எல்லையினுள் பணியாள்தொகுதியை பராமரித்தல் | ஒத்திசைவானது | – | – |
| 16.2 | பணியாள்தொகுதியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமை நிரல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| 16.3 | 2017.09.20 ஆந் திகதிய, முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை இல. 04/2017 இன் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| **17** | **பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | | – | – |
| 17.1 | தகவலுரிமைக்கான சட்டமும் ஒழுங்குவிதிகளும் பிரகாரம் தகவல் அலுவலரொருவரை நியமித்து தகவல்களை வழங்கியதன் பதிவேடொன்றை இற்றைப்படுத்தி பராமரித்தல். | ஒத்திசைவானது | – | – |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையளத்தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் பற்றி பொதுமக்களின் கருத்துரைகளை (பாராட்டுக்கள்/ குற்றச்சாட்டுக்கள்) முன்வைப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.3 | தகவலுரிமைக்கான சட்டத்தின் 08ஆம் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஆண்டொன்றில் இரண்டு தடவைகளோ, ஆண்டொன்றில் ஒரு தடவையோ, அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| **18** | **பிரசைகள் பட்டயத்தை அமுல்படுத்துதல்** | | – | – |
| 18.1 | 2008/05 ஆம் இலக்க, 05/2018(1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கைகளின் பிரகாரம் பிரசை/ சேவைபெறுநர் பட்டயமொன்றைத் தயாரித்து அமுல்படுத்தியிருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| 18.2 | அச்சுற்றறிக்கையின் பந்தி 2.3 இன்பிரகாரம், பிரசை/சேவைபெறுநர் பட்டயத்தை உருவாக்கும், அமுல்படுத்தும் அலுவல்களை மேற்பார்வைசெய்வதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் நிறுவனங்களினால் முறைமையொன்று தயார்செய்யப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| **19** | **மனித வளத் திட்டத்தைத் தொகுத்தல்** | | – | – |
| 19.1 | 2018.01.24 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் பின்னிணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக்கொண்டு மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| 19.2 | பணியாள்தொகுதி அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சிக்கான வாய்ப்பொன்றை மேற்குறிப்பிட்ட மனிதவளத் திட்டத்தினுள் உறுதிசெய்திருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| 19.3 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 1 இல் காணப்படும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு முழு பணியாள்தொகுதிக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பந்தி 6.5 இன் பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், இயல்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்திசெய்தல், திறன் அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் பற்றிய பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |
| **20** | **கணக்காய்வுப் பந்திகளுக்கு பதில்குறிப்பு காட்டுதல்.** | | – | – |
| 20.1 | கடந்த ஆண்டுகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பந்திகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீர்செய்யப்பட்டிருத்தல். | ஒத்திசைவானது | – | – |